
திருச்சிற்றம்பலம்

ஆனந்தநடராஜர்பேரில் அற்புதக் குயிற்பண்

வண்டுப்பண் பாங்கிப்பண் முதலிய பல பண்கள்

பஜனோபகாரமான நலங்கு லாலி

பத்திபம் நாமாவளிமுதலிய பாத்துறைகள்.



இவை

சிதம்பரம் புதுத்தெருவில் வசிக்கும்

சுப்பராயர் குமாரர்

அண்ணாசாமி ஐயரவர்களால்

இயற்றி

பிரம்மவித்தியா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

CHIDAMBARAM.

விகிர்தி ௵ மிதுனரவி



உ

கணபதிதுணை.

ஸ்ரீ ஆனந்த நடராஜர் பேரில் குயிற்பண்.

எல்லார்க்குநல்லாண்டிகுயிலே என்பெருநாயகனடி
சொல்லாதுஞ்சொல்லுவண்டி குயிலே சுவபஞ்சோதியானவனடி க.
நான்மறைபாடுவதுங்குயிலே நாரணர்தேடுவதும்
வான்பெருவள்ளலேயே - குயிலே வாயாரவாழ்த்தடியோ உ.
அம்பலவாசனடி - குயிலே அம்பிகைநேசனடி
தம்பதங்கண்டவரை - குயிலே தானாகச்செய்வனடி ங.
நம்மையழைப்பாண்டி - குயிலே நற்சுகந்தருவாணடி
அம்மையப்பனடி - குயிலே அன்றெனையாண்டவண்டி ச.
ஆறுறுமானவனும் - குயிலே அதற்கப்பாலானவனுந
நீறுறுமெய்யனென்றே - குயிலே நித்தியம்போற்றடியோ ரு.
ஐயுருவானவனும் - குயிலே ஐம்பூதமானவனுந
தையலோர்பங்கனென்றே - குயிலே தனித்துநீபாடியோ சு.
தாண்டவமாடுவண்டி -குயிலே தானாகக்கூடுவனடி
பாண்டியநாட்டிலவந்த - குயிலே பார்புகழ்சித்தனடி எ.
சித்தாகுந்தேகனடி - குயிலே சிற்சபைமோகனடி
பித்தாகுஞ்செய்கையனாக் - குயிலே பிரியாதசுத்தனடி அ.
சிரவணாதிவேணுமடி - குயிலெ சின்மயமாவதற்கு
விரைவினிற்பண்ணடியோ - குயிலே விசுவமுநீயாவாய் கூ.
தத்துவசோதனையைக் - குயிலே தனித்துநீசெய்குலவையேற
றத்துவாதீதனாகி - குயிலே தழைத்துமேகிற்பாயே ய.
சாதுக்கட்கூட்டத்திலே - குயிலே சந்ததநின்றுநீயே
போதமயமாகி - குயிலே பொருந்துவாயிபபோதே யக.
தேகமிருக்கையிலே - குயிலே தேவனைக்காணவேணும்
மோகங்கணீங்கிநின்றாற் - குயிலே மோக்ஷமாமிப்போதே யஉ.
என்னதான்சொன்னாலுங் - குயிலே யெனமொழிகேளாயே
உன்னையல்லாலெனக்குக் - குயிலே உற்றார்களாரடியோ யங.
எங்கெங்கேபார்த்தாலுங் - குயிலே எகதையையல்லாம
லங்கங்கேவேறுமுண்டோ - குயிலே ஆராய்ந்துபாரடியோ ய
ஆதாரமாறையுமே - குயிலே அன்பாகப போற்றிநின்று
லாதாரமின்னதென்றே - குயிலே அறிந்துநீவாழலாமே.

முற்றும.

ஒரடிக் கும்மி.

சகிநாயகி பிரச்னோத்திரம்.

மாமதியன்னையமாமுகத்தாளுன்னை மகிழ்ந்துவணங்தவராரோடி
சேமமபாலிக்குஞ்சிற்சபைநின்றுடுஞ்செல்வரோயெந்தன்மணாளரடி. க
பாரிற்புகழ்பெருமைபடைத்தொடியேயுன்னைப்பரிந்துகலந்தவராரோடி
ஆருமறியொணாவம்பலத்தேயமரானந்தரூபமுக்தரடி. உ
பங்கயநூலொத்தசிற்றிடையாயுன்னைப்பாசமாய்ச்சேர்ந்தவராரோடி
தங்கக்கொடியுமைதன்னைப்புணர்ந்திட்டதாங்குகங்கைச்சடையரடி. ௩
தோடமிலாதநற்றேகைநல்லாயுன்னைத்தோய்ந்துமகிழ்ந்தவராரோடி
பாடற்கிசைந்துபரிசுவளித்திடும் பாராளுமிராஜபூஜ்ஜியரடி. ௪.
உவமையிலாதபெண்மாமணியேயுன்னையுகந்துமணஞ்செய்தாராரோடி
நவமெனுந்தத்துவமீதினில்வாழ்ந்திடுநாயகரென்னுயிர்நாதரடி. ௫.
வனசச்செப்பமர்வார்முலையாயுன்னைவாவென்றழைத்தவராரோடி [ரடி.
பொன்னம்பலமெனும்பொதுவினினின்றுடுமபோதத்தகரித்தோற்பித்த
தேனாமென்மொழிக்கோகிலமேயுன்னைத்தேடியாட்கொண்டவராரோடி
வானோர்தேவர்க்குவாழ்முதலாகியவான்சபைநின்றுடுமவள்ளலடி. ௭.
கற்கண்டனையசொற்காரிகையேயுன்னைகலந்துபுணர்ந்தவராரோடி ௮.
துறக்கங்களைவிட்டதழைத்தமெய்ஞ்ஞானியாய்த் தானின்றியங்குந்தற்பரண்
காரிறம்போன்றநற்கூந்தனல்லாயுன்னைக்கருதிக்கலந்தவராரோடி
காரிறவண்ணனுங்காணற்கரியவெங்கண்ணனடி மூன்றுகண்ணனடி. ௯.
முல்லையரும்பமபல்லுடையாயுன்னைமுத்தமிட்டாண்டவராரோடி
தில்லைப்பதியினிற்றுணடவஞ்செய்திடுந்திகழுறுந்தெய்வநடத்தனடி. ௰

முற்றும்.

வள்ளிபாடல்.

நாயகபிரதாபம்.

கணவனடி கணவனடி கிடைக்கரியகணவனடி
கண்டோரகடமமனதைகரைக்குநல்லகணவனடி
உண்டாற்பசிதீருமென்பாருத்தமர்களிவ்வுலகில
கண்டாற்பசிதீருமடிகணவனிடமேனிதனை
தத்தாளமுருகுங்குறிப்பறியுங்கண்ணழகும்
சீயெனறுசொல்லுமபயகரப்பேரழகும்

மாயையின்மேலூன்றிசிற்குமாமலரின்னல்லழகும்
மாதரசுபாதியோங்கும்மாவடிவச்சீரழகுங்
காணலாமேகாணலாமேகணவனிடம்போவோமானால்
காதன்மிகவுடையனடிகாக்கும்வெள்ளச்சடையனடி
பேதமொன்றுமில்லானடிபேதையற்குநல்லானடி
போதத்தலத்துள்ளானடிபோற்றுவோனாவிள்ளானடி
நல்லனடிநல்லனடிஞானசபைநல்லனடி
நத்துமன்பர்தங்களுக்கேநடித்தருளும்வல்லனடி (கணவனடி)

வேறு பண்.

தன்னநன்ன தன்னநன்ன-தனனநன்னனே
தானநனன னனநன்னநனனநன்னனே

இன்னுமமறைதேடிக்காணுவெந்தன்னதனை
யின்னுமவரக்காணேனடியென்னநான்செய்வேன் (க)
அந்தமாதியொன்றுமிலலாவுநதன்சாமிதான்
வந்துவுனைச்சேரானோடிவாதேண்டிமானே. (உ)
பஞ்சகோசநதன்னைத்தாண்டிநின்றுநாதன்
பஞ்சைபடுப்பாட்டைக்கணடுவெருவானோமானே (ங)
அத்தனென்றேமுத்தாபுகழநதன்சுத்தன்றான்
பத்தாகூழநித்தமவந்துமுத்தன்றான்றருவார் (ச)
காரணிநகண்டன்வந்துகாப்பானோவென்னை
வாரணிகொங்கைவாழவருவாண்டிபெண்ணே. (டு)

தன்னனைதானனைதானனைதானனனதனனனதானனநனனனன.

வேறுபண.

க. சின்னச்சிறுவயதிற்சிங்காரமாக
சிறநதனைநதானெநதனுயிர்நாதனடி
உ. தாணடவமாடிதானருளுகக்கூடுவெணடி
தனித்திலலைவாழுபெநதன்சாமியடி
ங. அன்பாகளெல்லோருமன்றனடைந்தாரங்கே
யவனியில்வீணாய்நானுனேனடி.
ச. துன்பங்களெலலாந்துடைத்தென்னைக்காபபனடி
துரியநடப்புரியுமெந்தன்றூயனடி
அன்பனடி அன்பனடி அன்பாகளன்பனடி
எனபருவங்கண்டெனக்கேயின்பளிக்குமின்பனடி.

பாங்கிப்பண்.

க. அத்தனிடம்போவாயோ - ஏசின்னப்பாங்கிநீ
அந்தரங்கஞ்சொல்வாயோ - ஏசின்னப்பாங்கி
உ. அம்பலத்திற்செல்லும்போதே - ஏசின்னப்பாங்கி நீ
அன்பாகச்செல்லடியோ - ஏசின்னப்பாங்கி
ந. துன்பமெல்லாங்கண்டுளைத்தே - ஏசின்னப்பாங்கி நீ
துரியசுகந்தருவாயோ - ஏசின்னப்பாங்கி
ச. குஞ்சிதமாந்தாளழகை - ஏசின்னப்பாங்கிநீ
குறிப்பாகப்பாரடியோ - ஏசின்னப்பாங்கி
ரு. என்றுவருவாயோ - ஏசின்னப்பாங்கி நீ
எந்தையுடனீயுமே - ஏசின்னப்பாங்கி
சு. பாட்டுக்கிசைவாளை - ஏசின்னப்பாங்கிநீ
பக்கத்திற்சேர்த்துவைப்பாய் - ஏசின்னப்பாங்கி
எ. வேதப்பரியேறிவந்தே - ஏசின்னப்பாங்கிநீ
வேதனையைத்தீர்க்கச்சொல்லாய் - ஏசின்னப்பாங்கி
அ. நால்வர்காணவந்தவனை - ஏசின்னப்பாங்கிநீ
நானுங்காணவரச்சொல்லாய் - ஏசின்னப்பாங்கி
கூ. சித்துருவமாகியபின் - ஏசின்னப்பாங்கிநீ
சிவமாகவாக்கிவைப்பாய் - ஏசின்னப்பாங்கி
க0. அரியயற்குமறியானை - ஏசின்னப்பாங்கிநீ
அணைத்துசுகம்பெறச்செய்வாய் - ஏசின்னப்பாங்கி.

வண்டுப்பண்.

பிரமராஷ்டகம்

க. நாதாந்தநாட்டானென்றூதூதுவண்டே
ஞானநடத்தோனென்றூதூதுவண்டே
வேதாந்தவீட்டானென்றூதூதுவண்டே
வேதமமொழிந்தோனென்றூதூதுவண்டே
உ. மாயவற்கெட்டானென்றூதூதுவண்டே
மாதொருபாகனென்றூதூதுவண்டே
தாயினினியனென்றூதூதுவண்டே
தாண்டவமாடியென்றூதூதுவண்டே

௩. நீலகற்கண்டனென்றூதூதுவண்டே
நீள்விசும்பானோனென்றூதூதுவண்டே
காலனைக்காய்ந்தோனென்றூதூதுவண்டே
காலங்கடந்தோனென்றூதூதுவண்டே

௪. அன்பருக்கன்பனென்றூதூதுவண்டே
அத்வீதரூபனென்றூதூதுவண்டே
துன்பந்துடைப்போனென்றூதூதுவண்டே
துரியத்தலத்தோனென்றூதூதுவண்டே

௫. அன்றெனையாண்டானென்றூதூதுவண்டே
அபயமளித்தானென்றூதூதுவண்டே
மன்றிநடிப்போனென்றூதூதுவண்டே
மதியணிநாதனென்றூதூதுவண்டே

௬. குஞ்சிதபாதனென்றூதூதுவண்டே
குற்றம்பொறுப்பானென்றூதூதுவண்டே
அஞ்செழுத்தானோனென்றூதூதுவண்டே
அம்பலத்துள்ளானென்றூதூதுவண்டே

௭. ஆரூரர்க்காளானென்றூதூதுவண்டே
ஆறந்தமேலானென்றூதூதுவண்டே
பேரூரின்வாழ்வாமென்றூதுவண்டே
பேராப்பெருமையென்றூதூதுவண்டே

௮. நித்தியானந்தனென்றூதூதுவண்டே
நிர்மலரூபனென்றூதூதுவண்டே
பத்திக்கிசைவானென்றூதூதுவண்டே
பரசுகநாதனென்றூதூதுவண்டே

நானனா நன்னனா நனனநனன நன்னனா நானனா

அழகனடி அழகனடி ஆனந்தவழகனடி
பழகுமன பாதங்களுக்கேபரமசுகமளிப்பானடி
என்னடியென்கணவன்யென்குணத்தானென்றுமுள்ளான்
தன்னைநம்புவார்க்குத்தன்பதமேதந்திடுவான்
ஆணவங்கட்கொண்டவர்க்குஅகப்படாண்டியென்னையன்
காணவவாவுள்ளவர்கட்கருத்திருந்துவாழ்வான்டி நானனன்னனே னா
அன்பனடி அன்பனடி அன்பர்களன்பனடி
என்பருவங்கண்டெனக்கே இன்பளிக்குமின்பனடி.

வேதாந்த தெம்மாங்கு.

---

௧. அஞ்சுடனேஒன்றாகுமந்தகனைச்சேர்ந்துவினனுள்
பஞ்சுபடாபாடனைத்தும்பட்டேண்டிபார்தனிலே
௨. பாரதனிலேயின்பமென்றுபாவித்துவாழ்ந்ததல்லால்
ஓரொடியுமின்பமதையோர்நாளுங்கண்டதில்லை
௩. கண்டதெல்லாம்பொய்யாச்சேகண்டவர்சொல்மெய்யாச்சே
தொண்டருடன்கூடியினிச்சுகம்பெறுகவருவாயோ
௪. வருவாயோவுண்மணியேவாதொன்றும்பேசாதே
தருவேண்டியுன்றனக்குத்தற்பரமாமபெருவாழ்வை
௫. வாழ்வெல்லாம்வந்திடுமேவான்சபையைக்காண்குவையேல்
தாழ்வெல்லாம்தாழ்ந்திடுமேதனியரசுபவாய்ந்திடுமே
௬. வாயாரவாழ்த்துதற்குவண்மையுள்ளதெய்வமடி
தாபரிமிக்கவனைத்துருநாளுந்தத்துவமடி
௭. தத்துவமெல்லாமதானேடுங்குமத்தலத்தே
சித்துருவாய்நின்றுடுஞ்சிற்சபைவாழ்செலவனடி.

நலங்கு.

௧. [illegible]மணையாந்தாளமுகா நலங்கிடவாரும்
நணிமைபாபுள்ளராஜாவே - நலங்கிடவாரும்
௨. அளபாபுகழ்அற்புதரோ - நலங்கிடவாரும்
ஆசையுள்ளதேஜரோ - நலங்கிடவாரும்
௩. புவிபாளவந்தாரோ - நலங்கிடவாரும்
பூங்கமுடான்றநந்தாரோ - நலங்கிடவாரும்
௪. காணுங்கணணுக்கினியரோ - நலங்கிடவாரும்
காதன்மிகவுடையரோ- நலங்கிடவாரும்.

லாலி.

௧. தேவலாலிமகாதேவலாலிதேவசபைவாழுமெந்தன்தெய்வலாலி
௨. அத்தலாலியெந்தன்சுத்தலாலி அம்பலத்திலாடுகின்றசித்தலாலி
௩. இராஜலாலிநடராஜலாலி இராஜசபையோங்குநதிவ்வியதேஜலாலி
௪. வேதலாலிசுகீதலாலிவேதமுடிவாழுமெந்தன்போதலாலி.

பூலாசெண்டு.

செண்டாடிடுவோமசிற்சபையப்பன்தன்னோடுகண்டார்மகிழ்வுற
விண்டார்புகழுறக்கருதியம்பலப்பெருவெளியில்
ண்டாராயாரதான்கர்த்தனையெங்களத்தனையேவிண்ணுடர்சிலர்
ணுடர்பலர்மருங்கிலெங்களுநெருங்கிடவே,

வேதாந்தவீட்டிலுனைவித்தகனெங்களத்தனையோதாந்தசுக
போதாந்தர்மிகநாடிவியந்துபுகழ்ந்திடவே
சீர்பெருகுஞ்சிவகாமிசிறந்துநின்றுதான்புகழும்
சித்ரூபபெருசத்ரூபக்குருசற்ஜனரக்ஷகாதன்னுடனே

நாயகன்சொல் பத்தியம்.

அழகான அன்னமேஆசைக்கலாபமே
ஆனந்தவல்லியே அம்புஜாக்ஷி
பழகாதபாவையேபழவகையின்சாரமே
பசியாதவமுதமேபரமசுகமே
ஒழுகாதமதுரமேஒளிவீசும்ரத்தினமே
ஒண்டொடியாதிலகமேஒதுங்குயிலே
வழுவாதவாசையால்வாடுகின்றேனையா [illegible]
வந்[illegible]யென்மீதிலவருத்தமென்னோ
மழுவா[illegible]நுமேவாடுகின்றான்
மாலவில்லிலபட்டுமிகமயங்குகின்றேனே
பழுதிலாப்பெண்மணிமாளிகைபுகுநீயே
பரிந்தென்னைப்பாலிப்பாய்பரிபூரியே

நாயகிசொல் பத்தியம்.

என்னுயிராநாதநீயென்னிருகண்மணியடி
என்னருவநகண்ணாநிகவுமின்பநீயே
அன்பரிபாரிமாதென்னைப்பாணைடருளுமுகமொ
ஆனந்தநாதாளிக்குமமலநீயே
கன்னிகைப்பாபபருவத்திற்காலபிடித்தகாக்கீரோ
காணுமிப்பருவமைகைபிடித்ததலைவனையே
உனனருயநீதநிடுளவ்யதமனேயுனைபால
முலநங்கமௌயகினுமவெறுகாணோன
என்னருமைதாரநிந்தவெக்தன்கோவே
ஏழைபணவாட்டமிலாதகற்றுந்தேவே
பன்னருமவாசகந்தான்பகாவதெனனே
பரிந்தென்னைப்பாலுகமேபரமநிதியே.

கதவுதிறக்கும்பாடல்

க. அம்பலத்தாடுமோரழகனொன்றுமமைநபடி
ஆசைபாய்மாலையிட்டேன்காணுமைபா

உ. மாலையிட்டதாலேநீமாலைவிடமேன்மையாய்
மாசிலாதோங்குறும்பெண்மணே - நீயும்மாசிலா

ந. மாசெனவென்றனுக்கு மாதவன்றங்கையெனும
மகிமையையோசித்துப்பாரு - சாமிநீர்தான்

ச. பார்ப்பதுவென்னேடிபாரளாநதோன்றுனும்
பறப்பண்டிபிரளயத்திற்பெண்ணே - அவன்பற

ரு. பிரளயத்திலெல்லோருங்கசிப்பதுபோலவர்
கசிப்பதுமியல்பேகாண்ஐயா - அவாகசிப்பது

சு. காணுவாயென்னுயிரன்பனுமார்க்கண்டன்
காணவேமரல்கோடிவிழுந்தான்பெண்ணே - காண

எ. விழுந்தவாதனக்குமுன்வெட்கியேநின்றீரே
விம்பென்னவுமக்குமேசொல்லும் - ஐயா

அ. சொல்லுவதென்னேடிசொன்னசொற்றவராத
சோயஞ்சோதியாதலாற்பெண்ணே - யானு

கூ. ஆலிலேமேலமரண்ணலேச்சோதியென
அறிஞர்கள்சொல்லுவதேனையா - மிக அறி

ய. ஏனென்றுகேளடியெந்தனுருதனைக்காண
ஏனமாய்ச்சென்றானே அண்ணன்பெணணே.

சிவநாமாவளிகள்.

க. சிற்சபைவாழுஞ்சின்மயனேசிவகாமிமகிழுந்தன்மயனே
உ. கண்ணனுக்கருளியகலா மணியேகனகசபையாடுமவிண்மணியே[மே
ங. குஞ்சிதபாதத்தைக்கூடுவமேகுறைகளெலாஞ்சோலவிப்பாடுவ
ச. தூரியதலத்தமரொந்துணையேதுரியதலமெனுமெனக்குணையே
ரு. கொக்கிறகணிந்தருள்கொற்றவனேநக்கனெனபடுகழுற்றவனே
சு. அம்பரதேகாபகதேவா அருளமுதீயநிவாவாவா
எ. சிற்றபைபப்பாவாவாவாசிவகாமிகணவாவாவாவா
அ. கநதனைதந்தோய்வாவாவா கருணைக்கடலேவாவாவா
கூ. நித்தியானந்தாவாவா வாநிர்மலதேகா வாவாவா
ய. அமபலபோதாவாவாவா அண்டாகணுதாவாவாவா
யக. முப்புரமெரித்தோய்வாவாவா மூவுருத்தரித்தோய்வாவாவா

வேறு.

யஉ. என்னையாண்டுகொண்டநின்னையென்னவென்றுசொல்லுவென்
பொனனைவென்றநின்றன்வண்ணம்யென்றுவந்துபுல்லுவேன்

யங. அத்தநின்னைநித்தம்வந்துபக்திசெய்துஅண்டுவேன்
சித்திதநதுமுத்திதந்தாறசின்மயத்தைஒண்டுவேன்

யச. கல்லேவென்றவென்றநெஞ்சைகனைக்குநல்லசித்தனே
தில்லேமன்றினின்றேயாடுதேவதேவசுத்தனே

யரு. சங்கராசிவசங்கராசிவசங்கராசிவசங்கரா
அங்கணுபெருமபொங்கரா வணிகங்கணுஅதிசுகல ங்கணு

யசு. தந்தையேமுனமவந்தையேஇதுவிந்தையேகதிமதிதந்தையே
யஎ. ஆதியேவுமைபாதியேஎந்தன்நீதியேயிகபரஆதியே.

முற்றும்.

ப்ரம்மவித்யா.

இப்பத்திரிகையானது சிதம்பரம் ப்ரம்மவித்யா [illegible] அச்சியந்திரசாலையினின்றும் மாதம் இருமுறை ப்ரசுரிக்கப்பட்டு நான்கு வருடகாலமாய் நடைபெற்று வருகின்றது. இதிலே வேத உபநிஷத்துக்களாதிமான சித்தாந்தங்களும், இதர [illegible]ங்களின் வரலாறுகளும், சிவாகம முதலிய [illegible]ங்களின் சாரங்களும், புராண இதிஹாஸங்களின் உட்கருத்துக்களும், இன்றியமையாத இலௌகிக விஷயங்களும் (கிரந்த எழுத்தில்) ஸம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இருபாஷைகளிலும் எழுதப்படும்.

கையொப்பவிவரம்.

வருஷம் 1-க்கு	2	12	0
மாதம் 6-க்கு	1	[illegible]	0
மாதம் 3-க்கு	0	11	0

இப்பத்திரிகைக்குக் கையொப்பக்காரர்களாகச் சேர விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். இங்ஙனம்,

ஆ. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள்,
ப்ரம்மவித்யா பத்திரிகாசிரியர், சிதம்பரம்.

ஸ்ரீகாழ்[illegible]

திருக்கழுமல மும்மணிக்கோவை.

இஃது சிவனடியார்களுள்ளே மிகச்சிறந்தவராகிய பட்டணத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பதினோராந் திருமுறையில் அடங்கியது. இதுவரையில் அச்சிடப்பட்ட அப்பதினோராந் திருமுறைப் பதிப்பிலே திருக்கழுமல மும்மணிக்கோவைச் செய்யுள்கள் முழுதும் அகப்படாமையால் பன்னிரண்டு செய்யுள்கள் மாத்திரம் அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது [illegible] செய்யுள்களும் சேகரித்து [illegible].

இதன் விலை அணா [illegible].

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரும்,

சைவசமயாசாரியருமாகிய

வன்றொண்டர் எனவும்

சுந்தரமூர்த்திசுவாமிகள்

திவ்வியசரித்திரம்.



இரண்டாம்பதிப்பு.

இஃது

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கிணங்கச்

சுருக்கமாகத்தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால்

சை. இரத்தினசெட்டியாரவர்களது

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1889.

[இதன் விலை பை. 3.] [தபாற்கூலி 10-க்கு பை.]

கணபதி துணை

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திர நாமாவளி.

சுந்தரநாம சுகாநந்த போதா
வந்தருள்செந்தா மரைமலர்ப்பாதா

வெள்ளிமலையினில் வீற்றிருப்போனே
வள்ளல்பணியில் மனம்விருப்போனே (சுந்)

நாரிபாகன்றிரு நல்லருள்பெற்றோய்
பாரிற்றிருமுனைப் பாடிநாடுற்றோய் (சுந்)

தெய்வத்திருநாவ லூரினிலாதி
சைவர்மரபிற் சனித்தப்ரக்யாதி (சுந்)

சதுரார்ஞறி சதிராநக்கற்றோய்
மகராஜனேத்தும் வடிவமுமுற்றோய் (சுந்)

சடங்கவிமகண்மணஞ் சார்ந்திடக்கணந்தோய்
சடங்கினிலரன்வந்து தடுத்திடச்சினந்தோய் (சுந்)

பித்தனென்றீசனைப் பேசிப்பழித்தோய்
பத்திரவானோலைப் பற்றிக்கிழித்தோய் (சுந்)

கத்தனசலோலை காட்டவேகன்றோய்
சித்தந்தெளிந்தேவல் செய்யப்பின்சென்றோய் (சுந்)

அருட்டுறையானென் றயர்ந்தங்கழுதாய்
கருத்தன்மெய்க் காக்ஷியைக் கண்டுதொழுதாய் (சுந்)

வன்றொண்டநாமம் வனைந்துகொள் பற்றோய்
அன்றேபித்தவென் றருந்தமிழ்ச் சொற்றோய் (சுந்)

இப்படியேதல மெங்கும்பாடென்று
அப்பனுரைத்திட வாசைகொண்மன்று (சுந்)

திருத்துறையூர்த்தெரி சித்தருளாளா
பெருத்திடுதவநெறி பெற்றதயாளா (சுந்)

சித்தவடமடத்திற் கண்வளர்ந்தாய்
முத்தன்பதத்தை முடித்துக்கிளர்ந்தாய் (சுந்)

தம்மானையறியாத சாதியென்றெடுத்தோய்
இம்மாநிலங்காண வின்றமிழ்தொடுத்தோய் (சுந்)

தில்லைச்சிற்றம்பலந் தெரிசித்தநாதா
எல்லையிலானந்த மெய்தியநீதா (சுந்)

ஆரூர்க்குவாவென் றசரீரி
சீருறச்சிந்தை கிளர்சுகவாரி (சுந்)

வாகார்சம்பந்தர் வருதலமென்றே
சீர்காழியைவலஞ் செய்குணக்குன்றே (சுந்)

எம்பிரானுறையை யெய்தியதீரா
தம்பிரான்றோழப்பேர் தாங்குஞ்செம்பீரா (சுந்)

[illegible] நம்பனையேத்தி
ஆரூர்த்தொண்டரோ டமர்ந்த[illegible]மூர்த்தி (சுந்)

சுந்தரர். உமாமகேசுவரர். பதஞ்சலி.



சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட ஐதீகம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

திவ்வியசரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

தண்கயிலை யதுநீங்கி நாவலூர்வாழ்
சைவனார் சடையனார் தநயனாராய்
மண்புகழ வருட்டுறையா னோலைகாட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகைசேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர்மேவி
நலங்கிளரும் பரவைதோ ணயந்துவைகித்
திண்குலவும் விறன்மிண்டா திறல்கண்டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச்செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற்றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்துநாத
னொப்பிறனித் தூதுவந்தா றூடுகீறி
யுறுமுதலை சிறுமதலை யுமிழநல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற்சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

திருக்கைலாசமலையில் பார்வதியாரோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய மெய்த்தொண்டர் அறுபத்துமூவரில் ஒருவராகிய ஆலாலசுந்தரரென்பவர், ஒருநாள் அப்பரமபதிக்குப் பூமாலை தொடுத்து அணிதற்பொருட்டு,மலர்கொய்தற்குத்திருநந்தனவனத்திற்சென்றபோது, உமாதேவியார்க்கு மலர்மாலைகட்டிச் சாத்துதற்கு அவ்வனத்திற் பூப்பறித்து நின்ற அவருடையசேடியர்களாகிய அனிந்திதை, கமலினி என்னும் பெயருடைய பெண்கள் இருவர்மேல் இச்சைகொண்டார். அவர்களும் ஆலாலசுந்தரரைக்கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள். பின்பு ஒருவாறு மனத்தை மீட்டுக்கொண்டு ஆலாலசுந்தரர் சிவசந்நிதானத்துக்கும் சேடியர்கள் தாயார் சந்நிதிக்கும்சென்றனர். சர்வாந்தரியாமியாகிய கைலாசபதி ஆலாலசுந்தரரைநோக்கி "நீ பெண்கள்மேல் இச்சைகொண்டமையால் தட்சணபூமியில் மானிடதேகமெடுத்து அப்பெண்களோடுகூடி யின்பமநுபவிப்பாயாக" என்று திருவாய்மலர்ந்தருளக்கேட்டு, ஆலாலசுந்தரர் நடுநடுங்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, எழுந்துநின்று, அஞ்சலியஸ்

தராய் :"கருணைக்கடலே! மனிதனாய்ப்பிறந்து சமுசார சாகரத்தில் மூழ்கிச்செய்வது இன்னது தவிர்ப்பது இன்னது என்றுஅறியாது மயங்கும்பொழுது தேவரீர் என்னைத்தடுத்தாட்கொள்ளவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமானார் அதற்குத் திருவுளமிசைந்தனர்.

அவ்வாறே ஆலாலசுந்தரர் புண்ணியபூமியாகிய பரதகண்டத்தில் தென்தேசத்தில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவப் பிராமணகுலத்தில் சடையனாருடைய கற்புக்கிருப்பிடமாகிய இசைஞானியார் திருவயிற்றில் அவதரித்து, நம்பியாரூரரென்னும் பிள்ளைத் திருநாமம் பெற்று, ஒருநாள் வீதியில் சிறுதேர்உருட்டிவிளையாடுகையில், அந்நாட்டரசராகிய நரசிங்கமுனையரையர் கண்டு சடையனார் சம்மதத்தின்மேல் அப்பிள்ளையைத் தம்மாளிகைக்கு எடுத்துக்கொண்டுபோய் அபிமான புத்திரராகப் பாவித்து வளர்க்க, வளர்ந்தாராயினும், பிராமணகுலத்துக்குரிய ஒழுக்கமுடையராய்த் தக்கபருவத்தில் உபநயனஞ் செய்யப்பெற்று, வேதாகமமுதலிய சகல சாஸ்திரங்களிலும் வல்லவராய்த் திருமணஞ்செய்துகொள்ளுதற்குரிய பருவத்தையடைந்தனர். அதுகண்டு, தந்தையாராகியசடையனார் தம்மரபுக்கேற்ற புத்தூரிலுள்ள சடங்கவிசிவாசாரியரிடத்தில் அவர் புத்திரியைத் தம் புத்திரருக்கு மணம்பேசச் சிலமுதியோரை அனுப்பினார்; அவர்கள் சடங்கவி சிவாசாரியரிடத்திற்சென்று, பேசி அவர் உடன்பட்டசெய்தியைச் சடையனாருக்கு அறிவித்தனர். அப்பொழுது சடையனார் மனமகிழ்ந்து, விவாக சுபதின முகூர்த்தம் நிச்சயித்துத் தம்ஞாதிகள்முதலிய உறவினரையும், நட்பினர் யாவரையும் திருமணவோலைபோக்கி வரவழைத்தனர்; பின்பு நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமணக்கோலம்பூண்டு, குதிரையிலேறிச் சகல சம்பிரமத்தோடு புத்தூரில் சடங்கவியார் வீட்டில் திருக்கல்யாணப் பந்தர்க்குமுன் சென்று, குதிரையினின்றிழிந்து, உள்ளேபோய் ஆசனத்திருந்தனர். அப்பொழுது சிவபெருமான் தாம் திருக்கைலாசத்தில ஆலாலசுந்தரர்க்குத் திருவாக்களித்தபடி ஓர் வயோதிகப்பிராமண வடிவங்கொண்டு அந்தக் கல்யாணப்பந்தலில் எழுந்தருளிநின்று, அங்குள்ளார்க்கெதிரில் நம்பியாரூரரை நோக்கி, உனக்கும் எனக்கும் ஒரு வழக்கிருக்கிறது. அது தீர்ந்தபிறகுதான நீ விவாகஞ் செய்துகொள்ளவேண்டும் என்றனர். நம்பியாரூரர் உமக்கும் எனக்கும் உள்ளவழக்கு யாது என்ன, அவ்வையர் அங்குள்ள பிராமணர்களைநோக்கி, இந்தநம்பியாரூரன் எனக்குஅடிமை என்றார். அது கேட்ட நம்பியாரூரர் இவ்வையர்சொல்லியது நன்றாயிருக்கிறதெனறு பழித்துச்சிரிக்க, பிராமணவேடம் பூண்டுவந்த கடவுள் உன்பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலை இதோஇருக்கிறது. அப்படியிருக்க நீபரிகாசஞ்செய்தது என்ன என்றார். நம்பியாரூரர் ஐயரைநோக்கி பிராமணருக்குப் பிராமணர் அடிமைப்படுதல் இன்றுதான் நீர் சொல்லக்கேட்டோம்; நீபித்தனோஎன்ன, ஐயர் நான்பித்தனானாலுமாகட்டும்; பேயனானாலுமாகட்டும்; நான்அதற்குச் சிறிதும் வெட்கமடையேன். நீ விநோதவார்த்தைகள் பேசவேண்டாம். அடிமைத்தொழில்செய்யவாஎன்றார். நம்பியாரூரர் ஐயரே! அவ்வோலையைக் காட்டுமென்ன, ஐயர் நீயிந்தவோலையைப்பார்த்து, நிச்சயிக்கத்தக்கவனோ! நான் இந்தச்சபையாருக்குக்காட்டி மெய்யென்று ஒப்புக்கொள்ளச்செய்வித்தபின்,எனக்கடிமைத்தொழில்செய்யமாத்திரம் தக்கவன் என்றார். அதுகேட்டு நம்பியாரூரர் கோபங்கொண்டு, அவர்கையிலுள்ள ஓலையைப் பறிக்க, அவருக்கு எதிரிற் சென்ற அளவில் அவரோடத் தாம் பின்தொடர்ந்தோடிப் பிடித்து ஓலையைப் பறித்துக்

னர். சுந்தரமூர்த்தியைப்பிடித்து ஒருதரம் இது முறையோ என்று கூச்ச லிட, சமீபத்தினின்றவர்கள் இருவரையும்விலக்கி, உலகத்தில் எங்ஙானும் நடந்திராத செய்தியைக்கொண்டு வழக்காடுகிற பிராமணரே! நீர் எங்கே யிருக்கிறவர்சொல்லுமென, "நான் இந்தத் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கிறவன்.அஃதிருக்கட்டும், இந்த நமபியாரூரன் அறநெறிக்கு விரோ தமாக என்கையில் இருந்த ஓலையைப் பலாத்காரமாய்ப்பிடிங்கிக் கிழித்த தனால்தான் எனக்கடிமை என்பதை ஸ்திரப்படுத்தினேன்" என்றார்.அப் பொழுது நம்பியாரூரர் நீர் திருவெண்ணெய்நல்லூரில் இருப்பவராயின், உம்முடைய தப்புவழக்கை அங்கேதானேபேசித் தீர்ப்புச்செய்யவாரும் என்ன, ஐயர் அதுகேட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பிராம ணர்களுக்குமுன் ஆதியில எழுதிய மூலஓலையைக்காட்டி, நீ எனக்கு முறி என்பதைச் சாதிப்பேனென்று தண்டேன்றிக்கொண்டு முன்னேசென்றார். நம்பியாரூரரும் மற்றைப்பிராமணர்களும் பின்னே போயினர்.

ஐயர் தமக்குப்பின்வந்த நம்பியாரூரரோடும் மற்றப்பிராமணரோ டும் திருவெண்ணெய் நல்லூரைச்சேர்ந்து, அங்குகூடிய பிராமணாகளுக் கெதிரில் அவர்களைநோக்கி, அறிவிற்சிறந்த பெரியோர்களே! இந்த நம்பி யாரூரன் எனக்கடிமையென்று காட்டியஓலையைப் பறித்துக் கிழித்து விட்டு, உங்களிடத்திற்கு வந்திருக்கிறான்; என்று முறையிட்டார். அதை க்கேட்ட பிராமணர்கள்அவரைப்பார்த்து,பிராமணர்கள் அடிமைப்படுதல் இவ்வுலகத்தில் எக்காலத்துமில்லையே. ஐயரே! நீர்என்ன தப்புவார்த்தை சொல்லுகின்றீர் என்ன, ஐயர் நான்சொல்லியது பொய்யன்று, மெய்யே; இவன்பறித்துக் கிழித்தவோலை இவனுடைய பாட்டன் "தானும் தன் உறவினரும் எனக்கடிமை" என்றெழுதிக்கொடுத்தவோலை என்றார். உட னே பிராமணர்கள் நம்பியாரூரரைநோக்கி, இவா உம்முடையபாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலையைக்காட்டினால் நீர் அதைப்பறித்துக் கிழிக் கலாமா? அதனால் உம்முடையபக்ஷம் செயித்ததோ? இவா தம்வழக்கை யாவரும் ஒத்துக்கொள்ளும்படிக்கூறினர். இனிஉம்முடையகருததுயாது? என்ன அதற்குச் சுந்தரா "வேதாகம முதலியயாவுங கற்றுணர்ந்த மகான் களே! நான் ஆதிசைவனென்பதை நீஙகளெல்லாமறிவீர்களே; அப்படியி ருக்க, இந்தப்பிராமணர் என்னைத் தமக்கடிமைஎன்று சாதிக்கிறாரே! இது மனத்தால் நிச்சயிக்கத் தகாதமாயையென்றே நினைத்தல்வேண்டும். நானி தற்கு என்ன சொல்வேன என்ன, அதைக்கேட்ட பிராமணர் அவ்வைய ரைநோக்கி, நீர் இவரை உம்முடைய அடிமையென்று சொல்லுகிறதற்கு அநுபவம், லிகிதம், சாக்ஷி இம்மூன்றிலொன்று உமமிடத்தில் இருக்க வேண்டுமே. அதைக்காட்டும் என்றார்கள்.அப்பொழுது ஐயர் "இவன்கிழி த்தஓலை மூலவோலையைப் பார்த்து எழுதியபடியோலை; மூலவோலையோ என்னிடத்திருக்கின்றதுஎன்றா ; பிராமணர் ஆனால் அதைக்காட்டுமென் ன,ஐயர் ஆரூரன்அதையும் முன்போலப்பறித்துக் கிழித்துப்போட்டால், என்செய்வேன். ஆதலால், அப்படிச் செய்யாதபடித் திட்டஞ்செய்வீர்க ளானால் காட்டுகிறேனென்ன, பிராமணா கிழிக்கவொட்டோம்; காட்டும் என்றார்கள். ஐயர் மூலவோலையைக் கையிலெடுத்தனர். அப்பொழுது ச பையார் கட்டளையின்படி ஓர்கணக்குப்பிள்ளை எழுந்து அவரைக்கும்பிட்டு ஓலையைவாங்கிச் சபையிலுள்ளார் கேட்கும்படி,

"திருநாவலூரிலிருக்கும் ஆதிசைவனாகிய
ஆரூரனென்னும் நான் திருவெண்ணெய்
நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு, நானும்

என்சந்ததியாரும் வழித்தொண்டுசெய்ய
உள்ளும்புறமுமொப்ப உடன்பட் டெழு
திக்கொடுத்தேன்."

இப்படிக்கு,
ஆரூரன்.

என்று வாசித்தான். அதிற் சாக்ஷி கையெழுத்திட்டவர்களும் தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக்கொண்டனர். அதன் பின்பு "பிராமணர்கள் நம்பியாரூரனைநோக்கி, இது உம்முடைய பாட்டன் கையெழுத்துத்தானே? பாரும்" என்றார்கள். ஐயர் அவர்களைப்பார்த்து இச்சிறுவன் தன்னடிமையோலையில் எழுதிய தன்பாட்டன்கையெழுத்தை அறியச் சக்தியுள்ளவனோ? இவன்பாட்டன் எழுதிய வேறுகைச்சாத்திருந்தால் அதைவருவித்துப்பார்த்து, ஒத்திருந்தால் உங்களுக்குத்தோன்றிய தீர்ப்புச்சொல்லுங்கள் என்ற அளவில், அப்படியே அவர் பாட்டனார் கைச்சாத்தொன்று அழைப்பித்துப்பார்த்து, ஒத்திருக்கக்கண்டு, இனி நீர் தப்ப வழி இல்லை. நீர் இந்தப் பிராமணருக்குத் தோற்றீர். .ஆதலால் அவர் கருத்தின்படி அடிமைசெய்வதே கடன் என்றார்கள். ஆலாலசுந்தரர் விதிமுறை யிது வாயின் நானுடன்படேனென்று சொல்லக்கூடுமோ என்று நின்றார். அப்பொழுது பிராமணர் அவ்வையரை நோக்கி, நீர்காட்டிய முறியோலையில் உங்களூரோ எங்களுடையவூராக எழுதப்பட்டிருக்கின்றது. ஆகையால், உமக்கு இங்கே தலைமுறையாகவுள்ளவீடும் ஸ்திதியும் காட்டுமென்ன, காட்டுகிறேன் வாருங்களென்று நம்பியாரூரரும் பிராமணர்களும் பின்தொடர்ந்துவரத் தாம்அவ்வூரிலுள்ள திருவருட்டுறை என்னுஞ்சிவாலயத்துள்ளே போயினர்; பின்போனசபையார் அவரைக்காணாது திகைத்து நின்றாகள்.

அப்பொழுது சுந்தரமூர்த்திசுவாமிகள் என்னை அடிமைகொண்ட பிராமணர் திருக்கோயிலுள்ளேபுகுந்தது என்ன ஆச்சரியமென்று கருதி, அத்தியந்த வாசையோடும், தனித்து அவரைப் பின்தொடர்ந்துபோய்க் கூப்பிட, சிவபெருமான் அறவடிவாகிய இடபவாகனத்தின்மேல் பார்வதிசமேதராய் எழுந்தருளி "நீ நமக்கு முன்னே தொண்டனாயிருந்தாய்; பெண்கள் மேல் ஆசைவைத்ததனால் நம்முடைய ஆணையாற் பூமியிற் பிறந்தாய்; இப்பொழுது சமுசாரபந்தமானது உன்னைத் தொடராதபடி நாமே வலியவந்து தடுத்தாட்கொண்டோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இவ்வாறெழுந்த அருமைத் திருவாக்கு, செவியில் நுழையச் சுந்தரமூர்த்திசுவாமிகள் பரவசப்பட்டு அடியற்றமரம்போல் பூமியில் விழுந்து, அஷ்டாங்க நமஸ்காரம்பண்ணி, ஆநந்தக்கண்ணீர்பெருக, எழுந்துநின்று இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்து, பொன்னம்பலத்தில் பஞ்சகிருத்தியத் திருநடனஞ்செய்தருளும் சுவாமி! தேவரீர் ஒன்றுக்கும் பற்றாத என்னை வலியத்தடுத்தாண்ட அருட் பெருமையை என்னென்று சொல்லுவேனென்றார். அப்படிநின்றநம்பியாரூரனைநோக்கி "நீ நம்மோடு வன்சொற்பேசி வன்றொண்டனென்னும் பெயர்பெற்றாய்; நமக்கு அன்பினாற் செய்யும் அருச்சனையாவது பாடலேயாம். ஆதலால், நம்மேல் தமிழ்ப் பாடல்பாடுக" என்று அருளிச்செய்யச் சுந்தரமூர்த்திசுவாமிகள் அஞ்சலியஸ்தராய் "அடியேன் தேவரீருடைய அநந்தகல்யாண குணங்களில் எதை அறிவேன்? என்னவென்று பாடுவேன்?" என்ன, அதற்குச் சிவபெருமான் "நீ முன்னே நம்மைப்பித்தனென்றாய்; ஆதலால் என்பெயர்[illegible]

தனென்றே பாடுக" என்ன, சுந்தரமூர்த்திசுவாமிகள் தம்மை அடிமை கொண்ட சிவபெருமான்மேல், "பித்தாபிறைசூடி" என்னுஞ் சொற்றொடரை முதலாகவுடைய திருப்பதிகத்தைப்பாடியருளினார். பின்பு தம்பிரானார் "நீ யின்னும் நம்புகழைக்குறித்துப் பலவகையாகப்பாடுக" என்று மறைந்தருளினார். இது நிற்க, புத்தூரில் சடங்கவிசிவாசாரியர் புத்திரியாரோ விவாகந்தவறினதினால் சுந்தரமூர்த்திசுவாமிகளையே தியானஞ்செய்துகொண்டிருந்து சிவபதமடைந்தனர்.

பின்பு சுந்தரமூர்த்திசுவாமிகள், திருவெண்ணெய்நல்லூரிலிருக்கின்ற திருவருட்டுறை என்னும் ஆலயத்திலெழுந்தருளிய பரமகாருண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமான் தம்மை யாட்கொண்டபின், திருநாவலூர்க்கும் திருத்துறையூர்க்கும், சென்று திருப்பதிகம்பாடிச் சிதம்பரத்திலே ஆநந்தத் தாண்டவஞ் செய்தருளும் நடேசனைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையோடு புறப்பட்டுத் திருவதிகையென்னுந் தலத்துக்குச் சமீபத்திற்போய்த் திருநாவுக்கரசுசுவாமிகள் உழவாரத்தால் கைத்தொண்டுசெய்த இத்தலத்திலே நான்மிதிக்க வஞ்சுகின்றேனென்று அதற்குட் செல்லாமல், அருகிலிருந்த சித்தவடமடத்தி லெழுந்தருளி அன்றிராத்திரி திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தியானஞ் செய்துகொண்டு, நித்திரைசெய்யும்போது,வீரட்டானேசுரர் ஓர் விருத்தப்பிராமணராகி அம்மடத்தில் நுழைந்து,சுந்தரமூர்த்திசுவாமிகள் சிரசின்மேல் தமது திருவடியை வைத்தருளித் துயில்பவர்போலிருந்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழித்துக்கொண்டு, "ஐயோ!என் உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல்வைத்தீர்"என்ன, ஐயர் "என்வயோதிகத்தால் திசை தெரியாது அப்படிச்செய்தேன்" என்றார்.சுந்தரமூர்த்திசுவாமிகள் அதற்கு ஒத்துக்கொண்டு,தம்முடையசிரசை வேறொரு திசையில்வைத்து நித்திரைசெய்தனர். எம்பிரானார் அங்குஞ் சென்று, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சிரசில் தம்முடைய பாதத்தை நீட்டச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "என்சிரசில் பலமுறைக்கால்வைத்த நீர் யார்" என்ன, "நீ என்னை அறியாயா?" என்று உரைத்து, மறைந்தருளினர். அதுகண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்முடைய சிரசில் பாதத்தை வைத்தவர் சுவாமி என்றறிந்து "அடியேன் செருக்கினால் சிவபெருமானென்று அறியாமையால் என்செய்தேனென்றுவருந்தி" வீரட்டானேசுரரை "தம்மானையறியாத சாதியாருளரே" என்னுந் திருப்பதிகம்பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்திற்சென்று, கனகசபையில் ஆநந்தத்தாண்டவஞ் செய்தருளும் சபாநாதனைத் தரிசித்து, அன்பு மிகுதியால் நெருப்பிலிட்டநெய்போல் மனமுருகி, ஆநந்தக்கண்ணீர் பெருக, விழுந்து, நமஸ்கரித்து, பேரின்பசாகரத்தில் முழுகி, இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் குவித்துப் பதிகம்பாடித் துதித்து நின்றனர்.

அப்பொழுது நடேசர் திருவருளால் "திருவாரூர்க்குவா" என்று எழுந்த அசரீரிவாக்கைக்கேட்டு, அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு கனகசபையைப் பிரதக்ஷிணஞ்செய்து, வணங்கி, விடைபெற்றுக் கொண்டு, புறப்பட்டுக் கொள்ளிட நதியைக்கடந்து, சீர்காழிக்குச் சமீபித்து, இது திருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்த தலம். ஆகையால் அதை மிதிக்கலாகாதென்று கருதி,அதன் எல்லையைவணங்கி வலம் வரும்போது சிவபெருமான் தரிசனந்தந்தருள, "சாதலும்பிறத்தலுந்தவிர்த்து" என்னுந் திருப்பதிகம்பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கோ.. முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூர்க் கெழுந்

தருளி ஆலயத்துட்சென்று, வன்மீகநாதனைவணங்கிப் பேரின்பக்கடலுள் மூழ்கித் திருப்பதிகம் பாடித் துதித்துநின்றார். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்கும்படித் தியாகப்பெருமான் திருவருளால் "நாமுனக்குத் தோழரானோம்; முன்னே யாட்கொண்ட விவாககாலததில் நீ கொண்டிருந்த மணக்கோலத்தை என்றும் பூண்டு விளையாடுவாயாக" என்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அதுகேட்ட சுந்தரமூர்ததிசுவாமிகள் ஆநந்தபரவசராய்த் தொழுது துதித்துப் புறம்போந்து, அன்றுதொட்டு அடியார் யாவரும் தம்பிரான் தோழர் என்று சொல்லிக்கொள்ளத் திருமணக்கோலம் பூண்டு, நான்தோறும் வன்மீகநாதனைத தரிசனஞ்செய்து கொண்டு அங்கிருந்தனர்.

இதுநிற்க; முன்னே திருக்கைலாசமலையில் இருக்கும் பார்வதியாருடைய பாங்கியரிருவரில் ஒருவராகிய கமலினி எனபா அத்திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்னும திருப்பெயர்பெற்று மங்கைப்பருவமடைந்து, அவரும் தோழிமாரோடு தினமும் ஆலயத்துட்சென்று சிவதரிசனஞ்செய்து வருவார். ஒருநாள் தரிசனஞ்செய்யப்போம்பொழுது அங்கு பரிசனத்தோடு சிவதரிசனத்துக்கெழுந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்கண்டு, ஆசைகொண்டு, தாம அவரை விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமென்று சுவாமி சந்நிதானததில் விண்ணப்பஞ் செய்தருளினர். சிவபெருமான் அவர் விண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டு பரவையாரைச் சுந்தரமூர்ததி சுவாமிகளுக்குத் திருமணஞ்செய்து கொடுக்கும்படி அடியார்களுக்குக் கட்டளையிட்டருள, அவர்கள் அப்படியே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பரவையாரை விதிப்படிவிவாகஞ்செய்துகொடுத்தார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரைக் கூடி வாழ்ந்திருக்கும்நாளில் ஒருநாள் சிவதரிசனத்துக்கு எழுந்தருளும் போது, தேவாசிரியமண்டபத்தில் சேர்ந்திருந்த சிவனடியார்களைக்கண்டு அவர்கள்மேல் பத்திமிகுந்து, நானிவர்களுக்கு அடியனாகுநாள் எந்நாளென்றுகருதிச் சுவாமிதரிசனத்துக்குத் திருக்கோயிலுக்குட் சென்றனர். அவர் விருப்பததை நிறைவேற்றும பொருட்டுத் தியாகப்பெருமான் அவாக்குக் காட்சிகொடுத்தருளி, நீ நம்மடியார்மேற் பதிகம்பாடுவாயாகவென்று திருவாய்மலர்ந்தருள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வணங்கிநின்று "சுவாமீ! அடியவாகள் வரலாறு இன்னதென்றும் அவர்கள் தன்மை இன்னதென்றும் சிறிதும் அறியாதயான் எப்படிப்பாடுவேன்? அவர்களைப்பாடுஞ்சக்தியைத் தேவரீரோ அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்." சிவபெருமான் அதற்கிசைந்து தமது அருமைத் திருவாக்கால் "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்று அடி எடுததுக்கொடுத்து மறைந்தருளினா. அதுகண்டு சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாசிரியமண்டபத்தையடைந்து அவ்வடியவர் யாவர்க்குந் தனித்தனியே அடியேனென்று திருத்தொண்டத் தொகை என்னுந திருப்பதிகம்பாடி அவர்

பின்பு சுந்தரமூர்த்திசுவாமிகள்சிலநாள்அங்கிருந்து அதற்குச் சமீபத்திலுள்ள திருக்கோலிலி என்னும் ஸ்தலத்துக்கெழுந்தருளி ஆலயத்துட்சென்று சிவபெருமானைவணங்கி, வேளாளராகிய குண்டையூர்க்கிழார் கொடுதத நெற்குவியலைத் திருவாரூரிற் சேர்ப்பிக்கக் கிருபைசெய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவாக்கினையாற் பூதங்கள் குண்டையூரிலிருந்த நென்மலையை எடுத்துச்சென்று பரவையார் திருமாளிகையிலும் மற்றவிடங்களிலும் நிறைத்தன. சுந்தரமூர்த்திசுவாமிகள் மீண்டு

. கவ

திருவாரூர்க்குச்சென்று,வன்மீகநாதனைத்தொழுது, துதித்துப்பரவையார் திருமாளிகையிற்சேர்ந்து,நிகழ்ந்தசெய்தியைச்சொல்லிச்சிலநாள் அங்கிருந்து,கோட்புலிநாயனார்வேண்டுகோளால், திருநாட்டியத்தான் குடிக்கெழுந்தருளிய பொழுது, அந்நாயனார் எதிர்கொண்டுவந்து வணங்கித் தம்முடையவீட்டுக்கு அழைத்துப்போய் ஆசனத்திலிருத்தி,அருச்சனைசெய்து, திருவமுதுசெய்வித்து, வணங்கித் தம்முடைய புத்திரிகளாகிய சிங்கடி, வனப்பகை என்னும் இருவரையும் கொண்டுவந்து வணங்குவித்துத் தாமும் வணங்கி அடியேன்பெற்ற இப்பெண்ணை அடிமையாகக் கொண்டருளவேண்டும் என்ன,சுந்தரமூர்த்திசுவாமிகள் அந்தப்பெண்களைப் புத்திரிகளாகப்பாவித்தருளிச்சிவாலயத்துட்சென்று, சிவபெருமானைவணங்கி "பூணுவதோரரவம்" என்னுந் திருப்பதிகம்பாடி அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பில் கோட்புலிநாயனாரைச் சிறப்பித்துச்சிங்கடியாருக்குத் தம்மைப் பிதாவாகக் கருதினமையால் தம்மைச் சிங்கடியப்பன் என்று வைத்தருளினர். பின்பு அவ்விடத்தினின்றும் எழுந்தருளித் திருவலிவலத்திற்சென்று, சிவதரிசனஞ் செய்துகொண்டு, மீண்டும் திருவாரூர்க்குச்சென்று,வனமீகநாதனை வணங்கிக்கொண்டு, பரவையார் வீட்டிலிருந்தனர். இருக்கும் நாளில் பங்குனியுத்திரத் திருவிழா சமீபிக்கவும், பரவையார் திருவிழாச் செலவிற்குக் கொடுப்பதற்குப் பொருள்கொண்டுவரும்பொருட்டுத் திருப்புகலூரைச் சேர்ந்து,ஆலயத்துட்சென்று, சுவாமியை வணங்கிப் பதிகம் பாடிச் செங்கல்லைப் பொன்னாக்கித் தரப்பெற்று, அங்கிருந்து புறப்பட்டு திருவாரூரையணைந்து பரவையார் வீட்டில் எழுந்தருளினர்.

அங்கிருந்து புறப்பட்டுத் திருநன்னிலம் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருமுதுகுன்றத்தைச் சேர்ந்து, சிவதரிசனஞ்செய்து பதிகம் பாடியபோது, சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தருள, சுந்தர மூர்த்திசுவாமிகள் வணங்கிநின்று, தேவரீர் கொடுத்தருளிய பொன்னெல்லாம் திருவாரூரில் உள்ளவர் யாவரும் அதிசயிக்கும்படி அங்கே வரச்செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, அப்பொழுது எம்பிரானுடைய திருவருளால், "சுந்தரமூர்த்தி! நீ இந்தப்பொன எல்லாவற்றையும் மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தி லெடுத்துக்கொள்ளென்று அசரீரவாக் கெழுந்தது" அதுகேட்டுச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மச்சம்வெட்டி எடுத்துக்கொண்டு பொன்னனைத்தையும் மணிமுததாநதியிலிட்டு அன்று என்னைத் தடுத்தாட்கொண்ட திருவருளை இதிலறிவேனென்று சிதம்பரத்துக்கு எழுந்தருளக்கருதி, வழிக்கொண்டு இடையிலுள்ள திருக்கடம்பூரை வணங்கித் தில்லையைச்சேர்ந்து, நடேசனைத் தொழுது பதிகம்பாடித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருக்கரும்பறியலூர் முதலிய பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு மீண்டுந் திருவாரூர்க் கெழுந்தருளி வன்மீகநாதனைப் பணிந்து பரவையாருடன் மனமகிழ்ந் திருக்குநாளில், ஒருநாள் பரவையாரைநோக்கி எனக்குதிருமுதுகுன்றர் கொடுத்தருளிய பொன்னையெல்லாம் மணிமுத்தா நதியிலிட்டு வந்தேன். இப்போது இத்தலத்தில் திருக்கோயிலுக்கு மேற்கிலுள்ள குளத்தில்போய் அவரது திருவருளால் எடுத்துக்கொண்டு வருவோம்வா! என்ன, பரவையார் இது என்ன? அதிசயமென்று தமக்குள்தாமே எண்ணிக்கொண்டு கூடவர, அக்குளத்தருகிற்சென்று, பரவையாரைக் கரைமேல் நிறுத்தித் தாம் வன்மீகநாதனை வணங்கித் துதித்துக் குளத்திலிறங்கித் தடவிப் பார்க்கையில் பொன்னகப்படாமையால் மனம்வருந்தித் திருப்பதிகம்பாடிச் சிவபெருமான் திருவருளால் வந்தெழுந்தபொற்றிரளை

வாரி எடுத்து ஆட்களிற்சுமத்தி, அனுப்பிவிட்டுத் தாம்திருக்கோயிலுட் சென்று, வன்மீகநாதனைப்பணிந்து, துதித்து, வீட்டுக்குச்சென்று, பரவையாரோடு மகிழ்ந்திருக்குநாளில், சிவஸ்தலயாத்திரைபண்ண விருப்பமுற்று, திருநள்ளாறுமுதலியவற்றை வணங்கிக்கொண்டு, திருக்குருகாவூர்க்குச்சமீபத்தில் வரும்பொழுது, வன்றொண்டர் பசிதாகமுதலியவற்றால் மெலிந்துவருகிறார் என்று பரமசிவம் திருவுளமிரங்கித் தண்ணீரும் கட்டமுதுமகொண்டுவந்து வெயில்வெப்பத்தைத தணிக்கும்பொருட்டு, அங்கு ஒரு பக்கத்தில் ஓர் தண்ணீர்ப்பந்தரையுண்டாக்கித் தாம் ஓர் பிராமணவேடம்பூண்டு, களைத்து வருகின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளைநோக்கி, நீர் மிகவும் பசித்திருக்கின்றீர், எனனிடத்தில பொதிசோறிருக்கின்றது; அதையுண்டு, தண்ணீர்குடித்து, இளைப்பாறுமென்று சொல்லியருள, சுந்தரமூர்த்திசுவாமிகள் அதற்கிசைந்து கட்டமுதைவாஙகி அடியாரோடு அமுதுசெய்து, தணணீா அருந்தி பரிசனங்களோடு நித்திரைசெய்ய, ஐயர் தண்ணீாப்பந்தரோடு மறைநதருளினர். சுந்தரமூர்ததி சுவாமிகள் துயிலுணாந்து ஐயரைக்காணாமையால ஆச்சரியமடைந்து 'இத்தனைமாற்றமறிந்திலேன்' என்னுந் திருப்பதிகம்பாடித் திருக்குருகாவூரைச் சேர்ந்து, சிவதரிசனஞ்செய்து, அதை அகனறு வழிக்கிடையிலுளள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு, திருக்கழுக்குன்றிற்போய்ச் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு திருக்கச்சூருக்கெழுந்தருளி ஆலக்கோயிலுள்ளேசென்று சிவதரிசனஞ்செய்து புறத்தில்வநது அமுதுசெய்யும் காலமாகியும அமுதுசெய்து படைக்கும் பரிசனங்கள் வாராமையால் மிகுந்தபசியோடு மதிற்புறத்தி லிருந்தனர். அப்பொழுது சிவபெருமான் ஒரு பிராமணராகிஅருகிற்சென்று நீர் மிகப்பசியோடிருக்கின்றீா. நான் உமக்குப் பிராமணர் வீட்டில் அனனம் யாசித்துக்கொண்டு வருகிறேன்; நீர் அப்புறம் போகாமல் இங்கேயிரும் என்று சொல்லிப்போய் அப்படியே யாசித்துக்கொணடு வந்துகொடுக்க, சுந்தரமூர்த்திசுவாமிகள் தமமுடன்வந்த தொணடர்களோடு உண்டுமகிழ்ந்தனா. உடனே அவ்வையர் மறைந்தருளினதைக் கண்டு, அவர் சிவபெருமானே என்று துணிந்து, "இநதநடுப்பகலில் திருவடிவருந்த அடியேனபொருட்டு எழுந்தருளிய பெருங்கருணையை என்னென்று புகழ்வேன்" என்று மனமுருகித் தோத்திரஞ்செய்து, அவ்விடம் விட்டுப் புறபபட்டுக் காஞ்சீபுரத்திற்சென்று, திருவேகம்பநதை யடைந்து காமாக்ஷியம்மையால் அருச்சிக்கப்பட்ட ஸ்ரீஏகாம்பரநாதனைவணங்கி அங்கிருந்து புறப்பட்டு, இடையிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தொழுது கொண்டு, திருக்காளத்தி மலைக்குச்சென்று, சுவாமி தரிசனஞ்செயது கொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் திருவொற்றியூரிற்போய்ப் பதிகப்பாடிச் சுவாமி தரிசனம்பண்ணிக்கொண்டு அங்கிருந்தனர்.

முன் திருக்கைலாசகிரியில் சுந்தரமூர்த்திசுவாமிகள்மேல் ஆசைகொண்டதோழிமார்இருவரில் ஒருவராகிய "அனிந்திதையார்" என்பவர் ஞாயிறு என்னும ஊரில வேளாளரிற சிறந்த ஞாயிறுகிழார் எனபவருக்குப் புத்திரியாராகத் திருவவதாரஞ்செய்து சங்கிலியார் என்னுந் திருநாமம்பெறறுத் திருக்கோயிலில் திருதொண்டுசெய்து, ஒழுகுநாளில ஒரு நாள் சுநதரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரைக்கண்டு, ஆசைகொணடு சுவாமி சந்நிதானத்திற் சென்று வணஙகி, சஙகிலியாரைத தமக்குத் தந்தருளும்படிப் பிரார்த்தித்துக் கோயிலின் புறத்தில் ஓரிடத்தில் மனக்கவலையோடிருக்க, அப்பொழுது சிவபெருமான் சுந்தரமூர்ததி சுவாமிகளுக்கெதிரிற்போய்ச் சங்கிலியை உனக்குத் தருகிறோம். நீ கொண்ட கவலை

யை ஒழிப்பாயாக வென்று திருவாய்மலர்ந்தருளி, உடனே கன்னிமாடத்திற் கண்வளரும் சங்கிலியாா சொப்பனத்திற் ருேன்றிச் சங்கிலியே! நம்மிடத்து மிகுந்த பத்தியையுடைய சுந்தரன் தனக்கு மனைவியாக உன்னைத் தரும்படி என்னைப்பிரார்த்தித்தான்; நீ அதற்கு உடன்படவேண்டும் என்ருர். அதற்குச் சங்கிலியார், சுவாமீ! அடியேன் தேவரீருடைய திருவாணையைச் சிரமேற்கொண்டேன்; அவ்வாறே அவர்க்கே மனைவியாதற்குரியேன்; ஆயின் அவர் திருவாரூரிலே மிகுந்த சந்தோஷத்தோடு வசிக்கின்றவர் என்பதைத் தேவரீா திருவுளங்கொண்டருளும் என்று விண்ணப்பஞ்செய்தார். சுவாமி அதுகேட்டுப் பெண்ணே! சுந்தரன், உன்னைப் பிரியேன், என்று சபதஞ்செயதுதருவான் என்றுசொல்லிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்துவந்து நான் உனனைப் பிரியேன் என்று நீ அவளுக்குச் சபதஞ்செய்துகொடுத்தால்தான் அவள் உடன்படுவாளென்ன, ஆயின் அவ்வாறேசெய்துகொடுக்கிறேன், தேவரீர் அப்பொழுது திருக்கோயிலிலிராது மகிழின்கீழ் எழுந்தருளியிருக்கவேண்டுமென்ன, அதற்குச் சிவபெருமான் இசைந்தருளி, மீண்டுஞ் சங்கிலியாரிடத்திற் சென்று, சுந்தரன உனக்குச் சபதஞ்செய்துகொடுக்க இசைந்திருக்கிருன்; அவன் ஆலயததிற் சபதஞ்செய்யவந்தால் மகிழடியிற் செய்யும்படிகேள் என்று மறைந்தருளினுர். பின்பு சங்கிலியார் திருப்பள்ளி யெழுச்சிக்குப் பூமாலை தொடுக்கத தோழியரோடு திருக்கோயிலுக்குச் செல்ல, அவருக்குச் சபதஞ்செய்துகொடுக்க அதற்குமுன் வந்திருநத சுந்தரமூாத்திசுவாமிகள் அவர்க்கெதிரிற்போய்த் தமக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளியதைச் சொல்ல, அவா அதற்கொன்றுஞ்சொல்லாமல் நாணமுற்றுச் சேடியரோடு கோயிலுக்குட் சென்ருர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பின்தொடர்ந்துபோய்ப் பெணணே! உன்னைப் பிரியேனென்று சபதஞ்செய்யச் சந்நிதானத்திற்குவாவென்ன, சங்கிலியார் கண்டகனவைக்கேட்டறிந்த தோழிமார் இஙகே வேண்டுவதில்லை, மகிழடியிற் சபதஞ்செய்து கொடுமென அவ்வாறே மகிழடியிற்போய்ச் சபதஞ்செய்துகொடுதது சங்கிலியாரை விவாகஞ்செய்துகொண்டு அங்கு அவரோடு சிலநாள் கூடியிருந்து, அதற்குமேல் திருவாரூர் "வீதிவிடங்கப் பெருமானைத்" தரிசனஞ்செய்யாமல் எததனைநாள் நீஙகியிருப்பேன் என்று மனவருத்தமுற்று, ஆலயத்திற்சென்று, சுவாமி தரிசனஞ்செய்து திருவொற்றியூரெல்லையை நீஙகியஅளவில் இரண்டுகண்களும் மறைந்தன. மறையவே சபதந் தவறினமையால் நேரிட்டதென்று வருந்தி "அழுக்குமெய்கொடுன்றிருவடியடைந்தேன்" என்னுந் திருப்பதிகம்பாடியும் அத்துன்பம் நீஙகவில்லை; ஆயினுந்திருவாரூர்க்குப் போகவேண்டு மென்னும் ஆசை மென்மேலும் வளாதலால் சிலர் முனனே வழிகாட்டத் திருமுல்லைவாயிலுக்குச் சென்று சுவாமியை வணஙகி "விரைபணிந்தேத்தும்வேதியா" எனனுந் திருப்பதிகம்பாடித் திருவெண்பாக்கத்தைச் சோந்து சிவபெருமானைப் பணிந்து "திருக்கோயிலுள்ளீரோ" என்று விண்ணபஞ்செய்ய, சுவாமி அவருக்கு ஊன்றுகோல்கொடுத்தருளி "உளோம்போகீர்" என்றனர். பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள் "பிழையுளனபொறுத்திடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு காஞ்சிபுரத்துக்கெழுந்தருளி ஏகாம்பரநாதரை வணஙகி, அவர் திருவருளால் ஒருகண்பெற்று வழிக்கிடையிலுள்ள சிவஸ்தலஙகளையெல்லாம வணங்கிக்கொண்டு திருவாரூர்க்குச் சென்று, வன்மீகநாதரைத்தொழுது மற்ருெருகண்ணும்பெற்றுப் பரவையார் ஊடலை நீக்கும்பொருட்டு, வீதிவிடங்கப்பெருமானை இரண்டுதரம் அவர்மனையில் தூது அனுப்பி ஊடல் தணிந்தபின் அங்குச் சென்று, அவரோடுகூடி நாள்தோறும வன்

மீகநாதனைத் தரிசனஞ்செய்து கொண்டிருந்தனர். இருக்கும்பொழுது தாம் சிவபெருமானைத் தூது அனுப்பிய செய்தியைத் திருப்பெருமங்கலத்திலிருக்கும் ஏயர்கோனகலிக்காமநாயனார் கேள்வியுற்று, அது தக்கது அன்றென்று தம்மேல் கோபங்கொண்டு இருத்தலை அறிந்து, சுவாமி சந்நிதானத்தில் விண்ணபபஞ்செய்ய, சிவபெருமான் கலிக்காமநாயனாருக்குச் சூலைநோயை ஏவி, அவரிடத்திற்போய்ச் சுந்தரன் வந்தாலன்றித் தீராதென்ன, அவர் அதற்கு உடன்படாமையைக் கண்டும் சுந்தரமூர்த்திசுவாமிகளிடத்தில் வந்து நீ போய்க் கலிக்காமனுடைய சூலையைத் தீர்ப்பாய்என்றார். சுந்தரமூர்த்திசுவாமிகள் சூலைநோயைத்தீர்க்கும்பொருட்டு வருஞ்செய்திகேட்டுக் கலிக்காமநாயனார் உடைவாளால வயிற்றைப் பீறிக்கொண்டு இறந்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் அங்குச்சென்று கலிக்காமநாயனார் இறந்திருத்தலை நோக்கி நானும் மரணமடைவேனென்று உடைவாளை எடுத்தனர். உடனே சிவபெருமான் திருவருளால் கலிக்காமநாயனார் உயிர்த்தெழுந்து உடைவாளைப் பறறிக்கொள்ள, அவர் விழுந்து நமஸ்கரித்தனர்; கலிக்காமநாயனாரும் சுந்தரமூர்த்திசுவாமிகளை வணங்கினர். பின்பு இருவரும் அன்போடு அளவளாயிருந்து மீண்டுந் திருவாரூர்க்கெழுந்தருளி வன்மீகநாதனைத் தரிசனஞ்செய்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது சேரமான்பெருமாணாயனார் சிவபெருமானால் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய மகிமையை அறிந்து அவரைத் தரிசிக்க விரும்பித் திருவாரூரையடைந்து அவரை வணங்க, சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான்பெருமாணாயனாரை வணங்கினர். பின்பு சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான் பெருமாணாயனாரை உடன்கொண்டு ஆலயத்திற் சென்று, வன்மீகநாதரை வணங்கிப் பரவையார்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் விருந்துசெய்து, சிலநாள் அவரோடு அங்கிருந்துஇன்னுமுள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்கவிரும்பிச் சேரமான்பெருமாணாயனாரும் கூடவரப் புறப்பட்டுச் சோழநாட்டிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம வணங்கிக்கொண்டு பாண்டிநாட்டிற்சென்று அங்குள்ள மதுரை முதலிய சிவஸ்தலங்களைத் தரிசனஞ்செய்துகொண்டு மீண்டும் திருவாரூர்க்குச் சென்று வன்மீகநாதரை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டுச் சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, செல்லுகையில் திருவையாற்றுக்குச் செல்லத் தடையாகக் காவேரி பெருகிவருவதைக்கண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருப்பதிகத்தால் அவ்வாறு வழிவிடப் பரிசனங்களோடு சென்று, பஞ்சநாதேசுரரைத் தரிசித்து வணங்கி, மீளவும் அவ்வழியே வந்தபின்பு வெள்ளம் முன்போலப் பெருகி யோடிற்று. அவ்விடம்விட்டு நீங்கிக் கொங்கு நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, மலைநாட்டிற் சென்றபோது சேரமானபெருமாணாயனார் நகரமாகிய கொடுங்கோளூரிலிருப்பவர்கள் எதிர்கொண்டுவந்து வணங்க, அவர்களுடன் திருவஞ்சைக்களமென்னுந் தலத்திற்சென்று, ஆலயத்தைப் பிரதக்ஷணம்பண்ணித் திருப்பதிகம்பாடித் துதித்துச் சேரமான்பெருமாணாயனாரோடு அவர் திருமாளிகையிற்சென்று திருவமுதுசெய்து, சிலநாளங்கிருந்து புறப்படும்போது சேரமான பெருமாணாயனார் தம்முடைய பொக்கிஷத்திலுள்ள நிதியையெல்லாம் பல ஆட்களின்மேல் சுமத்தியனுப்பத் திருமுருகன்பூண்டியென்னுந் தலத்துக்குச் சமீபமாக வரும்போது சிவபெருமான் ஆஞ்ஞையால் பூதங்கள் வேடுருக்கொண்டுவந்து அப்பொருளனைத்தையும் பறித்துக்கொண்டுபோய்ச் சுவாமி சந்நிதானத்திற்சேர்த்தன. அதுகண்ட சுந்தர மூர்த்திசுவாமிகள் திருமுருகன் பூண்டியில் ஆலயத்துட்செ

மியை வணங்கி "கொடுகவெஞ்சிலை வடுகவேடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடியமாத்திரத்தில் கடவுள் திருவருளால் அந்தப் பொருளெல்லாம் கோபுரவாயிலில் குவிந்திருக்கக்கண்டு, சுவாமியையவணங்கி, அவற்றை எடுத்துக்கொண்டு முன்னேசெல்ல, ஆட்களை ஏவி அவ்விடத்தை நீங்கிக் கொங்குநாட்டைக்கடந்து, திருவாரூரை அடைந்து, அங்கு சிவதரிதனம் செய்திருந்தனர்.

சிலநாள் சென்றபின் சேரமான்பெருமாணாயனாரைக் காணவிரும்பி, அங்கிருந்து புறப்பட்டுச் சோழதேசத்தைக் கடந்து, கொங்குதேசத்தையடைந்து, திருப்புக்கொளியூரிற் சென்று, அங்கே ஒரு வீதியிலே இரண்டுவீடுகளுள ஒருவீட்டில மங்கல ஒலியும், மற்றொருவீட்டில் அழுகையொலியுமாயிருக்கக்கண்டு, அங்கிருந்த பிராமணர்களை நோக்கி இஃதென்னவென, அவர்கள் வணங்கி ஐந்துவயதுள்ள இரண்டு புதல்வர்கள் குளத்தில் நீராடுகையில, ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றொருவன் பிழைத்துவந்தான. இந்தவீட்டில் முழங்குமோசை பிழைத்துவந்த புதல்வனுக்கு உபநயனம் செய்யும் மங்கல ஓசை ; அந்தவீட்டிலுண்டாமோசை இறந்தபிள்ளையைக்குறித்த அழுகைக்குரலோசை என்றனர். அதுகேட்ட சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவுளமிரங்கி அந்தக் குளத்தருகிற் சென்று அம்முதலை தான்விழுங்கிய புதல்வனை உமிழும்பொருட்டு "உரைப்பா ருரையுகந்துள்கவல்லார்" என்னுந் திருப்பதிகம் பாடியபோது, அம்முதலை பிள்ளையைக் கரையில் உமிழ்ந்தது. தாய் ஓடி அப்பிள்ளையை எடுத்துக்கொண்டுவந்து, நாயகனோடு தானும் சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவடிகளில் விழுந்து நமஸ்காரஞ்செய்தாள்; சுந்தரமூர்த்திசுவாமிகள் அப்புதல்வனை அழைத்துக்கொண்டு, அவிநாசிக்குப்போய்ச் சிவதரிசனஞ்செய்து, திருப்பதிகம்பாடித் திரும்பி, அப்புதல்வன் வீட்டிற்சென்று அவனுக்கு உபநயனஞ்செய்வித்து, அதன் பின்பு மகோதையென்னுந் தலத்திற்சென்று இறங்கியிருக்கையில, ஒருநாள் சேரமான்பெருமாணாயனார் ஸ்நானஞ்செய்யும்போது, சுந்தரமூர்த்திசுவாமிகள் மீண்டும் திருவஞ்சைக் களத்திற்குச் சென்று, அங்குள்ள ஆலயத்தை வலஞ்செய்து, உள்ளேபுகுந்து, சந்நிதியில விழுந்து, நமஸ்கரித்து, எழுந்துநின்று, அழலிற்பட்ட மெழுகுபோல் உள்ளமுருக மயிர்க்குச்செறியக் கண்ணீர்பெருக இரண்டுகைகளும் சிரசின்மேற்குவியத் துதித்து, அடியேனை மாயாகாரியமாகிய இவ்வுலகவாழ்க்கையினின்று நீக்கித் தேவரீருடைய திருவடியிற் சேர்த்தருளவேண்டுமென்னுங் கருத்தோடு "தலைக்குத்தலைமாலை" என்னுந் திருப்பதிகம்பாடியருள, தயாசமுத்திரமாகிய சிவபெருமான், பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி, நீங்கள் சென்று நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானையின்மேலேற்றிக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டார். அவர்கள் அவ்வாறே சென்று சந்நிதானத்தினின்றும் எழுந்தருளுகிற சுந்தரமூர்த்திசுவாமிகளை எதிர்கொண்டு சிவபெருமானுடைய திருவாணையைத்தெரிவிக்க, சுவாமியைவணங்கி வெள்ளையானையின்மேலேறிச் செல்லுகையில் தம்முடைய தோழராகிய சேரமான்பெருமாணாயனாரை நினைத்துசசெல்ல, சேரமான்பெருமாணாயனார் அஃதறிந்து ஓர் குதிரையின்மேலேறி அதிவிரைவாகத் திருவஞ்சைக் களத்துக்குப்போய்ச் சுந்தரமூர்த்திசுவாமிகள் வெள்ளையானையின்மேலேறி அந்தரமார்க்கமாய்ச்செல்வதை யுணர்ந்து, தம்முடைய குதிரையின் [illegible]தில் ஸ்ரீபஞ்சாட்சரத்தை ஓதிய அளவில் அக்குதிரை ஆகாயமார்க்கமாய்ப்போய்ச் சுந்தரமூர்த்திசுவாமிகளேறிச்செல்லும் வெள்ளையா

னையை வலம்வந்து, அதற்குமுன் சென்றது. சேரமான்பெருமாணுய ஞர் படைவீரர்கள் அவரைக் கண்ணுக்குத் தோன்றுமளவும் ஆகாயத்திற் கண்டு பின் காணுமையால் மனவருத்தமுற்றுத் தம் தம் உடைவாளால் உடலைச் சேதித்து வீரயாக்கையைப் பெற்று அந்நாயனுருக்கு முற்ப ட்டு அவரைத் தரிசித்துக்கொண்டு சென்றனர். சேரமான்பெருமாணுய ஞர் முன்செல்லப் பின்சென்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் "தானெனைமுன் படைத்தான்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கைலாசமலை யின் தெற்குவாயிலுக்கு முன் சென்றனர். அங்கு இருவரும் வாகனங்க ளினின்றிறங்கிச் சந்நிதானத்திற்சென்று கைலாசபதியை நமஸ்கரித் தெழுந்து அவருடையதிருவருளால் பழையபடி ஆலாலசுந்தரராய் தாம் முன்செய்துகொண்டிருந்ததிருத்தொண்டுசெய்பவரும் சேரமான்பெருமா ணுயனுர் தம் தொழிலைசெய்பவரும் ஆயினர்.

முன் பூமியின்கண் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முன் போலக் கமலினியும் அனிந்திதையுமாகிப் பார்வதியாருக்குத் திருத்தொ ண்டுசெய்திருந்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் வழியில் திருவாய்ம லர்ந்தருளிய திருப்பதிகங்களை வருணராஜனிடத்துக்கொடுத்தருள அவன் அதைத் திருவஞ்சைக்களத்திற் கொண்டுபோய் விளக்கினன்.

சுந்தரமூர்த்திசுவாமிகளது வயது - கஅ.
முத்தியடைந்தநாள்—ஆடிமாதம் சுவாதிநக்ஷத்திரம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

திவ்வியசரித்திரம்-முற்றிற்று.

சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

வெங்கராவுண்ட பிள்ளையைநல்குமே வெள்ளைவாரண மீதிலிருத்துமே
மங்கைபாகனைத் தூதுநடத்துமே மருவியாறுவழி விட்டுநிற்குமே
செங்கலானது தங்கமதாகுமே திகழுமாற்றிட்ட செம்பொன்னளிக்குமே
துங்கவாம்பரி சேரற்குநல்குமே துலங்குநாவலூர்ச் சுந்தரர்பாடலே.

திருவருட்பிரகாசவள்ளலார் என்னும்
சிதம்பரம் இராமலிங்கபிள்ளையவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய
ஆளுடையநம்பிகளருண்மாலை.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

மதியணிசெஞ்சடைக்கனியைமன்றுணடம்புரிமருந்தைத்
துதியணிசெஞ்சுவைப்பொருளிற்சொன்மாலைதொடுத்தருளி
விதியணிமாமறைநெறியுமெய்ந்நிலையாகமநெறியும்
வதியணித்துவிளங்கவைத்தவன்றொண்டப்பெ

நீற்றிவிட்டநிலையாப்புன்னெறியுடையார்தமைக்கூடிச்
சேற்றிவிட்டகம்பமெனத்தியங்குற்றேன்றனையாளா
யேற்றிவிட்டதிருவடிமையெண்ணியரும்பொன்னையெலா
மாற்றிவிட்டுக்குளத்தெடுத்தவருட்டலைமைப்பெருந்தகையே. (௨)

இலைக்குளீரழைத்ததனிடங்கருறவழைத்ததன்வாய்த்
தலைக்குதலைமதலையுயிர்தனைழப்பவழைத்தருளியநின்
கலைக்கும்வடகலையின்முதற்கலைக்குமுறுகணக்குயர்பொன்
மலைக்குமனுநிலைக்குமுருவன்றொண்டப்பெருந்தகையே. (௩)

வேதமுதற்கலைகளெலாம்விரைந்துவிரைந்தநந்தமுறை
யோதவலவைக்கணுத்துணையுமுணர்வரிதாமெய்ப்பெருமான்
பாதமலர்நினதுதிருப்பணிமுடிமேற்படப்புரிந்த
மாதவம்யாதுரைதருளாய்வன்றொண்டப்பெருந்தகையே. (௪)

ஏழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயென்றுமுன்னிசொன்னபெருஞ்சொற்பொருளை
யாழநினைத்திடிலடியேனருங்கரணங்களைநதுகரைந்
தூழியின்புறுவதுகாணுயர்கருணைப்பெருந்தகையே. (௫)

வான்காணவிந்திரனுமாலயனுமாதவருந்
தான்காணவிறையருளாற்றனித்தவளயானையின்மேற்
கோன்காணவெழுந்தருளிக்குலவியநின்கோலமதை
நான்காணப்பெற்றிலனேநாவலூர்ப்பெருந்தகையே. (௬)

தேன்படிக்குமமுதாமுன்றிருப்பாட்டைத்தினந்தோறு
நான்படிக்கும்போதென்னைநானறியேனுவொன்றோ
வூன்படிக்குமுளம்படிக்குமுயிர்படிக்குமுயிர்க்குயிருந்
தான்படிக்குமநுபவங்காணடணிக்கருணைப்பெருந்தகையே. (௭)

இன்பாட்டுத்தொழிற்பொதுவிலியற்றுகின்றவெம்பெருமா
னுன்பாட்டுக்குவப்புறல்போலூர்பாட்டுக்குவந்திலனொன்
றென்பாட்டுக்கிசைப்பினுமென்னிடும்பாட்டுக்கரணமெலா
மன்பாட்டுக்கிசைவதுகாணருட்பாட்டுப்பெருந்தகையே. (௮)

பரம்பரமாந்துரியமெனும்பதத்திருந்தபரம்பொருளை
யுரம்பெறத்தோழமைகொண்டவுன்பெருமைதனைமதித்து
வரம்பெறநற்றெய்வமெலாம்வந்திக்குமென்றாலென்
றரம்பெறவென்புகல்வேனுன்றனித்தலைமைப்பெருந்தகையே. (௯)

பேரூரும்பாவைமனப்பிணக்கறவெம்பெருமானை
யூரூரும்பலபுகலவோரிரவிற்றூதனெனத்
தேரூருந்திருவாரூர்த்தெருவுதொறுநடப்பித்தா
யாரூரநின்பெருமையயன்மாலுமளப்பரிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

பரவையாரெழினலம் பார்த்துற்றமோகா
பரமனருளொன்று பாடும்விவேகா (சுந்)

நாதனருட்சொப்பனங் கண்டதூய
மாதர்பரவை மனங்கொண்டநேயா (சுந்)

தில்லைவாழந்தண ரெனப்பரசிவனே
திருவாய்மலர்ந்தடி கொடுக்கப்பெற்றவனே (சுந்)

திருத்தொண்டத்தொகையாடிச் சேவித்தவெந்தாய்
திருத்தொண்டர்காப்பண் சிறப்பொடிறைந்தாய் (சுந்)

குண்டையூர்நெல்வரக் கோளிலிப்புகழ்ந்தோய்
அண்டர்சேராரூ ரமர்ந்துநிகழ்ந்தோய் (சுந்)

தண்கோட்புலியன்பர் தந்திடநயந்தோய்
பெண்களைப்பெற்றிடும் பெண்களாய்வியந்தோய் (சுந்)

திருப்புகலூர்பாடிச் செங்கல்லைப்பொன்னாய்
விருப்பொடுபெற்று விளங்கியவன்னாய் (சுந்)

திருப்பனையூராதி சேவித்துக்கீர்த்தி
விருத்தாசலத்தை விழைந்தமெய்ப்பூர்த்தி (சுந்)

பன்னிரண்டாயிரம் பொன்பெறயோகா
மன்னுமுத்தாநதியின் விட்டத்யாகா (சுந்)

திருத்தில்லையாதிய சேவித்தடுத்தாய்
திருவாரூர்வாவியிற் செம்பொனெடுத்தாய் (சுந்)

இட்டமாக்குருகாவூ ரெய்தியதேவே
கட்டமுதியக் களித்துண்டகோவே (சுந்)

கச்சூரன்றரும் பிச்சானமுண்டாய்
பிச்சாடன்செயல் மெச்சியேகண்டாய் (சுந்)

அன்பாகக்காஞ்சியே காம்பரமாதி
இன்பாயங்கார்தல மேத்தியசோதி (சுந்)

உன்னுந்திருவொற்றி யூரைமதித்தாய்
பன்னும்படம்பக்கர் பாதந்துதித்தாய் (சுந்)

அடிமைசெய்சங்கிலி யாரெழில்கண்டோய்
கடிமணஞ்செய்யுங் கருத்ததுகொண்டோய் (சுந்)

மகிழடியினிற்பர வசஞ்செய்துதந்தோய்
மகிழுஞ்சங்கிலியாரை மணஞ்செய்துகந்தோய் (சுந்)

ஆரூருக்கேகாசை யாலடியெடுத்தோய்
காருறுங்கண்டார்க்குக் கண்களைக்கொடுத்தோய் (சுந்)

காஞ்சியைப்பாடியோர் கண்பெற்றுக்கொண்டோய்
வாஞ்சித்தாரூரினில் மற்றைக்கண்கண்டோய் (சுந்)

பரமனைத்தூதாக விரவினில்விட்டோய்
பரவையாரின்பப் பரவையுட்பட்டோய் (சுந்)

ஏயர்கோன்கலிக்காம நாயனார்ச்சேர்ந்தோய்
தூயனருளாலே நேயங்கொண்டார்ந்தோய் (சுந்)

சேரமான்பெருமானுஞ் சேரவிருந்தே
ஆரூர்சிவகா ளமர்ந்தமருந்தே

தேவிபரவையைத் தேர்ந்தருளுங்
காவிரியாற்றைக் கடந்திடப்புரு (சங்)

முருகன்பூண்டசர் முன்றமிழ்தொடுத்தாய
திருடர்கொள்பொன்னைச் செயிவாயிலெடுத்தாய் (சங்)

மதலையணிந்த முதலையிலீந்தாய்
முதலைவிழுங்கின மதலையைத்தந்தாய் (சங்)

வந்துவஞ்சைக்களை வள்ளற்பரிந்தோய்
பந்தத்தொடக்கறப் பாடல்புரிந்தோய் (சங்)

அத்தனருளால் வெள்ளானையையூர்ந்தோய்
பத்தர்சூழ்வெள்ளிப்பருப் பதஞ்சேர்ந்தோய் (சங்)

எங்களையாண்டருள் எம்பெருமானே
மங்களம்மங்களம் வாழிநற்கோனே (சங்)

வேறு.

திருத்தொண்டத் தொகையருள் திருவாய
திசைமுழுதும்புகழ் திசழ்தூய

முத்திவழிக்கொரு கண்மணியே
மூலவிருட்கொரு விண்மணியே

சிவனைப்பெண்பால்தூது செலவிடுத்தோனே
செந்தமிழ்வேதத் தொடைதொடுத்தோனே

தம்பிரான்றோழ னெனும்பெருந்தவனே
சைவத்தவக்கோலந் தாங்குமன்னவனே

வன்றொண்டநாமம் வழங்கக்கொண்டோனே
மன்னுஞ்சிவானந்த மதுவையுண்டோனே

ஆலாலசுந்தரா வானந்தபோதா
காலாந்தகனிலை கண்டருள்நாதா

வேறு:

சுந்தரமணியே சுபமணியே
மந்திரமணியே மனமணியே.

கோளறுமணியே குருமணியே
குருபரசுந்தர சிவமணியே.

வேறு.

வன்றொண்டநாதனை வாழ்த்திடுவோம்
வாழ்த்துமவர்க்குமுடி தாழ்த்திடுவோம்.

பரவைதன்மணவா சரணம்
பாலுளமகிழ்நேசா சரணம்.

வேறு

ஞானசுந்தரா — மோனமந்திரா.

ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடி வாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள்

திருநாளைப்போவார் நாயனார்,

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

திவ்வியசரித்திரங்கள்.



இவை

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கிணங்கச்

சுருக்கமாகத்தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1889.

இதன் விலை பை மூன்று.] [தபாற்கூலி 10 - க்குப் பை. 6.

உ

சிவமயம்.

ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள்

தில்லையிலருளிச்செய்த,

திருச்சாழல்.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ. (க)

என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
றுன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. (உ)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ லல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. (௩)

அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. (௪)


தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. (௫)

அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தஞ்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ. (௬)


மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. (௭)

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
வாலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ
யாலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. (௮)

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. (௯)



திருவாலங்காட்டு இரத்தினசபாபதிசுவாமிகள் திருநடன
ஊர்த்தயுததாண்டவ ஐதீகம்.



திருநாளைப்போவார் நாயனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

நந்தனார் என்னும்

திருநாளைப்போவார்

நாயனார்

திவ்விய சரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

நன்மைதிகழ்மேற்காநாட்டாதனூர்வாழ்நந்தனார்
  புறத்தொண்டர்நாளைப்போக
பொனமலிதென்புலியூர்க்கென்றுரைப்பார்புன்கூர்ப்
  பொய்கையமைந்தடலேறுபிரியநோக்கி
வன்மதில்சூழ்தில்லையிறையருளால்வாய்ந்த
  வண்டழலினிடைமூழ்கிமறையோர்போற்ற
மின்மலிசெஞ்சடைமுநியாயெழுந்துநாதன்
  விளங்குநடந்தொழமன்றுண்மேவினாரே.

திவ்விய சரித்திரம்.

சோழமண்டலத்திலே மேற்காநாட்டிலே ஆதனூரிலே புலையர்குலத்திலே, நந்தனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடைய திருவடிகளையேயன்றி மற்றொன்றையும் மறந்தும் நினையாதவர். அவ்வூரிலே தமக்கு வெட்டிமைக்காக விடப்பட்டிருக்கின்ற மானியமாகிய நிலத்தின்விளைவினாலே சீவனஞ்செய்துகொண்டு, தாம் செய்யவேண்டும் தொழிலை நடத்துகின்றவர். சிவாலங்கள்தோறும் பேரிகைமுதலாகிய ஒருமுகக்கருவிகளுக்கும் மத்

தளமுதலாகிய இருமுகக்கருவிகளுக்கும் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுக்கின்றவர். ஆலயங்களின் திருவாயிற்புறத்தில் நின்றுகொண்டு, அன்பின்மேலீட்டினால் கூத்தாடிப்பாடுகின்றவர். அவர் ஒருநாள், திருப்புன்கூரிலேபோய்ச் சுவாமிதரிசனம்பண்ணித் திருப்பணிசெய்தற்குவிரும்பி, அங்கேசென்று கோயில்வாயிலிலேநின்றுகொண்டு சுவாமியை நேரேதரிசித்துக் கும்பிடவேண்டும் என்றுநினைத்தார். சுவாமி அவருடைய விருப்பத்தின்படியே தமக்கு முன்னிருக்கின்ற இடபதேவரை விலகும்படிசெய்து, அவருக்குக் காட்சிகொடுத்தருளினார். நந்தனார் அந்தஸ்தலத்திலே ஒருபள்ளத்தைக்கண்டு, பெரியகுளமாகவெட்டித் தம்முடைய ஊருக்குத்திரும்பினார். அவர், இபபடியே பலஸ்தலங்களுக்கும்போய்வணங்கித் திருப்பணிசெய்துவந்தார். ஒருநாள், சிதம்பரஸ்தலத்திற்குப் போகவேண்டும் என்று ஆசைகொண்டு, அவ்வாசைமிகுதியினாலே அன்றிரவுமுழுதும் நித்திரைசெய்யாதவராகி விடிந்தபின் நான் சிதம்பரஸ்தலத்திற்குப்போனால் கோயிலினுள்ளே பிரவேசிக்கும் யோக்கியதை என்சாதிக்கு இல்லையே என்று துக்கித்து, இதுவும் சுவாமியினுடைய அருள்தான் என்றுசொல்லிப் போகாதொழிந்தார். பின்னும் ஆசை அதிகரித்தலால், நாளைக்குப்போவேன் என்றார். இப்படியே நாளைக்குப்போவேன் நாளைக்குப்போவேன் என்று அநேகநாட்கள்கழித்தார். அதனால் அவருக்குத் திருநாளைப்போவார் என்னும் திவ்வியதிருநாமம் உண்டாயிற்று.

ஒருநாள் அவர் சிதம்பரதரிசனம் பண்ணவேண்டும் என்னும் ஆசைபிடித்துந்துதலால், தம்முடைய ஊரினின்றும் புறப்பட்டு, சிதம்பரத்தின் எல்லையை அடைந்து, அவ்வூரைச்சுற்றிய மதில்வாயிலிலேபுகுந்து, அங்குள்ள பிராமணர்களுடைய வீடுகளிலே ஓமஞ்செய்யப்படுதலைக்கண்டு, உள்ளேபோதற்கு அஞ்சி, அங்கே நமஸ்கரித்து அவ்வெல்லையை வலஞ்செய்துகொண்டு போவார். இப்படி இராப்பகல் வலஞ்செய்து, உள்ளேபோகக்கூடாமையை நினைந்து வருந்துகின்ற திருநாளைபபோவார், சபாநாயகரை எப்படித் தரிசிக்கலாம்; இந்த இழிந்தபிறப்பு இதற்குத்தடைசெய்கின்றதே என்று துக்கத்தோடும் நித்திரைசெய்தார். சபாநாதர் அவருடைய வருத்தத்தைநீக்கி அவருக்கு அருள்செய்யத் திருவுளங்கொண்டு, அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, நீ இந்தப்பிறப்பு நீங்கும்படி நெருப்பிலேமூழ்கி எழுந்து பிராமணர்களோடும் நம்முடைய சந்நிதானத்தில் வருவாய் என்று அருளிச்செய்து, தில்லைவாழந்தணர்க்கும் சொப்பனத்திலேதோன்றி, அந்தத்திருநாளைப்போவார் பொருட்டு நெருப்பைவளர்க்கும்படி ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினார்.


திருநாளைப்போவார்நாயனார் சரித்திரம்.

தில்லைவாழந்தணர்கள் எல்லாரும் விழித்தெழுந்து, கோயில் வாயிலிலேவந்துகூடி சபாநாயகர் ஆஞ்ஞாபித்தபடி செய்வோம் என்றுசொல்லி திருநாளைப்போவாரிடத்திலே சென்று, ஐயரே! சபாநாயகருடைய ஆஞ்ஞையினாலே இப்பொழுது உமபொருட்டு நெருப்புவளர்க்கும்படி வந்தோம் என்றார்கள். அதைக்கேட்ட திருநாளைபபோவார், அடியேன் உய்ந்தேன் உய்ந்தேன் என்றுசொலலி வணங்கினார். பிராமணர்கள் தென்மதிற்புறத்திலே கோபுரவாயிலுக்குமுன்னே ஒருகுழியிலே நெருப்புவளர்த்து அதைத் திருநாளைபபோவாருக்குபபோய்த் தெரிவித்தார்கள். திருநாளைப்போவார் அந்நெருப்புக்குழியை அடைந்து சபாநாயகருடைய திருவடிகளைமனசிலேதியானம்பண்ணி, அதனை வலஞ்செய்து கும்பிட்டுக்கொண்டு, அதிலுள்ளேபுகுந்தார். புகுந்தநாயனா அந்தத்தேகத்தை ஒழித்து புண்ணியமயமாகிய பிராமணமுனி வடிவங்கொணடு உபவீதத்தோடும சடைமுடியோடும் எழுந்தார். அதுகணடு தில்லை வாழந்தணர்களும் மற்றைச் சிவபத்தர்களும் அஞ்சலிசெய்து களிப்படைந்தார்கள். திருநாளைப்போவார் அவர்கள் உடன்செலலச்சென்று கோபுரத்தை அணுகி, அதனை நமஸ்கரித்து எழுந்து, உள்ளேபோய்க் கனகசபையை அடைந்தார். பின் அவரை அங்கு நின்ற பிராமணர் முதலியோர் யாவரும் காணாமையால் ஆச்சரியங்கொண்டு ஸ்தோத்திரஞ்செய்தார்கள். சபாநாயகர் திருநாளைப்போவாருக்குத் தம்முடைய ஸ்ரீ பாதங்களைக் கொடுத்தருளினார். சுபம! சுபம!!.

திருநாளைப்போவார்நாயனார் முத்தியடைந்தநாள்:—
புரட்டாசிமீ உரோகிணிநக்ஷத்திரம்.

திருநாளைப்போவார்நாயனார்
திவ்வியசரித்திரம்
முற்றிற்று.





சிவபக்தர்வேடங்கொண்ட பரமேஸ்வரர்.

திருக்குறிப்புத்தொண்டர் கற்பாறையில் தலைஉடைத்துக்கொள்ள முயன்ற ஐதீகம்.



பார்வதிசமேதர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் திவ்வியசரித்திரம்

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

கொந்தலர்பூம்பொழிற் கச்சிநகரேகாலிக்குலத்தலைவர்
  தவர்குறிப்புக்குறித்துளரார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீராகின்
  வருந்துமுடலெனவாங்கிமாசுநீத்த
கந்தைபுல ராதொழிய மழையுமாலைக்
  கடும்பொழுதும்வரக்கண்டுகலங்கிக்கன்மேற்
சிந்தமுடிபுடைப்பளவிற்றிருவேகம்பர்
  திருக்கைகொடுபிடித்துயர்வான்சேர்த்தினரே.

திவ்விய சரித்திரம்.

தொண்டைமண்டலத்திலே காஞ்சீபுரத்திலே ஏகாலியர் குலத்திலே சிவனடியார்களுடைய திருக்குறிப்பையறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்கின்றமையால் திருக்குறிப்புத்தொண்டர் எனப பெயர்பெற்ற ஒருபெரியவர் இருந்தார். அவர் மிகுந்த விருப்பத்தோடு சிவபக்தர்களுக்கு வஸ்திரம ஒலித்துக்கொடுத்து வருங் காலத்திலே ஏகாம்பரநாதர் இவரது அன்பின் பெருமையைப் பலருக்கும் தெரிவிப்பான்வேண்டி குளிர்காலத்திலே ஒரு சிவ பத்தர்வேடங்கொணடு, மெலிந்த சரீரத்தையுடைய ஒருவறிய வர்போலாகி, அழுக்கடைந்த கந்தையுடன் அவரிடத்திற்சென்றார். திருக்குறிப்புத்தொண்டர் அவரைக்கண்டு எதிர்கொண்டுவணங்கி பல உபசாரவார்த்தைகளைச்சொல்லி, அவருடைய குறிப்பையறிந்து, உமது கந்தையைத்தந்தருளும் ஒலித்துத் தருகின்றேன் என்றார். சிவபக்தர் வேடங்கொண்ட கடவுள் இந்தக்கந்தை அழுக்கு

அதிகமாக ஏறப்பெற்றுத் தரிக்கப்படுதற்குத் தகுதியில்லாததா யிருந்தாலும் குளிர் மிகுதியினால் வருத்தமுறுகின்றபடியால் கைவிடுதல்கூடாது. அஸ்தமயனத்திற்குமுன் தருவீராயின் கொண்டுபோய்ச் சீக்கிரமாக ஒலித்துக்கொண்டுவாரும் என்றார். திருக்குறிப்புத் தொண்டர் அடியேன் தாழாமல் ஒலித்து அஸ்தமயனத்துக்குமுன் கொண்டுவந்து தருகின்றேன்; தந்தருளும் என்று சொல்ல, சுவாமி விரைவிலேயொலித்து உலர்த்தித்தராதொழிவீராயில் இந்தத் தேகத்துக்குத் துன்பஞ்செய்தீர் என்றுசொல்லி அக்கந்தையை அவர்கையிற்கொடுத்தார். திருக்குறிப்புத்தொண்டர் அதை வாங்கிக்கொண்டு ஒரு குளத்திற்சென்று முன்சிறிதழுக்குப்போக்கி வெள்ளாவியிலவைத்துப்பின் ஒலிக்கப்புகுந்தார். அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே நண்பகலொழிந்து பின்பகல்போலத்தோன்றும்படி மேகங்கள் இரண்டும்ஆகாயவெளி எல்லாம் மறைத்து மழைபெய்தன. அதுகண்டு திருக்குறிப்புத்தொண்டர் சிவபத்தருக்குத் தாம் வாக்குச்செய்ததை நினைந்து இனி நான் யாதுசெய்வேன் என்று கவலையுற்று விரைவிலே மழை விடவுங்கூடுமென்று அங்கேதானேநின்றார். அதுவிடவில்லை; பின் இராக்காலம் வர, திருக்குறிப்புத்தொண்டர் குளிரினாலே திருமேனி நடுங்குகின்ற சிவபத்தருக்கு நான்செய்யவிரும்பிய பணிவிடைஐயையோ! தவறிப்போயிற்றே என்று கீழேவிழுந்தார். மழைவிடாது சிவபத்தர் சுட்டியகாலமோ நீங்கிற்று; முன்னேயே ஒலித்து வீட்டிலே காற்றினால் உலரும்படி கட்டிவிட்டேனுமில்லை. சிவபத்தருடைய திருமேனி குளிரினால் வருந்தும்படி தீங்குசெய்த சிறியேனுக்கு இனி யிதுவே செயல் என்று எழுந்தார் வஸ்திரங்களைப் புடைக்கின்ற கற்பாறையிலே என்னுடைய தலையைச் சிதறும்படி எற்றுவேன் என்று போய்க் கற்பாறையிலே தம்முடைய சிரசை எற்ற, சர்வவியாபியாகிய பரமசிவனுடைய திருக்கரம் அந்தக் கற்பாறையின் பக்கத்திலேதோன்றி அவரைப் பிடித்துக்கொண்டது. ஆகாயத்தினின்றுசொரிந்த நீர்மழைநீங்கிப் பூமழைபொழிந்தது. பரமசிவன் உமாதேவியோடும் இடபாரூடராய்க் காட்சிகொடுத்தார். திருக்குறிப்புத்தொண்டநாயனார் மிகுந்த அன்பினோடு விழுந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிசெய்துகொண்டு நின்றார். பரமசிவன் அவரைநோக்கி, உன்னுடைய பத்திவலிமையை மூவுலகத்தார்களுக்குந் தெரிவித்தோம். இனி நீ நம்முடைய உலகத்தையடைந்து பேரின்பம்பெற்று வாழ்ந்திரு என்று திருவருள்புரிந்து சென்றருளினார். சுபம்! சுபம்!!.

திருக்குறிப்புத்தொண்டநாயனார் முத்தி அடைந்த நாள்:—
சித்திரைமாதம் - சுவாதிநக்ஷத்திரம்.

திருக்குறிப்புத்தொண்டநாயனார்
திவ்விய சரித்திரம்
முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவநாமாவளி.

சிவசிவகஜமுக கணநாதா, சிவகணவந்தித குணநீதா.
சிவசிவசிவசிவ தத்துவபோதா, சிவகுருபரசிவ ஷண்முகநாதா.
அம்பலத்தரசே யருமருந்தே, ஆனந்தத்தேனே யருள்விருந்தே.
பொதுநடத்தரசே புண்ணியனே, புலவரெல்லாம்புகழ் கண்ணியனே.
மலைதருமகளே மடமயிலே, மதிமுகவமுதே யிளங்குயிலே.
ஆனந்தக்கொடியே யிளம்பிடியே, அற்புதத்தேனே மலைமானே.
சிவசிவசிவசிவ சின்மயதேசா, சிவசுந்தரகுஞ் சிதநடராசா.
படனவிவேக பரம்பரவேதா, நடனசபேச சிதம்பரநாதா
அரிபிரமாதியர் தேடியநாதா, அரகரசிவசிவவாடியபாதா.
அந்தணவங்கண வம்பரபோகா, அம்பலநம்பர வம்பிகைபாகா.
அம்பரவிம்ப சிதம்பரநாதா, அஞ்சிதரஞ்சித குஞ்சிதபாதா.
தந்திரமந்திர யந்திரபாதா, சங்கரசங்கரசங்கரநாதா.
கனகசிதம்பர கங்கரபுரஹர, அனகபரம்பர சங்கரஹரஹர.
சகலகலாண்டசராசரகாரண, சகுணசிவாண்ட பராபரபூரண.
இக்கரைகடற்றிடி லக்கரையே, இருப்பதுசிதம்பரச் சர்க்கரையே.
எனனுயிருடம்பொடு சித்தமதே, இனிப்பதுநடராச புநதமுதே.
ஐயர்திருச்சபை யாடகமே, ஆடுதலானந்த நாடகமே.
உத்தரஞான சிதம்பரமே, சித்தியெலாந்தருமம்பரமே.
அம்பலவாசிய மாதேவா, வம்பலவாவிங்கு வாவாவா.
நடராசனெல்லார்க்கு நல்லவனே, நலமெலாஞ்செய வல்லவனே.
ஆனந்தநாடகங் கண்டோமே பர மானந்தபோனகங்கொண்டோமே.
சகளவுபகள நிட்களநாதா, உகளசததள மங்களபாதா.
சந்ததமுஞ்சிவ சங்கரபஜனம், சங்கீதமென்பது சற்சனவசனம்.
சங்கரசிவசிவ மாதேவா, எங்களையாட்கொள வாவாவா.
அரகரசிவசிவ மாதேவா, அருளமுதந்தர வாவாவா.
நடனசிகாமணி நவமணியே, திடநகமாமணிசிவமணியே.
நடமிடுமம்பல, நன்மணியே, புடமிடுசெம்பல பொன்மணியே.
உவட்டாதுசித்திக்கு முள்ளமுதே, தெவிட்டாது தித்திக்குந்தெள்ளமுதே
நடராசவள்ளலை நாடுதலே, நற்றொழிலாம்வினை யாடுதலே.
அருட்பொதுநடமிடு தாண்டவனே, அருட்பெருஞ்சோதியென் றுண்டவ
நடராசமாணிக்கமொன்றதுவே, கண்ணுதலாணிப்பொன்மன்றதுவே[னே
நடராசபலமது நம்பலமே, நடமாடுவதுதிரு வம்பலமே. [டு
நடராசர்பாட்டே நறும்பாட்டு, ஞாலத்தார்பாட்டெல்லாம்வெறும்பாட்
சிதம்பரப்பாட்டே திருப்பாட்டுச், சிவர்கள்பாட்டெல்லாந்தெருப்பாட்டு
அம்பலப்பாட்டே யருட்பாட்டு, அல்லாதபாட்டெல்லா மருட்பாட்டு.
அம்பலவாணனை நாடினனே, அவனடியாரொடுங் கூடினனே.
தம்பதமாம்புகழ் பாடினனே, தந்தனவென்றுகூத் தாடினனே.
நான்சொன்னபாடலுங் கேட்டாரோ, ஞானசிதம்பர நாட்டாரோ.
இனித்துயர்படமாட்டேன் விட்டேனே, என்குருமேலாணையிட்டேனே.
இனிப்பாடுபடமாட்டேன்விட்டேனே, என்னப்பன்மேலாணையிட்டேனே.

(இன்னும்வரும்.)

தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
யானந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. (க0)

நங்காயி தென்னதவ நரம்போடெ லும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. (கக)

கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
யானா லவனுக்கிங் காட்படுவா ராரேடீ
யானாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. (கஉ)

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
யுலகறியத் தீவேட்டா னென்னுமது வென்னேடீ
யுலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. (கங)

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
றான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லா
மூன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. (கச)

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ. (க௫)

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. (க௬)

அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியு
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ
நம்பனையு மாமாகே ளான்மறைக டாமறியா
வெம்பெருமா னீசாவென் றேத்தினகாண் சாழலோ. (கஎ)

நலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
சலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ
ழலராக விடவாழி யருளினன்காண் சாழலோ. (கஅ)

அம்பரமாம் புள்ளித்தோ லாலால மாரமுத
மெம்பெருமா னுண்டசது றெனக்கறிய வியம்பேடீ
யெம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினுந்
தன்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. (க௯)

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கினையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
யருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

புத்தக விற்கிரய விளம்பரம்.

☞ (புத்தகரூபம்) புத்தகலிஸ்ட்டு வேண்டுவோர் தபால்கார்டு எழுதினால் அனுப்பப்படும்.

	விலை. ரூ.	அ.	பை
கந்தரனுபூதியுரை.	0	2	0
திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரம் .	0	0	3
சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம் ...		0	3
திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரம் ..		0	3
காரைக்காலம்மையார் சரித்திரம் ..		0	3
சிறுத்தொண்டநாயனார் சரித்திரம் ..		0	
சண்டேசுரநாயனார் சரித்திரம் ..		0	3
கண்ணப்பநாயனார் சரித்திரம் ..	0	0	3
விவேகசுந்தரம் தொ. க, உ, ௩, ௪, ௫, ௬, எ, அ, (௯ & ௰ In the Press) பிரதி 1	0	0	3
விவேகபோதினி தொ. க, உ, ௩, ௪, ௫, ௬, (எ & அ In the Press) பிரதி 1	0	0	3
கடன்பட்ட கந்தனகதை	0	0	6
புருஷோத்தமவேஷ பூதகிகதை Part I. II.	0	1	0
மனமோகனராஜன் சரித்திரம்		1	
ஏசுகிறிஸ்துமனிதனே		0	
இந்துஜெயபேரிகை ,, நே. க,		0	
,, ,, உ,		0	
,, ,, ௩,		0	
சிவனுந் தேவனா? என்னும் தியாகராவுக்கு ஆப்பு (இரண்டாம் பதிப்பு.)	0	0	6
வஜ்ரடங்கம் ..	0		
கிறிஸ்துமதகண்டனம்	0		
கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு ..	0	2	0
பைபிலும் உலகசிருட்டியின் ஆபாசமும், பாதிரிகளுக்கு ஓர் சம்பத்தி.	0	0	

	விலை. ரூ.	அ.	பை
Bible Dissector (English)	0	0	6
One Hundred & Fifty Contradictions of the Bible (English.) ...	0	1	0
மாதர்நீதி ..	0	6	0
வியாதிமூலங்கள் ...	0	0	0
ஜீவோபகாரம்	0	1	0
தாமபுரீஸ்வரர் கீர்த்தனைகள் பதிகங்கள்	0	2	6
சிறுத்தொண்டநாயனார் கீர்த்தனை .	0	4	0
சிவராமத்துவித போததீனை ...	0	3	0
நீதிமஞ்சரி 1-பாகம் அர்த்தம் ...	0	2	6
,, 2-பாகம் ...	0	6	0
ஔவைக்குறள் மூலம்	0	2	0
சிவசிவவெண்பா சோமேசர் முதுமொழி வெண்பா மூலம்	0	2	0
மாணிக்கவாசகபுராணவசனம் ...	0		0
பழனிசசிவேட்டை வெண்பா ...	0	0	6
திருத்தணிகைச் சந்நிமுறை ...	0	4	0
வாந்திபேதிக்கு வயித்தியம் ..	0	1	0

(1) ஈந்துநகவாசம் நிந்தியாங்கடம் (2) நாணமை நலந்தரும் (3) பேராசை பெருநஷ்டம் (4) அடாதுசெயதோன் படாதுபடுவன் (5) மனக்கவலைபலக்குறைச்சல் (6) குணபூஷணிசரித்திரம் (7) கெடுவான் கேடுநினைப்பான் (8) முயற்சி திருவினையாக்கும். — இ௬.-00-0

பாதிரிமார் ஸ்கூலில் பெண்கள் படிக்கலாமா?

ஞானரத்நாவளி	0	1	0
கந்தபுராணநவநீதம்	0	6	0
ஆர்யஜனஐக்கியம்	0	2	0
திருமங்கிலியதாரணவிதி	0	0	3

உ

சிவமயம்.


திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் ஒருவராகிய,

திண்ணனார் என்னும்

கண்ணப்பநாயனார்

திவ்வியசரித்திரம்.





இஃது

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கியையச்

சுருக்கமாகத்தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி௵ புரட்டாசி௴

1888.

இதன் விலை பை மூன்று.] [தபாற்கூலி 10 - க்குப் பை. 6.

அதைத்தொடர்ந்து பிடிக்கத்தக்க விசையுடனே அதுசெல்லும் அடிவழியே சென்றார். நாணன், காடன் என்கின்ற இரண்டுவேடர்கள்மாத்திரம் அவருக்குப்பின் ஓடினார்கள். அந்தப்பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய், இளைப்பினாலே மலைச்சாரலிலே ஒருமரத்தின்நிழலிலே நின்றது. திண்ணனார் அதைக்கண்டு, அதனைச்சமீபித்து, உடைவாளையுருவி அதனை இருதுண்டாகும்படி குத்தினார். நாணனும், காடனும், இறந்துகிடந்த அந்தப்பன்றியைக்கண்டு, திண்ணனாரை வியந்து வணங்கி, நெடுந்தூரம் நடந்துவந்தபடியால் பசி நம்மை மிகவருத்துகின்றது. நாம் இந்தப்பன்றியை நெருப்பிலே காய்ச்சித்தின்று, தண்ணீர்குடித்து, வேட்டைக்காட்டுக்குச் செல்லப்போவோம் என்றார்கள். திண்ணனார் அவர்களைநோக்கி, இவ்வனத்திலே தண்ணீர் எங்கே இருக்கின்றது. என்றுகேட்க, நாணன் அந்தத்தேக்கமரத்துக்கு அப்பாலேபோனால் மலைப்பக்கத்திலே பொன்முகலியாறு ஓடுகின்றது என்றான் அதைக்கேட்ட திண்ணனார், இந்தப்பன்றியை எடுத்துக்கொண்டுவாருங்கள். நாம் அங்கேதானே போவோம் என்றுசொல்லி அதைநோக்கி நடந்து, அரைக்காதவழி தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற திருக்காளத்திமலையைக்கண்டு, நாணனைநோக்கி நமக்குமுன்னாகத்தோன்றுகின்ற மலைக்குப்போவோம் என்றுசொல்ல, நாணன் இந்தமலையிலே குடுமித்தேவர் இருக்கிறார்; நாம்போனால் கும்பிடலாம், என்றான்.

திண்ணனார், இந்தமலையைக்கண்டு இதை அணுக அணுக என்மேல்ஏற்பட்ட பெரியபாரம் குறைகின்றதுபோலும். இனி உண்டாவது யாதோ? அறியேன் என்றுசொல்லி, அதிதீவிரமாகியவிருப்பத்தோடும் விரைந்துசென்று, பொன்முகலியாற்றை அடைந்து, அதன்கரையிலிருக்கின்ற மரநிழலிலே கொண்டுவந்தபன்றியை இடுவித்துக் காடனைநோக்கி, நீ கடைகோல்செய்து நெருப்பை உண்டாக்கு. நாங்கள் இம்மலையின்மேலேறிச் சுவாமிதெரிசனஞ்செய்துகொண்டுவந்துசேருவோம் என்றுசொல்லி, நாணனோடும் அந்தப் பொன்முகலி நதியைக்கடந்து, மலைச்சாரலை அடைந்து, மலையிலே நாணன்முன்னேற, தாமும் ஏறிச்சென்று சிவலிங்கம் இருந்ததைக் கண்டார். கண்டமாத்திரத்திலே, பரமசிவனுடைய அருட்பார்வையைப்பெற்று, இரும்பானது பரிசனவேதியினாலே உருவம்மாறிப்பொன்மயமானாற்போல, முன்னுள்ள குணங்கள்மாறிச் சிவனிடத்தில்வைத்த அன்புருவமானார். நெடுங்காலம் பிரிந்திருந்த தன்குழந்தையைக்கண்ட மாதாவைப்போலத் தாழாமல் விரைந்தோடி, தோள்கள் நெருங்கும்படி அக்கடவுளைத்தழுவி, மோந்து முத்தமிட்டார். நெடுநேரம் பெருமூச்சுவிட்டுக்கொண்டுநின்று, சரீரம்முழுதிலும் உரோமாஞ்சிதங்கொள்ள இரண்டுகண்ணினின்றும் கண்ணீர்சொரிய, வெயிலிடைப்பட்டமெழுகுபோல மனங்கசிந்துருக, இந்தச்சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரி

யம்? என்றுசொல்லி ஆனந்தங்கொண்டார். ஐயையோ! சிங்கம்,
யானை, புலி, கரடிமுதலிய துட்டமிருகங்கள் சஞ்சரிக்கின்றகாட்
டிலே நீர் யாதொருதுணையுமின்றி வேடர்போலத்தனியேயிருப்ப
தேனது? என்றுசொல்லித் துக்கித்து, தம்முடையகையிலிருந்த வி
ல்லுங்கீழேவிழுந்ததையும் அறியாதவராகிப் பரவசமடைந்தார். பி
ன்ஒருவாறு தெளிந்து, இவருடையமுடியிலே நீரைவார்த்துப் பச்
சிலையையும் பூவையும் இட்டவர்யாரோ என்றார். அப்பொழுது
சமீபத்திலேநின்ற நாணன், நான் முற்காலத்திலே உம்முடையபி
தாவுடனே வேட்டையாடிக்கொண்டு இம்மலையிலே வந்தபொழுது,
ஒருபிராமணன் இவர்முடியிலே நீரைவார்த்து, இலையையும் பூவை
யும் சூட்டி, உணவை ஊட்டி, சிலவார்த்தைகள் பேசினதைக்கண்
டிருக்கிறேன். இன்றைக்கும் அவனே இப்படிச்செய்தான்போலும்
என்றான். அதைக்கேட்ட திண்ணனார் அந்தச்செய்கைகளே திரு
க்காளத்தியப்பருக்குப் பிரீதியாகிய செய்கைகளென்று கடைப்பி
டித்தார். பின்பு ஐயையோ! இவருக்கு அமுதுசெய்தற்கு இறை
ச்சிகொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் இங்கே தனியேயிருக்கி
ன்றார். இறைச்சிகொண்டுவரும்பொருட்டு இவரைப்பிரியவோ மன
முமில்லை. இதற்கு என்னசெய்வேன்? எப்படியும் இறைச்சி கொ
ண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சுவாமியைப்பிரிந்து,
சிறிதுதூரம்போவார், கன்றைவிட்டுப்பிரிகின்ற தலையீற்றுப்பசுப்
போல அவரிடத்திற்குத் திரும்பிவருவார், கட்டியணைத்துக்கொள்
வார்; மீளப்போவார்; அற்பதூரம்போய் அத்தியந்த ஆசையோடு
சுவாமியைத் திரும்பிப்பார்த்து நிற்பார்; சுவாமி! நீர் உண்பதற்
குமிருதுவாகிய நல்ல இறைச்சியை நானே குற்றமறத்தெரிந்து
கொண்டு வருவேன் என்பார்; நீர் யாதொருதுணையுமின்றி இங்கே
தனியே இருக்கிறபடியால் நான் உம்மைப்பிரியமாட்டேன்; உமக்
குப்பசிமிகுந்தபடியால் இங்கேநிற்கவுமாட்டேன்; ஐயையோ! நான்
என்னசெய்வேன்? என்றுசொல்லிக்கொண்டு கண்ணீர் இடைவிடா
துபொழியநிற்பார். பின்பு ஒருவாறு போய்வரத்துணிந்து, வில
லையெடுத்துக்கொண்டு, கையினாலே கும்பிட்டு, சுவாமி சந்நிதான
த்தை அருமையாகநீங்கி மலையினின்றும் இறங்கி, நாணன்பின்னே
வர, பிறவிஷயங்களிலே உண்டாகும் ஆசை பரமாணுப்பிரமாண
மாயும் இன்றி, அன்புமயமாகி முகலியாற்றைக்கடந்து பொன்கரை
யேறி அங்குள்ள சோலையிலே புகுந்தார். அதுகண்டு காடன் எதி
ரேபோய்க் கும்பிட்டு, நெருப்புக்கடைந்து வைத்திருக்கின்றேன்;
பன்றியின் அவயவங்களெல்லாவற்றையும் உம்முடைய ஆடையாள
ப்படிப்பார்த்துக்கொள்ளும்; திரும்பிப்போதற்குவெகுநேரம்சென்று
போயிற்று. நீர் இவ்வளவுநேரம் தாழ்த்தது என்ன என்றான். நாண
ன் அதைக்கேட்டு, இவர் மலையிலே சுவாமியைக்கண்டு அவரைத்
தழுவிக்கொண்டு மரப்பொந்தைப்பற்றி விடாத உடும்பைப்போல

அவரை நீங்கமாட்டாதவராய் நின்றார். இங்கேயும் அந்தச்சுவாமி உண்ணுதற்கு இறைச்சிகொண்டுபோம்பொருட்டு வந்திருக்கிறார்; நமது குலத்தலைமையை விட்டுவிட்டார்; அந்தச்சுவாமிவசமாய்விட்டார்; என்றான். உடனே காடன் திண்ணரே! நீர் என்னசெய்தீர்? என்னபைத்தியங்கொண்டீர்? என்றுசொல்ல, திண்ணனார் அவன்முகத்தைப்பாராமல், பன்றியை நெருப்பிலேவதக்கி, அதினுடைய இனியதசைகளை அம்பினாலே வெவ்வேறாகக்கிழித்து, அம்பிலேகோத்து, நெருப்பிலேகாய்ச்சி, பதமாகவெந்தவுடனே சுவைபார்க்கும்படி, அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டுப் பல்லினாலே மெல்ல மெல்லப் பன்முறை அதுக்கிப்பார்த்து, மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தேக்கிலையினாலே தைக்கப்பட்ட கல்லையிலேவைத்து, இனியனவல்லாத இறைச்சிகள் எல்லாவற்றையும் புறத்திலே உமிழ்ந்தார். அதைக்கண்ட நாணன் காடன் இருவரும் இவர் மிகபைத்தியங்கொண்டிருக்கின்றார். பெறுதற்கரிய இறைச்சியைக்காய்ச்சிப் பலலினால் அதுக்கி, வீணாக உமிழ்கின்றார். மற்றை இறைச்சியைப் புறத்திலே எறிந்துவிடுகிறார். தாம் மிகப்பசியுடையராயிருந்தும, அதனை உணகின்றார் இலலை. எங்களுக்குத் தருகின்றாரும இல்லை; இவர் தெய்வப்பைத்தியங்கொணடிருக்கின்றார். இதனைத்தீர்க்கத்தக்கவழி ஒன்றையும அறியோம். தேவராட்டியையும நாகனையும் அழைத்துக்கொணடுவந்து இதைத்தீர்க்கவேண்டும்; வேட்டைக்காட்டிலேநிற்கின்ற ஏவலாளரையுங்கொண்டு நாம் போவோம என்று நினைத்துக்கொண்டு போனார்கள்.

திண்ணனார் அவ்விருவரும்போனதை அறியாதவராகி, சீக்கிரமாகக் கல்லையிலே மாமிசத்தைவைத்துக்கொணடு, திருமஞ்சனமாட்டும்பொருட்டு, ஆற்றில் நீரை வாயினாலமுகந்து, பூக்களைக்கொய்து, தலைமயிரிலேசொருகி, ஒருகையிலே விலலையும அம்பையும், மற்றக்கையிலே இறைச்சிவைத்த தேக்கிலைக்கலலையையும் எடுத்துக்கொண்டு, ஐயோ! என்னுயிர்த்துணையாகிய சுவாமி மிகுந்த பசியினால் இளைத்தாரோ என்றுநினைந்து இரங்கிப் பதைபதைத்து ஏங்கி, தன்குஞ்சுக்கு இரை அருத்துதற்குத்தாழாதோடுகின்ற பறவைபோல மனோகதியும பின்னிட ஓடிப்போய்க் கடவுளை அடைந்தார். அடைந்து அவருடைய திருமுடிமேல் இருந்தபூக்களைத் தம்முடைய காற்செருப்பினாலமாற்றி, தம்முடையவாயிலிருக்கின்ற திருமஞ்சனநீரைத் தம்முடைய மனசில் உள்ள அன்பை உமிழ்பவர்போலத் திருமுடியின்மேல் உமிழ்ந்து, தம்முடைய தலையில் இருந்த பூக்களைத் திருமுடியின்மேல்வணங்கிச்சாத்தி, தேக்கிலையிலேபடைத்த இறைச்சியைத்திருமுன்னேவைத்து, கொழுமையாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தெரிந்து, அமபினாற்கோத்து நெருப்பிலே பதத்தோடுகாய்ச்சிப் பல்லினால் அதுக்கி, நாவினாலே சு

வைபார்த்துப் படைத்தேன். இவ்விறைச்சி மிக நன்றாயிருக்கின்றது; சுவாமீ! இதை அமுதுசெய்தருளும் என்றுசொல்லி, உணபித்தார். பின்பு சூரியன் அஸ்தமயனமாயிற்று. திண்ணனார் அவ்விரவிலே துஷ்டமிருகங்கள் சுவாமிக்குத் துனபஞ்செய்தலகூடுமென்று அஞ்சி, அமபுதொடுக்கபபட்ட வில்லைக் கையிலேபிடித்துக்கொண்டு, மறந்தும கண்ணிமையாமல் சுவாமிக்குப பக்கத்திலே சாக்கிரதையாக நின்றா. நின்ற திண்ணனார் வைகறையிலே சுவாமிக்கு இறைச்சிகொண்டுவரும்பொருட்டு வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலே போனா. அதுநிற்க.

அறிவு, அருள், அடக்கம், தவம், சிவபக்தி முதலியவைகளெல்லாம திரண்டொருவடிவம் எடுத்தாற்போன்றவரும, நல்வினை தீவினைகளாலவரும் ஆக்கம்கேடுகளிலே சமபுததிபண்ணுகின்றவரும், யாவரையும மோகிபபிக்கவலல மகாசௌந்தரியமுள்ள ஸ்திரீகள் வலியவந்து தம்மைத்தழுவினும பரமாணுபபரிமாணமாயினும் சித்தம் திரியாமல் அவாகளைத் தாயெனமதிக்கும் மகாமுனிவரும், திருக்காளத்தியபபரைத் தினந்தோறும் சைவாகமப்படி அருச்சிப்பவரும் ஆகிய சிவகோசரியார் என்பவா, பிராமமுகூர்த்தத்திலே எழுந்துபோய், பொன்முகலியாற்றிலே ஸ்நாநம்பண்ணி, சுவாமியை அருச்சிக்குமபொருட்டுத் திருமஞ்சனமும பத்திரபுஷ்பமும எடுத்து, சிவநாமத்தைஉச்சரித்துக்கொணடு, சுவாமி சந்நிதானத்திலேபோனார். போம்பொழுது அங்கே வெநத இறைச்சியும எலும்பும் கிடக்கக்கணடு,நடுநடுங்கி,குதித்துப் பக்கத்திலேஓடினார். ஓடிநின்று, தேவாதிதேவனே! தேவரீருடைய சந்நிதானத்தை அடைதற்கு அஞ்சாததுஷ்டராகிய வேட்டுவப்புலையர்களே இநத அநுசிதத்தைச்செய்தாாகள்போலும. அவர்கள் இபபடிச் செய்து போதற்குத் தேவரீா திருவுளம் இசைந்தீரோ என்று சொல்லி, பதறி அழுது விழுந்து புரணடார். பின்பு, சுவாமிக்கு அருச்சனை செய்யாமல் தாழ்த்தலால் பயன்யாது? என்று நினைநது, அங்கே கிடந்த இறைச்சியையும் எலும்பையும்கல்லையையும் திருவலகினலை மாற்றி, சம்புரோக்ஷணம்செய்து, மீளப் பொன்முகலியாற்றிலே ஸ்நானஞ்செய்து திரும்பிவந்து,வேதமந்திரத்தினலேசுத்திசெய்து, உருத்திர சமக நமகத்தினல், சுவாமிக்கு அபிஷேகமபணணி, பத்திரபுஷ்பங்களால் அருச்சனைசெய்தார். செய்து திருமுன்னேநின்று, இரண்டுகைகளையும் சிரசின்மேலேகுவித்து, இரண்டுகண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் சொரிய, திருமேனியெங்கும் மயிர் பொடிப்ப, அக்கினியில் அகப்பட்ட மெழுகுபோல மனம் மிக உருகி, இளகநாத்தழும்ப, கீதநடையுள்ளதாகிய சாமவேதம்பாடினார். பாடியபின் பலமுறை பிரதக்ஷிணமசெய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அருமையாக நீங்கிப்போய் தபோவனத்தை அடைந்தார். அதுநிற்க.

முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலேசென்ற திண்ணனார், பன்றி, மான், கலை, மரை, கடமை என்னுமிருகங்களைக்கொன்று, அவைகளினிறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையில்வைத்து, கோற்றேனைப்பிழிந்து, அதனோடுகலந்து முன்போலத் திருமஞ்சனமும புஷ்பமுமகொண்டு மலையினேலே ஏறி, சுவாமிசந்நிதானத்தை அடைந்து, முன்போலப்பூசைசெய்து, இறைச்சிக்கல்லையைத் திருமுன்னேவைத்து, இந்த இறைச்சி முனகொண்டுவநததுபோலன்று; இவை பன்றி, மான், கலை, கடமை என்கின்ற மிருகங்களின் இறைச்சி; இவைகளை அடியேனும் சுவைத்துப்பார்த்திருக்கின்றேன்; தேனும் கலந்திருக்கின்றது; தித்திக்கும்; என்று சொலலி, உண்பித்து, அவருக்குப்பக்கத்திலே பிரியாமல்நின்றார். அப்பொழுது முதனாட்போன நாணனும் காடனும் ஆகிய இருவராலும தன்புத்திரராகிய திண்ணனாருடைய செய்கைகளை அறிந்தநாணன் ஊணும உறக்கமுமின்றித தேவராட்டியையுங்கொணடுவந்து, திணணனாரைப பற்பலதிறத்தினாலே வசிக்கவும, அவர்வசமாகாமையைக்கண்டு, சிந்தைநொந்து இனியென்னசெய்வோம் என்றுசொலலிக்கொணடு, அவரைவிட்டுத் திருமபிப்போய்விட்டாரகள்.

இருவினையொப்பும் மலபரிபாகமுமுடைய திணணனார் பகற்காலத்திலே மிருகங்களைக்கொன்று, சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும், இராக்காலத்திலே நித்திரைசெய்யாமல சுவாமிக்கு அருகேநின்றும், இப்படித்தொணடுசெய்துவந்தார். சிவகோசரியாரும் தினந்தோறுமவநது, சந்நிதானத்திலே இறைச்சிகிடத்தலைக்கண்டு, இரங்கிச் சுத்திசெய்து, சைவாகமவிதிப்படி அருச்சித்துக்கொண்டு இந்த அநுசிதம் நிகழாமல அருளலவேண்டுமென்று பிரார்த்தித்துவந்தார். திருக்காளத்தியப்பர அந்தச்சிவகோசரியாருடைய மனத்துயரத்தை நீக்குமபொருட்டு ஐந்தாநாள் இராத்திரியிலே அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, அன்பனே ! அவனை வேடுவனென்று நீ நினையாதே, அவனுடைய செய்கைகளைச்சொல்லுவோம் கேள். அவனுடைய உருவமுழுதும நம்மேல்வைக்கப்பட்ட அன்புருவமே. அவனுடைய அறிவுமுழுதும நமமை அறியும அறிவே. அவனுடைய செய்கைகள் எலலாம நமக்கு இதமாகிய செய்கைகளே. நமமுடையமுடியின்மேல உன்னாலேசாததப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன்வைக்கின்ற செருப்படி நம்முடையகுமாரனாகிய சுபபிரமண்ணியனுடைய சாவினும பாரக்க நமக்கு மிகுந்த ஆனநதத்தைத்தருகின்றது. அவன தன்வாயினால என்மேல் உமிழுகின்ற ஜலமானது அன்புமயமாகியஅவனுடையதேகமென்னும் கொள்கலத்தினின்றும ஒழுகுகினறபடியால், கங்கைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களைப் பாரக்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன் தன்னுடைய தலைமயிரிலே செருகிக்கொண

டுவந்து நமக்குச்சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பானது விரிந்து விழுதல்போல விழுதலால், பிரம விஷ்ணுமுதலாகியதேவர்கள் நமக்குச்சாத்தும புஷ்பங்களும் அவைகளுக்குச்சற்றேனும சமானமாகாவாம; அவன நமக்குப்படைக்கின்ற மாமிசம் பதமாகவெநதிருக்கின்றதோ என்று அன்பினால உருகி, இளகியமனசினோடும் மென்று, சுவைபார்த்துப படைக்கப்பட்டபடியால், வேதவிதிப்படி யாகம் செய்கின்றவாகள் தரும் அவியிலும பார்க்க நமக்கு அதிகமதுரமாயிருக்கின்றது. அவன் நமமுடைய சந்நிதானத்தில நின்று சொலலும சொற்கள் நிஷ்களங்கமாகிய அன்பினோடும் நம்மை அன்றி மற்றொருவரையும அறியாது வெளிப்படுதலால் வேதஙகளும மகாமுநிவாகள் மகிழ்ந்துசெய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எலலாவற்றினும் பாாக்க நமக்கு மிக இனியனவாயிருக்கின்றன. அவனுடைய அன்பினாலாகிய செய்கைகளை உனக்குக் காட்டுவோம், நீ நாளைக்கு நமக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்துபார், என்றுசொலலி மறைந்தருளினார். சிவகோசரியாா, சொப்பனவத்தையை நீக்கிச் சாக்கிராவத்தையையடைந்து,பரமசிவன தமக்கு அருளிச்செய்த வாாத்தைகளை நினைந்து நினைந்து அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடுவர்குலத்திலே பிறநத அவருக்கு வேதாகமாதி சாஸ்திரஙகளிலே மகாபாண்டித்தியமுடைய மகாமுனிவாகள்தேவாகளிடத்திலும் காணப்படாதசமானதிகரகிதமாகிய இவ்வளவு பேரன்புவநதது. ஐயையோ! எவ்வு அருமைஎன்று ஆச்சரியமும, இபபடிப்பட்ட பேரன்பர்செய்த அன்பினைசெய்கைகளைப் புழுத்தநாயினும கடையனாகியபாவியேன் அநுசிதம என்று நினைநதேனே! ஐயையோ!இது என்னகொடுமை என்று அச்சமும நாணமும அடைந்து உஷக்காலத்திலேபோய்பபொனமுகலியாற்றிலே ஸ்நானமபணணி, மலையில ஏறி முன்போலச் சுவாமியை அருச்சித்து அவருக்குப பிற்பக்கத்திலே ஒளித்திருநதாா.

சிவகோசரியார் வருதற்குமுன்னே வேட்டையாடுதற்குச்சென்ற திண்ணனார் வேட்டையாடி இறைச்சியும், திருமஞ்சனமும,புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு, அதிசீக்கிரமாகத்திரும்பினாா. திரும்பி வரும்பொழுது பல பல துாச்சகுனங்களைக்கண்டு, இந்தச்சகுனங்களெல்லாம் உதிரங்காட்டுகின்றன. ஆ! கெட்டேன், என் கண்மணிபோன்ற சுவாமிக்கு என்ன அபாயம் சம்பவித்ததோ அறியேனே என்று மனங்கலங்கி அதிசீக்கிரமாக நடந்தார். அடியார்களுடைய பக்திவலையில் அகப்படுகின்ற அருட்கடலாகிய பரமசிவன் திணணனாருடைய அன்புமுழுதையும் சிவகோசரியாருக்குக் காட்டும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, தம்முடைய வலதுகண்ணினின்று இரத்தமசொரியப்பண்ணினார். திண்ணனார் தூரததிலேகண்டு, விரைந்தோடிவந்தார். வந்த உடனே

இரத்தம் சொரிதலைக்கண்டார்;காணவும வாயிலுள்ள திருமஞ்சன ம் சிந்த, கையில் இருந்த இறைச்சி சிதற, அமபும வில்லும விழ, த லையிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்துசோர, ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப்பாவைபோலச் சீக்கிரமா கப் பதைபதைத்து நிலத்திலேவிழுந்தார். விழுந்தவர் எழுந்து போய் இரத்தத்தைப் பலமுறை கையினுலே துடைக்க, அதுகாலு தல் தவிராமையைக்கண்டு, அதற்கு இன்னதுசெய்வோம் என்று அறியாதவராகி, பெருமூச்செறிந்து, திரும்பிப்போய் விழுந்தார். நெடுமபொழுது உள்ளுயிர்த்தல் இன்றி இறந்தவர்கள்போலக்கிட ந்தார். பின் ஒருவாறுதெளிந்து, இப்படிச்செய்தவர்கள் யாவர்? எ ன்று சொல்லிக்கொண்டு எழுந்தார், எங்கும்பார்த்தார்; வில்லையெ டுத்து அம்புகளைத்தெரிந்துகொணடு என்னுடைய சுவாமிக்கு இத் தீங்குவந்தது எனக்குப்பகைவர்களாகிய வேடுவர்களாலோ, இநத வனத்திற் சஞ்சரிக்கின்ற துஷ்டமிருகங்களாலோ, யாதென்றுதெ ரியவிலலையே, என்றுசொல்லி மலைபபக்கங்களிலே நெடுந்தூரமட் டுந் தேடிப்போனூர். வேடாகளையேனும் விலங்குகளையேனுமகா ணுதவராகி, திரும்பிவந்து குறைவில்லாத துன்பத்தினுலே மனம் விழுங்கப்பட்டுச் சுவாமியைக் கட்டிக்கொண்டு இடியேறுண்ட சிங் கேறுபோல வாய்விட்டுக் கண்ணீர்சொரிய அழுதார்; என்னுயிரி னும சிறந்தவரும், அடைநதவர்கள் அன்பினுலே பிரியமாட்டாத ...ரும் ஆகிய சுவாமிக்கு எப்படி இநதத்துன்பம் சம்பவித்ததோ? இதைத்தீர்ப்பதற்கு மருநதொன்றை அறியேனே!ஐயையோ ! இத றகு என்னசெய்வேன்? என்றூர். இந்த உதிரம என்னசெய்தால நிற்குமோ? இந்தத்தீங்கைச் செய்தவர்களைக்காணேன்; வேடர்கள் அம்பினுலாகிய புண்ணைத் தீர்க்கின்ற பச்சிலைமருந்துகளை மலையடி வாரத்திலே பிடுங்கிக்கொண்டுவருவேன் என்றுசொல்லிக்கொண் டுபோனூர். தன்னினத்தைபபிரிந்துவந்த இடபமபோலச் சுவாமி யைப்பிரிந்து வந்ததினுல் வெருட்கொணடு வனங்களெங்குந்திரிந் து, பலவகையாகிய பச்சிலைகளைப்பிடுங்கிக்கொண்டு, சுவாமிமேல் வைத்த மனசிலும் பார்க்க விரைந்துவந்து, அம்மருந்துகளைப்பிழிந் து,அவர்கண்ணிலே வார்த்தார்; அதினுல அக்கணணி விரத்தம த டைபடாமையைக்கண்டு, ஆவிசோர்நது, இனி நானிதற்கு என்ன செய்வேன்? என்று ஆலோசித துக்கொண்டு,நின்றூர்; நிற்க“ஊனுக் கு ஊனிடல்வேணடும” என்னும் பழமொழிஅவருடைய மனதி லே வந்தது. உடனே இனி என்னுடைய கண்ணை அம்பினு லே எடுத்து அப்பினுல் சுவாமியுடைய கணணினின்றுபாயும் இர த்தம் தடைப்படும்; என்று முடிவு செய்துகொண்டு, மனம கிழ்ச்சியோடும் திருமுன்னே இருந்து, அம்பைஎடுத்து,தம்முடை யகண்ணைத்தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பினூர். அ ப்பினமாத்திரத்திலே இரத்தம் தடைப்பட்டதைக்கண்டார், உட

ளே அடங்குதற்கரிய சந்தோஷமாகிய கடலிலே அமிழ்ந்திக்கு திக்குப்பாய்ந்தார்; மலைபோலப் பருத்தபுயங்களிலே கைகளினலேகொட்டி ஆரவாரித்தார்; கூத்தாடினார். நான்செய்த செய்கை நன்று நன்று; என்றுசொல்லி வியந்து,அத்தியந்த ஆநந்தத்தினாலே உன்மத்தர்போலாயினார்; இப்படிச் சந்தோஷசாகரத்திலேஉலாவும் பொழுது திருக்காளத்தியீசுரர அந்தத்திண்ணனாருடைய பேரன்பைச் சிவகோசரியாருக்குப் பின்னுங்காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, தமமுடைய மற்ற இடக்கணணிலும இரத்தம்சொரியப்பண்ணினர். அது திண்ணனாருடைய பிரமாணதீதமாகிய சந்தோஷசாகரத்தை உறிஞ்சியது. அக்கினி நிரயத்துள்ளேவிழுந்து, நெடுங்காலந்துன்பமுற்று, அதனை நீக்கிச் சுவர்க்கத்தை அடைந்து, இன்பமுற்றோனொருவன் பின்னும அந்நிரயத்திலே விழுந்தாற்போல, திண்ணனார் உவமைமாறிக் கரையில்லாத துன்பக்கடலிலே அழுந்தி, ஏங்கி, பின்னர் ஒருவாறுதெளிந்து, இதற்குநான் அஞ்சேன்; மருந்துகைகண்டுகொணடேன்; இன்னும் ஒரு கண்ணிருக்கின்றதே; அதைத்தோண்டிஅப்பி இந்நோயைத்தீப்பேன் என்றுதுணிந்து,தம்முடைய கண்ணைத்தோணடியபொழுது சுவாமியுடையகண் இவ்விடத்திலிருக்கின்றது என்று தெரியும்பொருட்டு, ஒரு செருப்புக்காலை அவர்கண்ணின் அருகிலே ஊன்றிக்கொண்டு பின்னே மனசிலே பூர்த்தியாகிய விருப்பத்தோடும் தமமுடைய கண்ணைத்தோண்டும்படி அம்பைவைத்தார்.

தயாநிதியாகிய கடவுள் அதைச் சகிக்கலாற்றாதவராகி, வேதாகமங்கள்தோன்றிய தமமுடைய அருமைத் திருவாய்மலரைத் திறந்து, "கண்ணப்பா நிற்க" என்று அருளிச்செய்து அவருடைய கண்ணைத்தோணடும கையைத் தம்முடைய திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டார். பிரமாதி தேவர்கள் சமஸ்தரும் வேதகோஷத்தோடும் நிலம்புதையக் கற்பகப்பூமாரிபெய்தார்கள். மகாஞானியாகிய சிவகோசரியார் இந்தச்சமாசார முழுமையுங்கண்டு, அத்தியந்த ஆச்சரியமடைந்து சுவாமியைவணங்கினார்; அற்றைநாள்முதலாகப் பெரியோர்கள் சுவாமிசொல்லியபடியே அவருக்குக் **கண்ணப்பர்** என்னும் பெயரையே வழங்குகிறார்கள். நெடுங்காலமாக உஷ்ணமாகிய அக்கினிமத்தியில நின்று ஐம்புலன்வழியே செல்லாதபடி மனசை ஒடுக்கி,அருந்தவஞ்செய்கின்றவர்களுக்கும் கிட்டாத பரம்பொருளாகிய கடவுள், ஆறுநாளுக்குள்ளே பெருகிய அன்புமேலீட்டினாலே தம்முடைய திருநயனத்தில் இரத்தத்தைக்கண்டு அஞ்சித் தம்முடையகண்ணை இடந்து அத்திருநயனத்தில் அப்புந் திண்ணனாருடைய கையைத் தமது அருமைத்திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டு, நிஷ்களங்க பத்தியையுடைய

கண்ணப்பா! நீ நமக்கு வலப்பக்கத்திலே நில் என்று திருவருள்புரிந்தார். இதைப்பார்க்கிலும் பெறவேண்டிய பெருமைபேறு யாது? சுபம்! சுபம்!!

கண்ணப்பநாயனார் முத்தியடைந்தநாள்:—

தைமாதம் - மிருகசீரிடநக்ஷத்திரம்.

கண்ணப்பநாயனார்

திவ்வியசரித்திரம்-முற்றிற்று.

திருவருட்பிரகாசவள்ளலார்

என்னும்

சிதம்பரம்-இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

கலைமகளார் திருப்பதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தவளமலர்க்கமலமிசை வீற்றிருக்குமம்மனையைச் சாந்தமுத்த, குவளைமலர்க்கண்ணுளைப் பெண்ணருமைப் பெண்ணமுதைக் கோதிலாத, பவளவிதழ்ப்பசுங்கொடியை நான்முகனார்நாவோங்கும் பாவைதன்னைக், கவளமதகயக்கொம்பின் முலையாளைக்கலைமாதைக் கருதுவோமே. (௧)

சங்கம்வளர்ந்திடவளர்ந்த தமிழ்க்கொடியைச் சரச்சுவதிதன்னையன்பா, துங்கமுறக்கலைபயிற்றி யுணாவளிக்குங்கலைஞானத் தோகைதன்னைத், திங்கணுதற்றிருவைபருட் குருவைமலரோங்கியபெண்டெய்வந்தன்னைத், தங்கமலைமுலையாளைக் கலையாளைத்தொழுதுபுகழ் சாற்றுகிற்பாம். (௨)

கலைபயின்றவுளத்தினுக்குங் கரும்பினைமுக்கனியை யருட்கடலையோங்கு, நிலைபயின்றமுனிவரருந் தொழுதேத்தநான்முகனார் நீண்டநாவிற், றலைபயின்றமறைபயின்று மூவுலகுங்காக்கின்ற தாயைவாகைச், சிலைபயின்றநுதலாளைக் கலைவாணியம்மையை நாஞ்சிந்திப்போமே. (௩)

திருச்சிற்றம்பலம்.

புத்தக விற்கிரய விளம்பரம்.

	ரூ.	அ.	பை
	0	2	0
மறுமுறைகண்டவாசகம்	0	2	0
திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரம்...	0	0	3
சுந்தரமூர்த்திசுவாமிகள ச ரம் ...	0	0	3
திருநா கள் சரித்திரம் .	0	0	3
காரைக்காலம்மையார் சரித்திரம் .	0	0	3
சிறுத்தொண்டநாயனார் சரித்திரம்...	0	0	3
சண்டேசுரநாயனார் சரித்திரம் ...	0	0	3
கண்ணப்பநாயனார் ரம ...	0	0	3
விவேகசுந்தரம் நெ. க, உ, ங, ச, ரு, சா, எ, அ, (கூ & கo In the Press) பிரதி 1	0	0	3
விவேகபோதினி நெ. க, உ, ங, ச, ரு, சா, (எ & அ In the Press) பிரதி 1	0	0	3
கடன்பட்ட கந்தன் கதை ...	0	0	6
புருஷார்த்தவேஷ பூதகிகதை Part I. II.	0	1	0
மனமோகனராஜன் சரித்திரம் (in the Press)	0	1	0
ஏசுகிறிஸ்துமனிதனே		0	6
இந்துஜெயபேரிகை நெ. க. ...		0	3
,, ,, நெ உ, ...		0	3
சிவனுந் தேவனு? என்னுந் தியநாவுக்கு ஆப்பு (இரண்டாம் பதிப்பு.)	0	0	6
வஜ்ரடங்கம் ...	0	0	6
கிறிஸ்துமதகண்டனம்	0	1	0
கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு ...	0	2	0
பைபிலும் உலகசிருட்டியின் ஆபாசமும், பாதிரிகளுக்கு ஓர் [illegible]	0	0	3

	ரூ.	அ.	பை
Bible Dissector (English) ...	0	0	6
One Hundred & Fifty Contradictions of the Bible (English.) ...	0	1	0
மாதர்நீதி ...	0	6	
வியாதிமூலங்கள் ...	0	0	
ஜனோபகாரம் ...	0	1	
தர்மபுரீஸ்வரர் கீர்த்தனங்கள் பதங்கள்	0	2	6
சிறுத்தொண்டநாயனார் கீர்த்தனை ...	0	4	0
சிவநாமத்துவித கீர்த்தனை ...	0	8	0
நீதிமஞ்சரி 1-பாகம் அர்த்தம் ...	0	2	6
,, 2-பாகம் ...		6	0
ஔவைக்குறள் மூலம்		[illegible]	0
சிவசிவவெண்பா சோமேசர் முதுமொழி வெண்பா மூலம்	0		0
மாணிக்கவாசக புராணவசனம் ...	0	4	0
பழனிச்சிலேடை வெண்பா ...	0	0	6
திருத்தணிகைச் சந்நிதிமுறை ...	0	4	0
வாந்திபேதிக்கு வயித்தியம் ...	0	1	0
(1) சத்துருசகவாசம் நித்தியசங்கடம் (2) நன்மை நலந்தரும் (3) பேராசை பெருநஷ்டம் (4) அடாதுசெய்தோன் படாதுபடுவன் (5) மனக்கவலைபலத்துறைச்சல் (6) குணபூஷணிசரித்திரம் (7) கெடுவான் கேடுநினைப்பான் (8) முயற்சி திருவினையர்க்கும்.	0—0—க		
பாதிரிமார் ஸ்கூலில் பெண்கள்படிக்கலாமா?			
ஞானரத்நாவளி ..	0	1	0
கந்தபுராணநவநீதம்	0	6	0
ஜனஐக்கியம்	0	2	0
&c. &c.	&c.		

Apply sharp to S. R. Namasivaya Chettiar:— Madras.

சிவனடியார்கள்சரித்திரம்.

பிரதி 1 - க்கு விலை பை மூன்று.

திருஞானசம்பந்தசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
திருநாவுக்கரசுசுவாமிகள்திவ்வியசரித்திரம்
சுந்தரமூர்த்திசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
கண்ணப்பநாயனார் திவ்வியசரித்திரம்.
சிறுத்தொண்டநாயனார் திவ்வியசரித்திரம்
சண்டேசுரநாயனார் திவ்வியசரித்திரம்.
காரைக்காலம்மையார் திவ்வியசரித்திரம்.

100 - க்கு விலை ரூபா. 1—4—0 ; 1,000 க்கு ரூபா 11—0—0
கொஞ்சம் காபிகள்தான் பதிப்பிக்கப்பட்டதாதலின், வேண்டுவோர் உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும.

ஞானரத்நாவளி.

பிரதி 1 - க்கு விலை அணா ஒன்று.

இதில் இந்துமதத்தின் உண்மைகள் அனேகம் பற்பல சாஸ்திர ஆதாரங்கொண்டு விரித்து எழுதப்பட்டுள்ளன.

இஃது இந்துமதப்பிரசங்கிகளுக்கு மிக்கபயன்தரும். இம மதாபிமானிகள் யாவரும் இப்புத்தகத்தை எங்கும பரவச்செய்ய வேணடும்.



கடன்பட்டகந்தன்கதை

புருஷத்துவேஷபூதகிகதை

உ

சிவமயம்.


திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் ஒருவராகிய

விசாரசருமர் என்னும்

சண்டேசுரநாயனார்

திவ்வியசரித்திரம்.





இஃது

ஒந்தூ நாயிமானிகளின் வேண்டுகோளிற் கியையச்

சுருக்கமாகத் தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி௵ ஐப்பசி௴

1888.

இதன் விலை பை மூன்று.] [தபாற்கூலி 10 - க்குப் பை. 6.

இவை பின்னர் புத்தகமாக வெளிவரும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

வடிவுடைமாணிக்கமாலை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

சீர்கொண்டவொற்றிப் பதிவுடையானிடஞ்சேர்ந்தமணி
வார்கொண்டகொங்கை வடிவாம்பிகைதன் மலரடிக்குத்
தார்கொண்டசெந்தமிழ்ப் பாமாலைசாத்தத் தமியனுக்கே
யேர்கொண்டநல்லருள் செய்யுங்குணாலய வேரம்பனே.

திருச்சிற்றம்பலம்.

கடலமுதே செங்கரும்பே யருட் கற்பகக்கனியே
யுடலுயிரே யுயிர்க்குள்ளுணர்வே யுணர்வுள் ளொளியே
யடல்விடையா ரொற்றியா ரிடங்கொண்ட வருமருந்தே
மடலவிழ் ஞானமலரே வடிவுடை மாணிக்கமே. (க)

அணியே யணிபெறுமொற்றித் தியாகர்தம் மன்புறுசற்
குணியே யெம்வாழ்க்கைக் குலதெய்வமே மலைக்கோன்றவமே
பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப்பதிகொள் சிந்தா
மணியே யென்கண்ணுண் மணியே வடிவுடை மாணிக்கமே. (உ)


மானேர் விழிமலைமானே யெம்மானிடம் வாழ்மயிலே
கானேர ளகப் பசுங்குயிலே யருட்கரும்பே
தேனே திருவொற்றி மாநகர்வாழுஞ் சிவசத்தியே
வானே கருணைவடிவே வடிவுடை மாணிக்கமே. (௩)

பொருளே யடியர்புகலிடமே யொற்றிப் பூரணன்றன்
னருளே யெம்மாருயிர்க் காந்துணையே விண்ணவர்புகழுந்
தெருளே மெய்ஞ்ஞானத்தெளிவே மறைமுடிச்செம் பொருளே
மருளேத நீக்குமொளியே வடிவுடை மாணிக்கமே. (௪)

திருமாலுநான்முகத் தேவுமுன் னாண்மிகத் தேடிமனத்
தருமா லுழக்கவன லுருவாகி யமர்ந்தருளும்
பெருமானெம்மா னொற்றிப்பெம்மான் கைம்மான்கொளும் பித்தன்மலை
மருமானிடங்கொள் பெண்மானே வடிவுடை மாணிக்கமே. (௫)

உள்ளேரருட்டெய்வங் காணெண்மனத்து முளைக்கப்படாப்
பொன்னேயப்பொன்னற் புதவொளியே மலர்ப்பொன்வணங்கு
மன்னே யெம்மாருயிர்க் கோருயிரே யொற்றியம்பதிவாழ்
மன்னேரிடம்வளர் மின்னேவடிவுடை மாணிக்கமே. (௬)




உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுள்

ஒருவராகிய

சண்டேசுரநாயனார்

வ்வியசரித்திரம்.

சந்தானசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

வ தமலிசேய்ஞலூ ரெச்சதத்தன் விளங்கிய
ம்மறைபயிலும் விசாரசன்மர்
மெய் [illegible] மை பெருநதாமே

விளங்கும்பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம்,அனுக்கிரகம் என்கின்ற பஞ்சகிர்த்தியங்களையும் செய்வாராகி, ஒருபதி உண்டு என்பதும், அப்பதிக்கு முற்றறிவுடைமை வரம்பிலின்பமுடைமை,இயற்கையுணர்வுடைமை, தன்வயமுடைமை, வரம்பிலாற்றலுடைமை,குறைவிலாற்றலுடைமை என்கின்ற ஆறுகுணங்களும் இன்றி அமையாதன என்பதும், அக்குணங்களெல்லாம் உடைய பதி பரமசிவனே என்பதும் அவர் அத்தொழில் இயற்றுதல்தமது அபின்னபூதியாகிய சிவசத்தியாலாகும் என்பதும்,அது பற்றி அவ்விருவரோ நமக்குப் பரமபிதா மாதாக்கள் என்பதும், அவர்களிடத்தேயே நாம் அன்புசெய்யவேண்டும் என்பதும், அவ்வன்பை மற்றோர் பிறவியில் செய்குவமெனின், அதற்குக்கருவியாச் சிறந்துள்ள இம்மானிடப்பிறவி பெறுதற்கரியது என்பதும, அப்படியாகில் இப்பிறவியிற்றானே இன்னுஞ் சிலநாட்சென்றபின் செய்குவமெனின் இப்பிறவி நீங்குமவதி அறிதற்கரியது என்பதும், அங்ஙனமாகையால் அவ்வன்பு செய்தற்கேயன்றி மற்றொன்றிற்கும் சமயமில்லை என்பதும், அது செய்யுமிடத்தும் நமக்கு ஓர் சாமர்த்தியமுள தெனக்கருதி, அதனை முன்னிடாது திருவருளையே முன்னிட்டு நின்று செய்யவேண்டும் என்பதுமே வேதாகமாதி சமஸ்தசாஸ்திரங்களானும் துணியப்படும் மெய்ப்பொருள் என்றுசந்தேகவிபரீதமறத் துணிந்துகொண்டார். அந்த உண்மையாகிய துணிவுதோன்றவே அவருக்குச் சிவனிடத்தே மெய்யன்பு கலைதோன்றி வளர்வதாயிற்று.

ஒரு நாள் அவர் தம்மோடு அத்தியயனம் செய்கின்ற பிள்ளைகளோடும் அவ்வூரவர்களுடைய பசுநிரைகளுடன் கூடிச்சென்ற பொழுது, ஓரீற்றுப் பசு ஒன்று,மேய்ப்பானாகிய இடையனைக் குத்தப்போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாவத்துக்கு அஞ்சாமல் அப்பசுவைக்கோலினால் அடித்தான். சாஸ்திரஞானம் உள்ளபடி அறிந்த விசாரசருமர் அதுகண்டு, மிகுந்த பதைபதைப்போடும் அவன் சமீபத்திற்சென்று, தீமைபயத்தலின்றி நன்மையே பயத்தலால்விவேகிகளால் பாவமென்று சிறிதும் இகழப்படாது,பெரும்புண்ணியமென நன்கு மதிக்கப்படுகின்ற மகாகோபங்கொண்டு,பின்னும் அடியாதபடி அவனைத் தடுத்துநின்று, பசுக்களின் வரலாற்றையும், அவைதரும் பஞ்சகவ்வியங்கள் சிவனுக்கு அபிஷேகஞ் செய்தற்கு உபயோகித்தலையும், சைவசாதனமாகிய விபூதிக்கு மூலம் அவற்றின் சாணமாதலையும் சிந்தித்து, அந்தப்பசுக்களைத் தாமே மேய்க்கும்படி விரும்பி, அவ்விடையனைநோக்கி, இந்தப்பசுநிரையை இனி நீ மேய்க்கவேண்டியதில்லை; நானே மேய்ப்பேன் என்றார். இடையன் அதைக்கேட்டுப்பயந்து கும்பிட்டுக்கொண்டு போய்விட்டான். விசாரசருமர் பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராமணர்களின் சம்மதிபெற்றுத் தினந்தோறும் மண்ணியாற்றங்கரை

யில் இருக்கின்ற காடுகளிலும், வயலோரங்களிலும, புல்லுநிறைந் திருக்கும் இடத்திற்கொணடுபோய், வேண்டுமட்டும் மேயவிட்டும் தண்ணீரூட்டியும வெய்யிலெறிக்கும்பொழுது நிழலிருக்குமிடங் களிலே செலுத்தியும நன்றாகக்காப்பாற்றி, சமித்துகள் ஒடித்துக் கொண்டு, அஸ்தமயனத்துக்குமுன் அந்தந்தப்பசுக்களை அவரவர் வீட்டுக்கு ஒட்டிக்கொண்டுபோய்விட்டு, தம்முடைய வீட்டுக்குப் போவார்.

இப்படிச்செய்யுங்காலத்திலே பசுநிரைகளெல்லாம் அழகோடு மிகப்பெருகி, போசனபானங்களிலே குறைவில்லாமல் மகிழ்ச்சியடைந்து, இராப்பகல் மடிசுரந்து, பாலை மிகப்பொழிந்தன. பிராமணர்கள் நித்திய ஓமாகுதியின்பொருட்டு விட்டிருக்கின்ற தங்கள் பசுக்கள் விசாரசருமர் மேய்க்கத்தொடங்கியபின் முன்னிலும் அதிகமாகப்பால் கறக்கக்காண்கையால் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார்கள்.பசுக்கள் எல்லாவகை யுபசரிப்பினாலும் அளவிறந்த களிப்பை அடைந்து,வீட்டிலே கட்டப்பட்டிருக்கின்ற தங்கள் கன்றுகள் பிரிந்தாலும் சிறிதும் வருத்தமுறாதவைகளாகி, மிகுந்த அன்போடு தங்களை மேய்க்கின்ற விசாரசருமர் சற்றாயினும் பிரிவாராகில் அப்பிரிவாற்றாமல் தாய்போல உருகி, அவர் சமீபத்திலே சென்று கனைத்து,மடிசுரந்து, ஒருவர் கறக்காமல் தாமேபால்பொழியும். அதுகண்ட விசாரசருமர் அப்பால் பரமசிவனுக்குத் திருமஞ்சனமாந் தகுதியுடைமையை நினைந்தார். நினைக்கவே அவருக்குச் சிவார்ச்சனையினிடத்தே அத்தியந்த பிரியம்உண்டாயிற்று. உடனே அவர் மண்ணியாற்றின்கரையிலிருக்கின்ற ஒரு மணற்றிட்டிலே ஆத்திமரத்தின்கீழே மணலினாலே ஒரு சிவலிங்கங் குவித்து, கோயிலும் கோபுரமும் மதிலும் வகுத்து, ஆத்திப்பூமுதலிய புஷ்பங்களும் பத்திரங்களும் பறித்துப் பூங்கூடையிலிட்டுக்கொண்டுவந்து வைத்துவிட்டு, புதியகுடங்களைத்தேடி வாங்கிக்கொண்டுவந்து கறவைப்பசுக்கள் ஒவ்வொன்றினிடத்திலும் சென்று முலையைத்தீண்டினார். அவைகள் கனைத்துப பாலைப்பொழிந்தன. பாலினாலே நிறைவுற்ற அக்குடங்களைக்கொண்டுபோய் ஆலயத்திலே வைத்து, பத்திரபுஷ்பங்களால் சுவாமியை அருச்சித்து, பாலினால் அபிஷேகஞ் செய்தார். பரமசிவன் அவ்விலிங்கத்தினின்று அவ்விசாரசருமர் அன்போடுசெய்யும அருச்சனையை அங்கீகாரம் செய்தருளினார். விசாரசருமர் சிவபூசைக்கு அங்கமாகிய திருமஞ்சனம் முதலிய பொருள்களுள், கிடையாதவைகளை மானசமாகக் கிடைத்தனவாகக்கொண்டு,நிறைவுசெய்து,விதிப்படி அருச்சித்து, வணங்கிவந்தார். பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டு அவ்விசாரசருமர் கொண்டுவரும் குடங்கள் நிறையப் பாலைச்சொரிந்தும், பிராமணர்க்கும் முன்போலக் குறைவுதீரப் பாலைக்கொடுத்துவந்தன. இப்படி நெடுநாளாகப் பார்ப்பவர்களுக்கு விளையாட்டுபோலத் தோன்

றுகின்ற சிவார்ச்சனையைச்செய்து வரும்பொழுது, அதைக்கண்ட மூடன்ஒருவன் அதின உண்மையை அறியாதவனகி,அதை அவ்வூர்ப் பிராமணர்களுக்குத் தெரிவித்தான்.அவர்கள் அதைச்சபையாருக்குத் தெரிவிக்க, சபையார் எச்சதத்தனை அழைத்து,பிராமணர்கள் ஓமாகுதியின் பொருட்டுப் பால்கறக்கும் பசுக்களை எல்லாம் உம்முடைய புத்திரனுகியவிசாரசருமன் அன்புடனே மேய்ப்பவன் போலக்கொண்டுபோய்ப் பாலைக்கறந்து வீணுக மணலிலேசொரிந்து விளையாடுகிறுன் என்றார்கள். எச்சதத்தன் அதைக்கேட்டுப் பயந்து,சிறுபிள்ளையாகிய விசாரசருமன்செய்கின்ற இந்தச்செய்கையை இதற்குமுன் நான் சிறிதாயினும் அறிந்திலேன். அக்குற்றத்தை நீங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்று குறையிரந்து வணங்கி,இனி அவன் அப்படிச்செய்வானுயின் அக்குற்றம என்மேலதாகும் என்றுசொல்லி அச்சபையாரிடத்திலே அனுமதிபெற்றுக் கொண்டு வீட்டுக்குபபோய்விட்டான்.

மறுநாட் காலையில அந்தச்சமாசாரத்தைச் சோதித்தறிய விரும்பி, விசாரசருமா பசுமேய்க்கப்போனபின்பு, அவர் அறியாதபடி அவர்பின்னே சென்றுன். விசாரசருமர் பசுக்களை ஓட்டி, மண்ணியாற்றின் மணற்றிட்டிலே கொண்டுபோனதைக்கண்டு, எச்சதத்தன் அருகில் இருந்த ஒரு குராமரத்தில் ஏறி,அங்கே நிகழ்வதை அறியும்படி ஒளித்திருந்தான். விசாரசருமர் ஸ்நானம்பண்ணி போல மணலினுலே கோயிலும சிவலிங்கமும் செய்து, பத்திரபுஷ்பங்கள் பறித்துக்கொண்டு வைத்து, பின்பு பாற்குடங்களைக்கொண்டுவந்து தாபித்து, அருச்சனைக்குவேண்டிய பிறவற்றையும் அமைத்து, மிகுந்த அன்பினேடு பூசைக்கு ஆரம்பித்து, சிவலிங்கத்துக்குப் பத்திரபுஷ்பங்களைச்சாத்தி, பாற்குடங்களை எடுத்து அபிஷேகம பண்ணினர், குராமரத்தில ஏறியிருநத எச்சதத்தன் அதைக்கண்டு மிகுந்த கோபங்கொண்டு,சீக்கிரமாக இறங்கிப்போய்த் தன்கையிலிருக்கிற தண்டினுல் அவ்விசாரசருமருடைய முதுகிலே அடித்துக் கொடுஞ்சொற்களைச்சொல்ல அவருடைய மனம் பூசையிலேயே முழுதும பதிந்து கிடந்தமையால் அது அவருக்குப் புலப்படவில்லை. பின்னும் எச்சதத்தன் கோபங்கொண்டு பலமுறையடிக்க விசாரசருமர் அவ்வடியாலாகிய வருத்தந்தோன்றப் பெருதவராகி, அபிஷேகத் திருத்தொண்டினின்றுந் தவறுதிருநதார்.

அவருடைய உள்ளன்பை அறியாத எச்சதத்தன் மிகக்கோபித்து திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினுற் இடறிச்சிந்தினுன். உடனேவிசாரசருமர் அதைக்கண்டு,அதுசெய்தவன் பிதாவும்பிராமணனும் குருவுமாகிய எச்சதத்தனென்பதை அறிந்தும் அவன் செய்தது அதிபாதகமாகிய சிவாபராதமாதலால அவன் காலைத்துணிக்கக்கருதித் தமக்குமுன்கிடந்த ஒருகோலை எடுக்க, அது மழுவாயிற்று. அதினுலே அவன்கால்களை வெட்டினர். சிவபூசைக்கு

வந்த அவ்விடரை நீக்கினவராகிய விசாரசருமர் முன்போல அருச்சனைசெய்ய பரமசிவன் உமாதேவியோடும் இடபாரூடராய்த் தோன்றியருளினார். விசாரசருமர் அதுகண்டு மனங்களித்து, விழுந்து நமஸ்கரித்தார். பரமசிவன் அவரைத் தம்முடைய திருக்கரங்களில் எடுத்து, நீ நம்பொருட்டு உன்னைப்பெற்ற பிதாவை வெட்டினாய். இனி உனக்கு நாமே பிதா என்று அருளிச்செய்து அவரை அணைத்து அவருடைய சரீரத்தைத்தடவி உச்சிமோந்தருளினார். சிவனுடைய திருக்கரத்தினாலே தீண்டப்பட்ட அவ்விசாரசருமருடைய திருமேனிசிவமயமாகித்திவ்வியபிரகாசத்தோடுவிளங்கிற்று. பரமசிவன்நாம் நம்முடையதொண்டர்களுக்கெல்லாம்தலைவனாக்கி, நாம் ஏற்புக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்கும்படி சண்டேசுரபதத்தைத் தந்தோம் என்று திருவாய் மலர்ந்து, தம்முடைய சடையிலே தரித்திருக்கின்ற கொன்றைமாலையை எடுத்து அவருக்குச்சூட்டியருளினார். அவ்விசாரசருமர் சமஸ்ததேவர்களும் ஆரவாரிக்கவும், எவ்விடத்தும் புஷ்பம்பொழியவும், சிவகணங்கள் பாடியாடிக் களிகூறவும், வேதங்கள் கோஷிக்கவும், நானாவிதவாத்தியங்கள் முழங்கவும், சற்சமயமாகிய சைவசமயம் நிலைபெறும்படி, பரமசிவனைக்கும்பிட்டு அவராலே தரப்பட்டசண்டேசுரபதத்தை அடைந்தார். எச்சதத்தர் சிவத்துரோகஞ்செய்தும் சண்டேசுரநாயனாராலே தணடிக்கப்பட்டு அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார். சுபம்! சுபம்!!


சண்டேசுரநாயனார்முத்தியடைந்தநாள்:—

தைமாஉத்திரநக்ஷத்திரம்.

சண்டேசுரநாயனார்

திவ்வியசரித்திரம்

முற்றிற்று.





சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலார் என்னும்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ சிவஷண்முகநாம ஸங்கீர்த்தனலஹரி

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பழுதுநேர்கின்ற வஞ்சகர்கடைவாய்ப் பற்றிநின்றதிற் பயனெதுகண்டாய், பொழுதுபோகின்ற தெழுதியென்னெஞ்சே பொழில்கொளொற்றியம் புரிதனக்கேகி, தொழுதுசண்முக சிவசிவவென நங் தோன்றலார்தமைத் துதித்தவர்திருமுன், பழுதுசொல்லுதுமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (௧)

சூதுநேர்கின்ற மூலச்சியர்பொருட்டாச் சுற்றிநின்றதிற் சுகமெதுகண்டாய், போதுபோகின்ற தெழுதியென்னெஞ்சேபொழில்கொளொற்றியம்புரி தனக்கேகி, யோதுசண்முக சிவசிவவெனவேயுன்னிநெக்குவிட்டுருகி நந்துயரா, மாதுசொல்லுதுமையுற லென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (௨)

ஞாலஞ்செல்கின்ற வஞ்சகர்கடைவாய் நண்ணிநின்றதினலமெதுகண்டாய், காலஞ்செல்கின்ற தெழுதியென்னெஞ்சே கருதுமொற்றியங்கடி நகர்க்கேகிக், கோலஞ்செய் யருட்சண்முகசிவவோங் குழகவோவெனக்கூவி நந்துயரா, மாலஞ்சொல்லுதுமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (௩)

மருட்டிவஞ்சக மதித்திடுங்கொடியார் வாயல்காத்தின்னும் வருந்திலென்பயனோ, விருட்டிப்போகின்ற தெழுதியென்னெஞ்சே யெழில்கொளொற்றி யூரொனுந்தலத்தேகித், தெருட்டிறஞ்செயுஞ் சண்முகசிவவோஞ் சிவநமாவெனச் செப்பிநந்துயரா, மரிட்டை யோது துமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (ச)

இலலையென்பதே பொருளெனக்கொண்டோ ரீனவாயிலிலிட ர்ப்படுகின்று, யெலலைசெல்கின்ற தெழுதியென்னெஞ்சே யெழில் கொளொற்றி யூரொனுந்தலத்தேகித், தொல்லையோஞ்சிவ சண்முக சிவவோந்துயவென்றடி தொழுதுநாமுற்ற, வல்லலோது துமையுற லென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (ரு)

கரவுநெஞ்சினர் கடைத்தலைக்குழன்றாய் கலங்கியின்னுநீகலு ழ்ந்திடிற்கடிதே, யிரவுபோந்திடு மெழுதியுன்னெஞ்சே யெழில் கொளொற்றி யூரொனுந்தலததேகிப், பரவுசண்முக சிவசிவசிவ வோம் பரசுயமபுசங்கர சம்புநமவோ, மரவென்றேத்து மையுற லென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (சூ)

ஏய்ந்துவஞ்சகர் கடைத்தலைவருந்தி யிருக்கின்றாயினிச்சிறு பொழுதுஞ், சாய்ந்துபோகின்ற தெழுதியென்னெஞ்சே தகைகொ ளொற்றியந் தலத்தினுக்கேகி, வாய்நதுசண்முக நமசிவசிவவோம் உரதயம்புசங்கர சம்புவெனவே, யாய்ந்துபோற்று துமையுறலென் லாணைகாணவ ரருள்பெறலாமே. (எ)

சார்ந்தநெஞ்சின ரிடந்தனிலிருந்தே யிடர்கொண்டாயினிச் சி றுபொழுதும், போர்ந்துபோகின்ற தெழுதியென்னெஞ்சே பிறங்கு மொற்றியம் பெருநகர்க்கேகி, யோர்ந்துசண்முக சரவணபவவோ மோஞ்சுயம்பு சங்கரசம்புவெனவே, யார்நதுபோற்று துமையுற லென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (அ)

கமைப்பினீசிலா வஞ்சகர்கடையைக் காத்திருக் கலைகடுகியிப் பொழுது, மிமைப்பிற்போகின்ற தெழுதியென்னெஞ்சே யெழில் கொளொற்றி யூரொனுக்கலத்தேகி, யெமைப்புரந்தசணமுக சிவசி வவோமிறைவ சங்கரவரகரவெனவே, யாரந்துபோற்று துமையுற லென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (கூ)

உறைந்துவஞ்சகர்பால் குறையிரந்தவமே யுழல்கின்றாயினியு ளைக்குமிப்பொழுதுங், குறைந்துபோகின்ற தெழுதியெனனெஞ் சே குலவுமொற்றியங்கோ நகர்க்கேகி, நிறைந்தசண்முக குருநம சிவவோ நிமலசிற்பரவர கரவெனவே, யறைந்துபோறறு துமையு றலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

கண்ணே யக்கண்ணின்மணியேமணியிற்கலந் தொளிசெய்
விண்ணேவியனொற்றியூ ரண்ணல்வாமத்தில வீற்றிருக்கும்
பெண்ணேமலைபெறும் பெண்மணியேதெய்வப் பெண்ணமுதே
மண்ணேயநித்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (எ)

மலையான்றவஞ்செய்து பெற்றமுத்தேயொற்றி வாழ்கனகச்
சிலையான்மணக்க மணக்குந்தெய்வீகத் திருமலரோ
யலையான்மலிகடற் பள்ளிகொண்டோன்றொழு மாரமுதே
கலையானருமை மகளேவடிவுடை மாணிக்கமே. (அ)

காமம்படர்நெஞ் சுடையோர்கனவினுங் காணப்படாச்
சேமம்படர்செல்வப் பொன்னேமதுரச் செழுங்கனியே
தாமம்படரொற்றியூர்வாழ்பவளத் தனிமலையின்
வாமம்படாபைங்கொடியே வடிவுடைமாணிக்கமே. (௯)

கோடாவருட்குணக் குன்றேசிவத்திற் குறிப்பிலரை
நாடாதவானந்த நட்டேமெய்யன்பா நயக்குமின்பே
பீடாதிருவொற்றிப் பெம்மானிடஞ்செய் பெருந்தவமே
வாடாமணிமலராக் கொம்பேவடிவுடை மாணிக்கமே. (௧0)

நாலேயெனுமறையர் தங்களின்னமு நாடியெனைப்
போலேவருந்த வெளியொளியாயொற்றிப் புண்ணியர்தம்
பாலேயிருந்த நினைதங்கையாகப பகரப்பெற்ற
மாலேதவத்திற் பெரியோன்வடிவுடை மாணிக்கமே. (௧௧)

சங்கைகொண்டோனொற்றியூ ரண்ணல்வாமங்கலந்தருள்செய்
மங்கையெல்லாவுலகுந் தந்தநின்னையங் நாரணற்குத்
தங்கையென்கோவன்றித் தாயென்கோசொற் றழைக்குமலை
மங்கையங்கோமள மானேவடிவுடை மாணிக்கமே. (௧௨)

சோலையிட்டார்வயலூ ரொற்றிவைத்துக் தன்றொண்டரன்பின்
மேலையிட்டாற்செயும் பித்தனைமெய்யிடை மேவுகரித்
தோலையிட்டாடுந் தொழிலுடையோனைத் துணிந்துமுன்றண்
பாலையிட்டாயஃ தெனனேவடிவுடை மாணிக்கமே. (௧௩)


தனையாள்பவரின்றி நிற்கும் பரமன்றனியருளாய்
வினையாளுயிர்மல நீக்கிமெய்வீட்டின் விடுத்திடுநீ
யெனையாளருளொற்றியூர் வாழ்வன்றன்னிடத்துமொரு
மனையாளெனநின்ற தென்னேவடிவுடை மாணிக்கமே. (௧௪)

பினனீன்றபிள்ளையின் மேலார்வந்தாய்க்கெனப் பேசுவர்நீ
முன்னீன்றபிள்ளையின மேலாசையுள்ளவா மொய்யசுரர்
கொன்னீன்றபோர்க் கிளம்பிள்ளையையேவக் கொடுத்ததென்னே
மன்னீன்றவொற்றி மயிலேவடிவுடை மாணிக்கமே. (௧௫)


பையாளுமல்குற் சுரர்மடவார்கள் பலருமிச்
செய்யாளும்வெண்ணிற மெய்யாளுமெத்தவஞ் செய்தனரோ
கையாளுநினனடிக் குற்றேவல்செய்யக் கடைக்கணித்தாய்
மையாளுங்கண்ணொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (௧௬)


(இன்னும்வரும்.)





திருநாளைப்போவார்நாயனார்.







மூர்த்திநாயனார்.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

பரஞ்சோதியார் என்னும்

சிறுத்தொண்டநாயனார்

திவ்வியசரித்திரம்.



இஃது

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கிசையச்

சுருக்கமாகத்தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது


சர்வதாரி௵ ஐப்பசி௴

1888

இதன் விலை பை மூன்று.] [தபாற்கூலி 10 - க்குப் பை. 6







காயகா　　　ஈபகே வா　　　பாலசுபபிரமணியா.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள்

ஒருவராகிய

சிறுத்தொண்டநாயனார்

திவ்வியசரித்திரம்.

சந்தனாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

பல்குமருத்துவரதிபா செங்காட்டங் குடிவாழ்
படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ்சோதியார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர்காழி நாடன்திருவருள்
சேரந்தவர் வளருஞ்சீராளன் றன்னை
நல்குதிருவெண்காட்டு நங்கைசமைத்திடப் பின்னன
மதிச்சந்தனத் தாதிதலைக்கறி யிட்டுதவப்
புல்கவரும்வயிரவர்தா மகிழ்ந்து மகவருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தினரே.

திவ்வியசரித்திரம்.

சோழமண்டலத்திலே திருச்செங்காட்டங்குடியிலே ஆமாத்தியர்குலத்திலே, பரஞ்சோதியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆயுள்வேதங்களிலும், படைக்கலத்தொழில்களிலும், குதிரையேற்றம் யானையேற்றங்களிலும், மிகச்சிறந்தவர். வேதாகமங்களின் மெய்ப்பொருளை அறிதல்வேண்டும் என்னும் அவாவினோடு திருவருளை முன்னிட்டுப் பரீட்சித்தமையால் பரமசிவனே மெய்க்கடவுள் என்றும், அவருடைய திருவடிகளை அடைதலே முத்திநெறியென்றும் தெளிந்து, அவருடைய திருவடிகளை அகோராத்திரம் இடைவிடாது அன்பினோடு தியானிப்பவர். சிவனடியார்களுக்கு எக்காலமுந் திருத்தொண்டு செய்பவர். அவர் அரசனிடத்திலே அணுகராகி அவன்பொருட்டு யானைசெலுத்திக்கொண்டு சென்று, அவனோடு மாறுபட்ட பல அரசர்களைவென்று, அவர்கள் தேசங்களைக் கைப்பற்றி, அவனால் நன்குமதிக்கப்பட்டவர். ஒருமுறை உத்தர தேசத்திலே வாதாவியென்னும் நகரத்திற்சென்று, அதனைவென்று பலவகை இரத்தினங்களும் நிதிக்குவைகளும் யானைக்கூட்டங்களும் குதிரைக்கூட்டங்களும் அரசனுக்கு முன்கொண்டுவந்தார்.

அதுகண்டு அரசன் அவருடைய யானையேற்றத்தின் வலிமையை அதிசயித்துப் புகழ்ந்துபேச அவரை அறிந்த மந்திரிகள் அரசனை நோக்கி, மஹாராஜரே! இவர் பரமசிவனுக்குத்திருத்தொண்டுசெய்துவருவதினால்இவ்வுலகத்திலே இவருக்கு எதிராவார் ஒருவருமில்லை என்றார்கள். அரசன் அதைக்கேட்டு,அஞ்சி,நடுநடுங்கி, இரண்டு கண்களினின்றும் சோகபாஷ்பஞ்சொரிய, இவர் எங்கள் கடவுளாகிய பரமசிவனுடைய திருத்தொண்டர் என்பதை உணராது கொடிய போர்முனையிலே விட்டிருந்தேன். ஐயையோ!இது எவ்வளவு கொடியபாவம் என்று சொல்லி பின்புபரஞ்சோதியாரை நோக்கி, சுவாமீ! இக்குற்றத்தைப் பொறுத்தருளலவேண்டும் என்று பிரார்த்தித்து, நமஸ்கரித்தான். பரஞ்சோதியார் அரசன்தம்மைநமஸ்கரித்தற்குமுன் தாம் அவனை நமஸ்கரித்து மஹாராஜரே ! நான் எனதுஉரிமைத்தொழிற்குஅடுத்த திறத்தைச்செய்வேன். அதனால் என்னதீங்கு என்றார். அரசன் அவருக்கு நிறைந்த நிதிக்குவைகளையுமவிருத்திகளையும் கொடுத்து நீர் உம்முடைய நிலைமையை நான் அறியாவண்ணம் நடத்திக்கொண்டு வந்தீர். இனி என் மனக்கருத்துக்கு இசைந்து, எனக்குப் பணிசெய்தலை ஒழிந்து,நீர்விரும்பியவாறே சிவனுக்கும சிவனடியார்களுக்கும் வெளிப்படத் திருத்தொண்டுசெய்யும், என்று விடைகொடுத்தான். பரஞ்சோதியார் விடைபெற்றுக்கொண்டு, தமமுடைய திருப்பதியிற் சென்று, கணபதீச்சரத்தில் வீற்றிருக்கின்ற கடவுளை வணங்கி,அவருக்குத்திருத்தொண்டுகளை வழுவாது செய்வாராயினர். திருவெண்காட்டு நங்கையார் என்னும் மங்கையாரோடுகூடி இல்லறத்தில வாழ்ந்திருந்து, நாடோறும முன்னே சிவனடியார்களைத் திருவமுதுசெய்வித்து, பின் தாம் உண்பார். சிவனடியார்களை மிகுந்த அன்பினோடு வழிபட்டு, அவர்கள் திருமுன்பே மிகச்சிறியராய் ஒழுகுகின்றமையால் அவருக்குச் சிறுத்தொண்டர் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. கணபதீச்சரருடைய திருவருளினாலே அவருக்குத் திருவெண்காட்டு நங்கையாரிடத்திலே சீராளதேவர் என்னும்புத்திரர் அவதரித்தார். அப்பிள்ளைக்கு ஐந்துவயசிலே வித்தியாரம்பஞ்செய்வித்தார். அந்நாளிலே அத்திருப்பதிக்கு எழுந்தருளிவந்த திருஞானசம்பந்தப்பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து, அவரை வணங்கித்துதித்து அவருடைய திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்பெற்றார்.

பரமசிவன் சிறுத்தொண்டநாயனருடைய மெய்யன்பைநுகர்ந்தருளுதற்குத்திருவுளங்கொண்டு உட்சமயங்கள் ஆறனுள் ஒன்றாகிய வைரவத்துக்கு உரிய திருவேடங்கொண்டு, திருக்கைலாசத்தினின்றும் நீங்கி, திருச்செங்காட்டங்குடியை அடைந்து. சிறுத்தொண்டநாயனருடைய வீட்டுவாயிலிற்சென்று, சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கின்றாரோ என்று வினவ,தாதியாராகிய சந்தன நங்

கையார் முன்வந்து வணங்கி, சுவாமீ! அவர் சிவனடியார்களைத்தே டப்புறத்தேபோய்விட்டார். தேவரீர் உள்ளே எழுந்தருளும் என்றார். அவற்கு வைரவர், பெண்கள் இருக்கும்இடத்தில்நாம்தனியே இரோம் என்று அருளிச்செய்ய, திருவெண்காட்டு நங்கையார் அதைக்கேட்டு, இவ்வடியவர் போய்விடுவார்போலும், என்றுபயந்து, விரைந்துவந்து, சுவாமீ! அடியேனுடைய நாயகர் எப்போதும் சிவனடியாரை அமுதுசெய்விப்பர். இன்றைக்கு ஒருவரையுங்காணாமையால் தேடிப்போயினர். தேவரீருடைய திருவேடத்தைக் கண்டாராகில் மிகமகிழ்வர்; இனித்தாழார். இப்பொழுதே வந்துவிடுவார்; எழுந்தருளியிரும ; என்று விண்ணப்பஞ்செய்ய வைரவர் நாம் உத்தரதேசத்திலுள்ளேம் ; சிறுத்தொண்டரைக் காணவந்தேம் ; எப்படியும் அவர் இல்லாதபோது நாம் இங்கே இரோம்; கணபதீச்சரத்தில உள்ளதிருவாத்திமரத்தின்கீழ் இருக்கின்றேம், அவர் வந்தமாத்திரத்தே அவருக்குத் தெரிவியுங்கள் ; என்று சொல்லி,திருவாத்தியை அணைந்து,அதன்கீழ் இருந்தருளினர். சிறுத்தொண்டநாயனர் சிவனடியார்களைத்தேடி எங்குங்காணுது வீட்டுக்குத் திரும்பிவந்து, மனைவியாருக்குச் சொல்லித் துக்கித்தார். மனைவியார், உத்தரதேசவாசியாகிய ஒரு வைரவர் இங்குவந்தார். நாங்கள் இங்கே எழுந்தருளியிருக்கும்படி சொன்னேம்; அவர் அது கேளாது "கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தியின் கீழேபோய் இருக்கின்றேம,நாயகர்வந்தால்அங்கு வரும்படியாய்ச்சொல்என்று சொல்லிச்சென்றார்" என்றார். உடனே, சிறுத்தொண்டர் மிகுந்த விருப்பத்தினேடு விரைந்துசென்று, அவரைக்கண்டு வணங்கி நிற்க, அவர்பெரிய சிறுத்தொண்டர்நீரோஎன்று திருவாய்மலர்ந்தருளினர். சிறுத்தொண்டர் அவரைவணங்கி, சுவாமீ! சிவனடியார்கள் தங்கள் கருணைமேலீட்டினலே அடியேனையே அப்படி அருளிச்செய்வார்கள். அதுநிற்க, இன்றைக்குத் திருவமுது செய்வித்தற்குச் சிவனடியார்களைத் தேடியும காணடிலேன; இப்போது அடியேன்செய்த புண்ணியத்தினலே தேவரீரைக் கண்டேன் ; குறைகள் விண்டேன் ; தேவரீர அடியேன்வீட்டுக்கு எழுந்தருளித் திருவமுது செய்யவேண்டும் ; என்று மிகவணக்கத்துடன் விண்ணப்பஞ்செய்ய வைரவர் அன்பரே ! "நாம் உத்தரதேசத்தில் உள்ளேம. உம்மைக்காணவந்தேம்; நம்மை அமுதுசெய்வித்தல் உம்மால்முடியாது ; அதுமிக அருமை;" என்றார். சிறுத்தொண்டர் தேவரீர அமுதுசெய்யும் இயல்பை அருளிச்செய்யும். சீக்கிரமாகப் பாகம் பண்ணுவிப்பேன். சிவனடியார்கள் தலைப்படின் தேடுதற்கு அரியனவும் எளியனவாம் ; என்று சொல்ல, வைரவர் நாம் ஆறுமாசத்துக்கு ஒருமுறை பசுவைக்கொன்று உண்போம் ; அதற்கு உரியநாளும் இந்நாளேயாம்; அப்படி யூட்டுதல் உம்மாலியலாது என்றார். சிறுத்தொண்டர் மிகநன்று ; அடியேன் அநேகம் பசுக்களை உடை

யேன்;தேவரீருக்குப்பிரீதியாகியபசு இன்னது என்று அருளிச்செய்வீராகில், அடியேன் விரைந்து சென்று, பாகம்பண்ணுவித்துக்காலம் தாழ்க்காமல் வருவேன் ; என்றுசொல்ல வைரவர், நாம் உண்பது நரபசு, அது ஐந்துவயசினை உடையதாயும் அவயவப்பழுதில்லாததாயும் ஒருகுடிக்குத் தான் ஒன்றேயாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சிறுவனை மனமகிழ்ச்சியோடு தாய்பிடிக்கத்தந்தை அரிதல்வேண்டும். இப்படிச் சமைக்கப்பட்ட கறியே நாம் இட்டு உண்பேம் என்றார். சிறுத்தொண்டர், தேவரீர் அமுது செய்வீராகில், அடியேனுக்கு இதுவும் அரிதன்று; என்றுசொல்லி அவரைவணங்கி, விடைபெற்றுக் கொண்டு, வீட்டுக்குப் போயினார். சிறுத்தொண்டருடையவரவை நோக்கிநின்ற மனைவியார் அவருடைய மலர்ந்தமுகத்தைக்கண்டு, அடியாருடைய செய்கையை வினவ, அவர் மனைவியாரை நோக்கி,ஒருகுடிக்கு ஒரேசிறுவனாயும் ஐந்துவயசு உடையனுமாயும் அவயவபபழுதில்லாதவனுமாயும் இருக்கும்ஓர்பிள்ளையை மனமகிழ்ச்சியோடு தாய்பிடிக்கத்தந்தையரிந்து, சமைத்தால் அமுதுசெய்தற்கு உடன்பட்டனர் என்றார். அப்பொழுது மனைவியாா அவ்வடியவரை அவாவிரும்பியபடி அமுதுசெய்விக்கும பொருட்டு, ஒருகுடிக்கு ஒருவனாஞ் சிறுவனைப்பெறுமாறு எங்ஙனம் என்றுசொலல, சிறுத்தொண்டர் என்பிராணநாயகியே! இத்திறத்துச் சிறுவரைவேண்டிய திரவியங்களைக்கொடுத்தால்தருவாருளராயினும் நேர்நின்று அச்சிறுவனை அரியத்துணியுந் தந்தை தாயரோ இல்லை. இனித்தாழாமல் நாம் அருமையாகபபெற்ற சிறுவனையே அழைப்போம் என்றார். மனைவியார் அதற்கு இசைந்து, எங்களைக்காக்கும் பொருட்டு அவதரித்த புதல்வனைப் பள்ளிக்கூடத்தி னின்றும அழைத்துக்கொண்டு வாரும் என்றுசொல்ல, சிறுத்தொண்டர் மனமகிழ்ச்சியோடு பள்ளிக்கூடத்துக்கு விரைந்துசென்று, தமமுடைய புதல்வராகிய சீராளதேவரை எடுத்துத்தோண்மேல் வைத்துக் கொண்டு வீட்டுக்குத்திரும்பிவந்தார். மனைவியார் எதிரவந்து, புதல்வரைவாங்கி, திருமஞ்சனம் ஆட்டிக்கோலஞ் செய்து, நாயகர் கையிற்கொடுத்தார். அவர் அடுக்களையிற் செல்லாது உலகததவர்கள் அறியாவண்ணம் ஓர் மறைவிடத்திற் கொண்டு போனார். அப்பிள்ளையைப் பெற்றதாயார் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டுவந்தார். தந்தையார் புதல்வரை எடுத்து அவருடையதலையைப்பிடிக்கத் தாயார் அப்புதலவருடைய இரண்டு கால்களையும் தம்முடைய மடியிலேயிடுக்கி, அவர் கைகள் இரண்டையும் தம்முடையகைகளிலேபிடிக்க அப்புதல்வர் தம்முடைய தந்தைதாயார் மிகமகிழ்கின்றனர் என்று, மகிழ்ந்து,நகைசெய்ய, தந்தையார் மனமகிழ்ச்சியோடு ஆயுதத்தினாலே அவருடையதலையை அரிதலாகிய அரியசெய்கையைச் செய்தார். அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று கழித்து, அதனை மறைத்து நீக்கும்பொரு

ட்டு,சந்தனநங்கையார் என்னுந் தாதிகையில்கொடுத்து,மற்றையுறுப்புகளின் இறைச்சிகள் எல்லாவற்றையும்அறுத்துப்பாகம்பண்ணி, வேறுகறிகளும் அமைத்து சோறும் சமைத்து, நாயகருக்குத் தெரிவித்தார்.நாயகராகிய சிறுத்தொண்டர் பெருங்களிப்புடையராகி, விரைந்துசென்று, திருவாத்தியின்கீழ் இருந்த வைரவரை வணங்கி, சுவாமீ!தேவரீர் பிரியப்படிப் பாகம்பண்ணுவித்தேன். எழுந்தருளிவந்துதிருவமுது செய்தருளல் வேண்டும், என்று விண்ணப்பஞ்செய்து அவரைவீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்,ஆசனத்திலஇருத்திஅவருடைய திருவடிகளை ஜலத்தினால் விளக்கி அந்தத்தீர்த்தத்தைத் தங்கள் சிரசின்மேலேதெளித்து வீடெங்கும் புரோக்ஷித்து, தூபதீபங்களால் அருச்சித்துவணங்கினார்.மனைவியாராகிய திருவெண்காட்டுநங்கையார பரிகலந்திருத்தி, அன்னமும் கறியமுதும் படைத்தார். வைரவர் அதைப்பார்த்து, நாம்சொலலிய முறையே கொன்ற பசுவினது உறுப்புகள் எல்லாவற்றையும் பாகம் பண்ணினீரா? என்று வினவ, திருவெண்காட்டுநங்கையார், தலை இறைச்சிமாத்திரம் திருவமுதுக்கு ஆகாது என்று கழித்துவிட்டோம என்றார். வைரவர் அதுவும நாம் உண்பது என்றார், அதுகேட்டு சிறுத்தொண்டர் மனைவியாரோடும் திகைத்து அயர, சந்தனநங்கையார, நான் அத்தலை இறைச்சியை அடியவா அமுதுசெய்யுமபொழுது நினைக்கவரும் என்று முன்னமே பாகம்பண்ணி வைத்தேன் என்று எடுத்துக்கொடுக்க, திருவெணகாட்டுநங்கையார் முகமலர்ந்துவாங்கிப்படைத்தார். அதன்பின், வைரவர் சிறுத்தொண்டரைநோக்கி, நாம் தனியே உண்ணோம்; சிவனடியார்களைக்கொண்டுவாரும் என்று அருளிச்செய்ய, சிறுத்தொண்டர் ஏங்கி ஐயோ! அடியவர் திருவமுது செய்தற்கு இடையூறு இதுவோ என்று நினைத்து வீட்டுக்குப்புறத்திலேபோய், சிவனடியார்களைத் தேடிக்காணாது, துக்கத்தோடு திரும்பிவந்து,வைரவரைவணங்கி,சுவாமீ! சிவனடியார்களைக்காணேன்;அடியேன் திருநீறு இடுவோரைக் கண்டு அன்னங்கொடுப்பேன் என்று விண்ணப்பஞ்செய்ய வைரவர் சிறுத்தொண்டரை நோக்கி உம்மைப்போலத் திருநீறு இட்டார் உளரோ நீர் இருந்து உண்ணும் என்றுசொல்லி, பின்திருவெணகாட்டுநங்கையாரைநோக்கி, இருவருக்குச் சோறுங்கறியும் படையும் என்று அருளிச்செய்ய, அவரும்படைத்தார்;சிறுத்தொண்டர் வைரவரை ஊட்டவேண்டி உண்ணப்புகலும் வைரவர் தடுத்தருளி, ஆறுமாசத்துக்கு ஒருமுறை உண்ணுகிற நாம் உண்ணுமளவும் தரியாமல், எப்பொழுதும் உண்ணுகினற நீர்முன் உண்பது என்? உம்முடன் உண்ணுமபொருட்டு, உமக்குப் புத்திரன் உண்டேல், அழையும் என்றார. சிறுத்தொண்டர் இப்போது அவன்உதவான் என்றுசொல்ல,வைரவர் அவன் வந்தாற்றான் நாம்உண்பேம். போய்அழையும் என்றார். சிறுத்தொண்டர் தரியாது எழுந்து,மனைவியாரோடு விரைந்துவீட்

டுக்குப்புறத்திலேபோய் 'சீராளா! வா என்று அழைக்க, மனைவியாரும் நாயகரது பணியில் நிற்பாராகி, சீராளனே! சிவனடியார் அடியேங்கள் உய்யும்பொருட்டு உடனுண்ண, உன்னை அழைக்கின்ருர் வா என்று அழைத்தார். அப்பொழுது அப்புதல்வர் பரமசிவனது திருவருளினுலே பள்ளிக்கூடத்தினின்று ஓடிவருபவர்போல வந்தார்.

தாயார் அவரை எடுத்துத்தழுவி, நாயகர் கையிற்கொடுக்க, அவர் இனிச்சிவனடியார் அமுதுசெய்யப் பெற்ருேம் என்று மனமிகமகிழ்ந்து அப்புதல்வரைவிரைவிற்கொண்டு, அடியவரை அமுதுசெய்வித்தற்கு உள்ளேவந்தார். அதற்குமுன வைரவர் மறைந்தருள, சிறுத்தொண்டர் அவரைக்காணுமையால் மனங்கலங்கி, திகைத்துவிழுந்தார். கலத்திலே இறைச்சிக்கறியமுதைக்காணுமையால் அச்சமுற்ருர். வைரவர் அடியேங்கள் உய்யும்பொருட்டுத் திருவமுதுசெய்யாமல் எங்கே ஒளித்தனரோ என்று தேடிமயக்கங்கொண்டு, புறத்திற்செல்ல, அச்சிறுத்தொண்டர்செய்தது நிஷேதானுட்டானமாயினும், அவர் சிவானந்தானுபவமேலிட்டு நிற்கையால கருவிகரணங்கள் தற்போதச்சீவிப்பாய் நின்றுசெய்யாது, சிவபோதச்சீவிபபாய் எழுந்துசெய்தமைபற்றி அதனை விகிதானுட்டானமாகவே கொணடருளிய பரமசிவன் அரிபிரமேந்திராதிதேவர்கள் முனிவர்கள் முதலாயினேர்சேவிக்க, உமாதேவியோடும் சுப்பிரமணிய சுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினுர். சிறுத்தொண்டரும் மனைவியாரும் புதல்வரும் தாதியாரும ஆகிய நால்வரும் அவர்களைத்தரிசித்து, ஆனந்த பாஷ்பம் சொரிய, எலும்பும் மனமும் நெக்கு நெக்குருக, பரவசமாய்விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலியஸ்தர்களாகி நின்று, ஸ்தோத்திரம் பண்ணினுர்கள். பின்பு பரமசிவனும் பார்வதியம்மையும் சுப்பிரமணியசுவாமியும் அவர்கள் நால்வரையும், தங்களை எக்காலமும் பிரியாது வணங்கிப்பேரின்பத்தை நுகர்ந்துகொண்டிருக்கும் பொருட்டு, உடன்கொண்டு திருக்கைலாயத்தை அடைந்தார்கள். சுபம்! சுபம்!!

சிறுத்தொண்டநாயனுர் முத்தி அடைந்தநாள்:—
சித்திரைமூ பரணிநக்ஷத்திரம்.

சிறுத்தொண்டநாயனுர்
திவ்விய சரித்திரம்
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலார் என்னும்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சிவசிதம்பரசங்கீர்த்தனம்.

[illegible]

திருச்சிற்றம்பலம்.

[illegible]

[illegible] (௧)

[illegible]

[illegible] (௨)

[illegible] (௩)

[illegible]

சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

நமச்சிவாய ஸங்கீர்த்தனலகரி

திருச்சிற்றம்பலம்.

சொல்லவாவியதொண்டர்தம்மனத்திற் சுதந்தரங்கொடுதோன்றிய துணை
யைக், கல்லவாவியவேழையேனெஞ்சுங்கரைந்துவக் கிடக்கலந்திடுங்களிப்
பை, செல்லவாவியபொழிற்றிருவொற்றித்தேனைத்தில்லைச்சிற்றம்பலத்தா
டு, நல்லவாழ்வினைநான்மறைப்பொருளைநமச்சிவாயத்தைநான்மறவேனே.

அட்டமூர்த்தமதாகியபொருளை யண்டராதியோரறிகிலாத்திறத்தை
யிட்டவேட்கையர்க்கங்கையிற்கனியை வேதமூலத்தைவித்தகவிளைவை
யெட்டரும்பரமானந்தநிறைவை யெங்குமாகிநின்றிலங்கியவொளியை
நட்டமாடியநடனநாயகத்தை நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௨)

உம்பர்வான்றுமரொழித்தருள்சிவத்தை யுலகெலாம்புகழுத்தமப்பொருளை
த், தம்பமாயிலாண்டமுந்தாங்குஞ் சம்புவைச்சிவதருமத்தின்பயனைப்
பம்புசீரருள்பொழிதருமுகிலைப் பரமஞானத்தைப்பரமசிற்சுகத்தை
நம்பினோர்களைவாழ்விக்குநலத்தை நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௩)

மாலினுச்சிமேல்வதிந்தமாமணியை வழுத்துநாவகமணக்குநன்மலரைப்
பாலினுள்ளினிதோங்கியசுவையைப்பத்தர்தம்முளம்பரிசிக்கும்பழத்தை
யாலினோங்கியவானந்தக்கடலை யம்பலத்திலாமமுதைவேதங்க
ளாலினொற்றியூரமர்ந்திடுஞ்சிவத்தை நமச்சிவாயத்தைநான்மறவேனே. ()

உண்ணிறைந்தெனையொளித்திடுமொளியையுண்ணவுண்ணமேலுவட்டிடு
நறவைக், கண்ணிறைந்ததோர்காட்சியையாவுங் கடந்தமேலவர்கலந்திடு
முறவை, யெண்ணிறைந்தமாலயன் முதற்றேவர் யாருங்காண்கிலாவின்
பத்தினிறைவை, நண்ணியொற்றியூரமர்ந்தருள்சிவத்தைநமச்சிவாயத்தை
நான்மறவேனே. (௫)

திக்குமாறினுமெழுகடற்புவிமேற் சென்றுமாறினுஞ்சேண்விளங்கொளிக
ளுக்குமாறினும்பெயலின்றியுலகி லுணவுமாறினும்புவிகளோரேழு
மிக்குமாறினுமண்டங்களெல்லாம் விழுந்துமாறினும்வேதங்களுணரா
நக்கனையபிரானருட்டிருப்பெயரா நமச்சிவாயத்தைநான்மறவேனே. ()

பெற்றதாய்தனைமகமறந்தாலும் பிள்ளையைப்பெறுந்தாய்மறந்தாலு
முற்றதேகத்தையுயிர்மறந்தாலு முயிரைமேவியவுடன்மறந்தாலுங்
கற்றநெஞ்சகங்கலைமறந்தாலுங் கண்கணின்றிமைப்பதுமறந்தாலு
நற்றவத்தவருள்ளிருந்தோங்கு நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௭)

உடையுடுத்திடவிடைமறந்தாலு முலகுளோர்பசிக்குணமறந்தாலும்
படையெடுத்தவர்படைமறந்தாலும் பரவைதானலைப்பதுமறந்தாலும்
புடையடுத்தவர்தமைமறந்தாலும் பொன்னைவைத்தவப்புதைமறந்தாலு
நடையடுத்தவர்வழிமறந்தாலு நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௮)

வன்மைசெய்திடும்வறுமைவந்தாலு மகிழ்வுசெய்பெருவாழ்வுவந்தாலும்
புன்மைமங்கையர்புணர்ச்சிநேர்ந்தாலும் பொருந்தினாலுநின்றாலுஞ்சென்
றாலும், தன்மையில்லவர்சார்பிருந்தாலுஞ் சான்றமேலவர்தமையடைந்தா
லு, நன்மையென்பனயாவையுமளிக்குநமச்சிவாயத்தைநான்மறவேனே.

இன்னும்பற்பலநாளிருந்தாலு மிக்கணந்தனிலேயிறந்தாலுந்
துன்னும்வான்கதிக்கேபுகுந்தாலுஞ் சோர்ந்துமாநரகத்துழன்றாலு
மென்னமேலுமிங்கெனக்குவந்தாலு மெம்பிரானெனக்கியாதுசெய்தாலு
நன்னெஞ்சகநாடிநின்றோங்கு நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.



திருக்குறிப்புத்தொண்டநாயனார்.



காரைக்காலம்மையார்.

[illegible]

[illegible]

புனிதவதியார் என்னும்

காரைக்காலம்மையார்

திவ்விய சரித்திரம்.



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சிவனடியார்கள் சரித்திரம்.

பிரதி 1-க்கு விலை பை மூன்று.

திருஞானசம்பந்தசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
திருநாவுக்கரசுசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
சுந்தரமூர்த்திசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
கண்ணப்பநாயனார் திவ்வியசரித்திரம்.
சிறுத்தொண்டநாயனார் திவ்வியசரித்திரம்.
சண்டேசுரநாயனார் திவ்வியசரித்திரம்.
காரைக்காலம்மையார் திவ்வியசரித்திரம்.
திருநாளைப்போவாநாயனார் சரித்திரம்.
திருக்குறிப்புத்தொண்டநாயனார் சரித்திரம்.
மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம்.
திருநீலகண்டநாயனார் சரித்திரம்.
இயற்பகைநாயனார் சரித்திரம்.

(மாணிக்கவாசகசுவாமிகள், திருநீலகண்டநாயனார், இயற்பகைநாயனார் சரித்திரங்களுக்கு:) இவை கூடியசீக்கிரம் வெளியாகும்.

100-க்கு விலை ரூபா. 1—4—0 : 1,000-க்கு ரூபா 11—0—0
கொஞ்சம் புத்தகங்கள்தான் பதிப்பிக்கப்பட்டதாகையின், வேண்டியவர் உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஞானரத்நாவளி.

பிரதி 1-க்கு விலை அரை [illegible].

இதில் இருபத்[illegible] சாஸ்திர ஆதாரங்களோடு விரித்து எழுதப்பட்டுள்ளன.

[illegible]

இந்துஜயபேரிகை.


தொ. க. . . (, in the Press)

பிரதி 1-க்கு விலை பை மூன்று.

[illegible] எழுதப்படுகின்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



திருவாலங்காடு [illegible] ரத்னசபாபதி சந்நிதியில் [illegible]

[illegible]



[illegible] வதியார் என்னும் காரைக்காலம்மையார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

புனிதவதியார் என்னும்

காரைக்காலம்மையார்

திவ்விய சரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

நயமருவுபதிக்காரைக்கால்வணிகன்மிக்க
தனதத்தன்றரும்புனிதவதியார்மாவின்
செங்கனியீசனருளாலழைப்பக்கணவ
திறற்கணவனிரியத்தருத்தேசாங்க
மெய்வடிவிழந்தருமுருவடையாளேவி
யம்மையேயெனவீசனப்பாவென்று
பொங்குவடகயிலைபணிந்தாலங்காட்டிற்
புக்கனடமலரடிதம்போற்றினரே.

திவ்விய சரித்திரம்.

பெருமையுடைத்திலே யிருந்த வளம்பொங்கொண்டிருந்த காரைக்காலிலே வைசியகுலச்சிரேஷ்டராகிய தனதத்தச்செட்டியாரென்பவரொருவர் இருந்தார். அவருக்குப்புனிதவதியார் என்கின்ற ஒருபுத்திரியார் பிறந்தார். அந்தத்தனதத்தர் அப்புத்திரியாரை நாகபட்டணத்திலே இருக்கின்ற நிதிபதி என்பவனுடைய புத்திரனாகிய பரமதத்தனுக்கு விவாகஞ்செய்து கொடுத்து, தனக்குவேறுபிள்ளை இல்லாமையால், அவனை நாகப்பட்டணத்திற்குப்போகவிடாமல், தன்னுடைய வீட்டிற்கு அருகிலே ஒருவீடுகட்டுவித்து அளவற்ற திரவியங்களையுங்கொடுத்து, கணவனோடு அதிலிருத்தினான். பரமதத்தன் அந்தச்செல்வத்தை விருத்திசெய்து, இல்லறத்தை ஒழுங்குபெற நடத்திவந்தான். அவன் மனைவியாராகிய புனிதவதியார், பரமசிவனுடைய திருவடிகளின்மேல் அன்பு மேன்மேலு … இல்லறத்திற்கு வேண்டுவனவற்றை வழுவாது செய்வா … தம்முடையவீட்டிற்குச் சிவனடியார்கள் வரின் அவ … அமுதூட்டி, அவரவர்வேண்டியபடி பொன், இரத்தின … ரம் முதலாயின உதவுவார். இவ்வாறு நிகழுங்காலத்திலே, … பரம

தத்தனிடத்திற் காரியமூலமாக வந்தவர்களுட் சிலர் அவனுக்கு இர
ண்டு மாம்பழங் கொடுக்க, அவன் அவைகளை வாங்கிக்கொண்டு அவர்
கள் கருத்தை முடித்து, அவைகளை மனைவியாரிடத்திற்கு அனுப்பி
விட்டான். மனைவியார் அவைகளை வாங்கிவைத்தபின்பு சிவனடி
யார் ஒருவர் பசியினால் வருந்தி, அவர் வீட்டிற் சென்றார். புனிதவ
தியார் அவ்வடியவருடைய நிலைமையைக்கண்டு மனம்வருந்தி, அவரைய
ழைத்துச் சோடசோபசாரங்கள் செய்து, ஆசனத்திருத்தி, கலத்தை
வைத்துச் சோறுபடைத்து, அந்நேரத்திலே கறியமுது பாகம் பண்ண
ப்படாமையால், சிவனடியவரோ பெறுதற்கு அரிய விருந்தினராய்
வந்தபொழுதே இதைப்பார்க்கிலும் பெறவேண்டியபேறு நமக்கு
ஒன்றும் இல்லை என்று நினைந்து, தமது கணவன் அனுப்பிய
மாம்பழங்கள் இரண்டினுள் ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து படை
த்து, அவ்வடியவரை அமுதுசெய்வித்தார். அடியவர் சோற்றையும் மா
ங்கனியையும் உண்டு, புனிதவதியாருடைய செய்கையை உவந்து போ
யினார். போயினபின் பரமதத்தன் நடுப்பகலிலே வீட்டிற்குவந்து
போசனம் பண்ணும்பொழுது, மனைவியார் எஞ்சியிருந்த மாங்கனி
யைக்கொண்டுவந்து, கலத்திலே வைத்தார். பரமதத்தன் அம்மாங்க
னியமுதன்ன அந்தக்கனியை உண்டு, அதன் இனிய சுவையினாலே திரு
ப்தியடையாமல் மனைவியாரை நோக்கி, பெண்ணே! மற்றக்கனியை
யுங் கொண்டுவருவாய் என்றான். மனைவியார் கொண்டுவரச்செல்ப
வர்போல உள்ளேபோய்நின்றுகொண்டு, யோசிக்குஞ் சமயத்தில் நினை
க்கின்ற மெய்யன்பர்களுக்கு உற்றவிடத்து உதவுபவராகிய சிவபெருமானுடை
ய திருவடிகளைத் தியானித்தார். உடனே பரமேஸ்வரனுடைய கரு
ணையினாலே, அதிமதுரமாகிய ஒருமாங்கனி அவர் கையில்வந்து இரு
ந்தது. அவர் அதைக்கொண்டுவந்து, கணவனுடைய கலத்திலே
இட்டார். அவன் அதனை உண்டு, அதன் சுவை தேவாமிர்தத்தைப்பா
ர்க்கிலும் மிகச்சிறந்திருந்தமையால், இது முன்னான் தந்த மாங்கனிய
ன்று; மூவுலகங்களிலும் பெறுதற்கு அரியது; இதனை நீ எங்கே
பெற்றாய் என்றான். மனைவியார் அதைக்கேட்டு, தமக்குத் திருவருள்
உதவியதிறத்தை வெளிப்படுத்துவது தகுதி அன்றென நினைத்தமை
யால் நிகழ்ந்ததைச் சொல்லமாட்டாதவரும், கணவனுக்கு உண்மை
யை மறுத்துக்கூறுதலும் தகுதியன்றென நினைந்தமையால், அ
தனைச்சொல்லாது விடமாட்டாதவருமாய் வருந்தி நின்று, பின்
நிகழ்ந்தபடி சொல்லுவேன் என்று துணிந்து, "சுவாமி! தாங்கள் இர
ண்டு மாம்பழங் ... அனுப்பியபிறகு இவ்விடம் ஒரு அடியவர் மிகப்பசி
கொ ... ரார். அந்நேரம் கறியமுது ஒன்றும் சித்தமாகா
திரு ... ர் கொடுத்தனுப்பிய கனிகளில் ஒன்றைவைத்து
அவரு ... ணம் அளித்தேன். பிறகு தாங்கள் மற்றொருகனி
யைக் ... ற்கு நான் யாது செய்வேன் என்று வருந்தி கரு
ணைக் ... பரமேஸ்வரனைத் தியானித்து நின்றேன். அவரு

டைய திருவருளினாலே இந்தக்கனி என்கையிலேவந்து இருந்தது" என்றார். பரமதத்தன் அதை நம்பாதவனாகி, மனைவியாரை நோக்கி, இக்கனி சிவபெருமானுடைய திருவருளினாலே கிடைத்ததாயின், இன்னும் ஒருகனி அவருடைய திருவருளினாலே அழைத்துத்தா என்றான். புனிதவதியார் அவ்விடத்தைவிட்டுப் போய்ப் பரமசிவனைத்துதித்து, இன்னும் ஒருகனி தந்தருளீராகில் அடியேனுடையவார்த்தை பொய்யாய்விடும் என்றுசொல்ல, சுவாமியுடையதிருவருளினாலே ஒருமாங்கனி அவர்கையில்வந்துஇருந்தது. அவர் அதைக்கொண்டுவந்து தன்கணவன்கையிற்கொடுக்க, அவன் ஆச்சரியமடைந்து வாங்கினான். வாங்கியபழத்தைப் பின்காணாதவனாகி மிகுந்தபயங்கொண்டு மனந்தடுமாறி, அப்புனிதவதியாரைத் தெய்வமென நினைந்து, அவரைப்பிரிந்து வாழவேண்டும் என்று துணிந்து, தன்கருத்தைப்பிறருக்கு வெளிப்படுத்தாமல் அவரோடு தொடர்பின்றி ஒழுகினான். ஒழுகு நாளிலே, ஒரு மரக்கலஞ்செய்வித்து, தான்செல்லவிரும்பிய தேசத்திலே விரும்பப்படுகின்ற அரும பண்டங்களை யெல்லாம்அதனிடத்து நிறைய ஏற்றி, சுபதினத்திலே சமுத்திரராஜனாகிய வருணனைத் தொழுதுகொண்டு, மாலுமி முதலியாரோடும் ஏறி, அத்தேசத்தை அடைந்து வர்த்தகஞ்செய்து, சில நாளாயினபின், மீண்டும் அம்மரக்கலத்திலேறி, பாண்டிநாட்டிலுள்ள ஓர் நகரத்தை அடைந்து, அங்குள்ள ஒரு வைசியனுடைய மகளை விவாகஞ்செய்துகொண்டு, மகா ஐசுவரியத்தோடும்வாழ்ந்துகொண்டிருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே ஒரு பெண் குழந்தைபிறந்தது. அவன்தான் கூடிவாழ்தற்கு அஞ்சி நீங்கியமனைவியாரைத் தான்தொழும் தெய்வமாகக்கொண்டு அவருடைய புனிதவதியார் என்னும்பெயரையே அந்தப்பெண்ணுக்கும் இட்டான்.

பரமதத்தன் இப்படி இங்கே இருக்க, புனிதவதியார் காரைக்காலிலே கற்பினோடு இல்லறத்தைவழுவாது நடத்திக்கொண்டுவந்தாள். அவருடைய உறவின்முறையோர்களுட்சிலர் வர்த்தகத்தின்பொருட்டுச்சென்ற பரமதத்தன்பாண்டிநாட்டிலே ஓர்நகரத்திலேசெல்வத்தை விருத்திசெய்துகொண்டும் வேறோர் கலியாணஞ்செய்து இல்லறநடத்திக்கொண்டும் இருக்கின்றான் என்று கேள்வியுற்று, அவனிடத்திற் சிலரை அனுப்பி, அவனுடைய நிலையை உள்ளபடி உணர்ந்து, கவலைகூர்ந்து, புனிதவதியாரைத்தாமே அவனிடத்திற்குக்கொண்டுபோய்விடவேண்டும் என் [illegible] சிவிகையிலேற்றிக்கொண்டுசென்று, அவனிருக்கிற நகரத்து [illegible] பித்து, தாம் புனிதவதியாரைக்கொண்டுவந்தமையை அசா [illegible] பித் தெரிவித்தார்கள். அவன் அதனை அறிந்து [illegible] தன்னுடைய இரண்டாம மனைவியோடும் மகள [illegible] பாரிடத்திற்குவந்து அடியேன் உமமுடையகருத்த [illegible] ன்றேன்; இந்தப்பெண்ணுக்கு உமமுடையபெயரே [illegible], என்

றுசொல்லிக்கொண்டு, அவளுடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். உடனே புனிதவதியார் தம்முடைய சுற்றத்தார்களிடத்திலே அச்சத்தோடும் ஒதுங்கிநிற்க, அவர்கள்வெட்கி, பரமதத்தனைநோக்கி, நீ உன்னுடையமனைவியை வணங்கவேண்டியகாரணம் யாது? என்றார்கள்; அதற்குப் பரமதத்தன், நான் இவரிடத்திலே ஒருபெரிய அற்புதத்தைக்கண்டபடியால் இவர்தெய்வப்பெண்ணேயன்றி மானிடப்பெண்ணன்றுஎன்றுதுணிந்து இவரைப்பிரிந்தேன்;இவரைநான்தொழுமதெய்வம என்றுகொண்டமையால,நான்பெற்ற இந்தக்குழந்தைக்குஇவர்பெயரையேதரித்தேன்; அதுபற்றியே இவருடையதிருவடியையுமவணங்கினேன்;நீங்களும் இவரைவணங்குங்கள் என்றான். அதுகேட்ட உறவினர்கள், இது என்ன ஆச்சரியம் என்றுதிகைத்து நின்றார்கள். புனிதவதியார் கணவன்சொல்லிய வார்த்தையைக்கேட்டு, பரமசிவனுடைய திருவடிகளைச்சிந்தித்து, சுவாமீ! இவனுடையகொள்கை இது;இனி இவன்பொருட்டுத்தாங்கிய அழகுதங்கிய தசைப்பொதியை நீக்கித்தேவரீரைசூழ்ந்துநின்று துதிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத்தந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். அந்தக்கணத்தே அக்கடவுளுடைய திருவருளினாலே மாமிசம முழுதையும் உதறி, எற்புடம்பாக மண்ணுலகமும் விண்ணுலகமுமவணங்கும்பேய்வடிவமாயினார்; அதுகண்ட உறவினர்கள் எல்லாரும அஞ்சி அவரை நமஸ்கரித்துக்கொண்டு போய்விட்டார்கள்; புனிதவதியார் தமது உள்ளத்திலே சிவசத்தியால விளக்கப்பட்ட சிற்சத்திகொண்டு, அற்புதத்திருவந்தாதியும, திருவிரட்டைமணிமாலையும் பாடியருளினார்.

அற்புதந்திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர்.

உரையினிவ்விம்மாலையந்தாதிவெண்பா
கரைவினற்காரைக்காற்பேய்ச்சொற்—பரவுவார்
ஆராதவன்பினோடண்ணலைச்சென்றேத்துவார்
பேராதகாதல்பிறந்து.

திருச்சிற்றம்பலம்.

திருவிரட்டைமணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

கிளர் [illegible]துயர்வந்தடும்போதஞ்சிநெஞ்சமென்பாய்
தளர் [illegible]விர்திகண்டாய்தளராதுவந்தி
வளர் [illegible]யும்வானத்திடைவளர்கோட்டுவெள்ளை
மிளா மருக்கும்மிருக்குஞ்சென்னியீசனுக்கே.

காரைக்காலம்மையார் சரித்திரம்.

வெண்பா.

உத்தமராய்வாழ்வாருலந்தக்காலுற்றூர்கள்
செத்தமரமடுக்கித்தீயாமுன்—உத்தமனுய்
நீளாழிநஞ்சுண்டநெய்யாடித்தன்றிறமே
கேளாழிநெஞ்சேகிளர்ந்து.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத்கைலாயகிரிக்குப் போகவிரும்பி, புறப்பட்டு, மனசினுப்பார்க்க ரிருந்தவேகத்தோடு சென்று, அந்தக்கைலாசகிரியின்பக்கத்தை அடைந்து, அங்கே காலினல் நடத்தல் தகுதி அன்றென்று ஒழிந்து, தலையினலே நடந்துபோய் மலையிலேறினர்; ஏறும்பொழுது, உமாதேவியார் அதைக்கண்டு, புனிதவதியாருடைய திடபத்தியைக்குறித்து உலகமாதாவாகிய உமாதேவியாரே ஆச்சரியம அடைந்தாராயின், நாம் எவ்வளவு ஆச்சரியம் அடைதலவேண்டும் என்று சிந்திக்கச் செய்யும்பொருட்டுத் தாம் ஆச்சரியமுடையவராகி, அவரது பக்திமகிமையை உயர்வொப்பிலலாத பரமசிவனுடைய திருவாக்கினலேயே நமக்கு உணர்த்துவித்து நமமை உய்விக்கத் திருவுளங்கொண்டு, அக்கடவுளை வணங்கிநின்று, சுவாமீ! இங்கே தலையினல் நடந்து ஏறிவருகின்ற எற்புடம்பை உடையவரது அன்பின மகிமையாது ? என்றுகேட்க, பரமசிவன் இங்கேவருகின்றவள் நம்மைத்துதிக்கின்ற அம்மை என்றறி; இந்தப்பெருமைபொருந்திய வடிவத்தையும வேண்டிப்பெற்றூள் என்றூர. பின் புனிதவதியாகச் சமீபத்தில் வந்தவுடனே உலகமெல்லாம் உய்யும்பொருட்டு அவரைநோக்கி, அமமையேஎன்று அழைத்தார். அதுகேட்ட புனிதவதியார், அப்பா ? என்று சொல்லிக்கொண்டு, அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்தார. சுவாமி அவரைநோக்கி,உனக்குவேண்டும்வரம் யாது என்று வினவ, புனிதவதியார் வணங்கிநின்று, சுவாமி! அடியேனுக்கு இனிப்பிறவாமையேவேண்டும்; பிறக்கினும் தேவரீரை ஒருகாலமும் மறவாமைவேண்டும். இன்னும் தேவரீர் திருத்தஞ் செய்யும்பொழுது, தேவரீருடைய திருவடியின்கீழே சிவாநந்தத்தை உடையேனுகி,தேவரீரைப்பாடிக்கொண்டே இருத்தல்வேண்டும் என்றூர். சுவாமி அவரைநோக்கி, நீ தென்றிசையிலுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தைத்தரிசித்து, பேரானந்தத்தோடு நம்மைப்பாடிக்கொண்டு இரு [illegible] [illegible]ரிச்செய்தார். அதுகேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நம[illegible]ரித்து அநுமதிபெற்றுக்கொண்டு திருவாலங்காட்டுக்குத் தலையி[illegible] [illegible]சென்று, சுவாமியுடைய திருநடனத்தைத்தரிசித்[illegible], [illegible]திரங்கி" எனபதை முதலிலுடைய மூத்த திருப்பதி[illegible] "எட்டியிலவமீகை" என்பதை முதலிலுடைய திருப்[illegible] [illegible]டியருளினர்.

அம்மைமூத்த திருப்பதிகம் - பண் - நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந்து குண்டுகண்வெற்பக்குழிவயிற்றுப், பங்கிசிவந்திருபற்கணீண்டு பரடுயர்நீள்கணைக் காலோர்பெண்பேய், தங்கியலறியு லறுகாட்டிற்றாழ்சடை யெட்டுத்திசையும் வீசி, யங்கங்குளிர்ந்தன லாடுமெங்களப்பனிடந் திருவாலங்காடே.

கள்ளிக்கவட்டிடைக் காலைநீட்டிக் கடைக்கொள்ளிவாங்கிமசித்துமையை, விள்ளவெழுதி வெடுவெடன்னநக்கு வெருண்டுவிலங்குகாட்டிற், றுள்ளித்துடித்துச் சுடுபிணத்திச்சுட்டிட முற்றுஞ் சுழிந்துபூழ்ந்தி, யள்ளியவிக்கநின்றாடு மெங்களப்பனிடந் திருவாலங்காடே. (௨)

வாகைவிரிந்து வெண்ணெற்றொலிப்ப மயங்கிருள்கூர் நடுநாளையாங்கே, கூகையோடாண்டலை பாடவாந்தைதோ டதன்மேற் குதித்தோடிவீசி, யீகைபடர் தொடர்கள்ளி நீழலீமமிடுசுடுகாட்டகத்தே, யாகங்குளிர்ந்தன லாடுமெங்களப்பனிடந் திருவாலங்காடே. (௩)

குண்டிலோமக்குழிச் சோற்றைவாங்கிக்குறுநரிதின்னவதனை முன்னே, கண்டிலோமென்றுகனன்றுபேய்கள் கையடித்தோடிடுங்காட ரங்கா, மண்டிலநின்றங்குளாளமிட்டு வாதித்துவீசியெடுத்த பாத, மண்டமுறநிமிர்ந்தாடு மெங்களப்பனிடந் திருவாலங்காடே.

விழுதுநிணத்தைவிழுக்கியிட்டு வெண்டலைமாலை விரவிப்பூட்டிக், கழுதுதன்பிள்ளையைக் காளியென்று பேரிட்டுச் சீருடைத் தாய்வளர்த்துப், புழுதிதுடைத்து முலைகொடுத்துப் போயினதாயைவரவுகாணா, தழுதுறங்கும்புறங் காட்டிலாடுமப்பனிடந் திருவாலங்காடே. (௫)

பட்டடிநெட்டுகிரப் பாறுகாற்பேய் பருந்தொடுகூகை பகண்டையாந்தை, குட்டியிடமுட்டை கூகைபேய்கள் குறுநரிசென்றிணங்காடுகாட்டிற், பிட்டடித்துப் புறங்காட்டி விட்டபிணந்தினைப போகப்பிரட்டியாங்கே, யட்டமேபாயநின் றாடுமெங்களப்பனிடந் திருவாலங்காடே. (௬)

சுழலுமழல் விழிக்கொள்ளி வாய்ப்பேய் சூழ்ந்துதுணங் கையிட்டோடியாடித், தழலுளெரியும் பிணத்தைவாங்கித் தான்றடி நின்றிணங் காடுகாட் [illegible] ழலொலியோசைச் சிலம்பொலிப்பக் காலுயர் வட்ட [illegible] ட்டுகட்ட, மழலுமிழ்ந்தோரி கதிக்கவாடுமப்பனிடந் திரு [illegible] லா [illegible] டே. (௭)

[illegible] கருங் [illegible] துசென்று நன்னெறிநாடிநயந்தவனை, முடிமு
துபிலை [illegible] திட்ட டமுன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக், காடுங்க
டலு [illegible] யுமண் [illegible] விண்ணுஞ் சுழலவனல்கையேந்தி, யாடுமராப்பு
[illegible] ங்களப [illegible] ந் திருவாலங்காடே. (௮)

துத்தங்கைக் கிளைவிளரி தாரமுழை யிளியோசைபண்கெழும ப்பாடிச், சச்சரிகொக்கரை தக்கையோடுதகுணிச் சந்துந்துமிதாள ம்வீணை, மத்தளங்கரடிகை முன்கைமென்றோற் றமருகங்குடமு ழா மொந்தைவாசித், தத்தன்மைவினோடாடு மெங்களப்பனிடந்தி ருவாலங்காடே. (௯)

புந்திகலங்கி மதிமயங்கியிறந்தவரைப் புறங்காட்டிலிட்டுச், ச ந்தியிலவைத்துக் கடமைசெய்து தக்கவரிட்டசெந்திவிளக்கா, மு ந்தியமரர்முழ விழைசைதிசைகதுவச் சிலம்பார்க்கவார்க்க, வந்தி யின்மாநடமாடு மெங்களப்பனிடந் திருவாலங்காடே. (௰)

ஒப்பிணையில்லவன்பேய்கள் கூடியொன்றினை யொன்றடித் தொக்கலித்துப், பப்பிணையிட்டுப் பரண்டைபாடப பாடிருந்தந்தரி யாழமைப்ப, வப்பனையணிதிரு வாலங்காட்டுளடிகளைச் செடிதலை க்காரைக்காற்பேய், செப்பியசெந்தமிழ்பத்தும வல்லார்சிவகெதி சேர்ந்தின்ப மெய்துவரே. திருச்சிற்றம்பலம். (௧௧)

தேவாரம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைசூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்கவவப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோலவிழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனாடுமே. (௧)
நிணந்தானுருகிநிலந்தானனைப்பநெடும்பற்குழிகட்பேய்
சுணங்கையெறிந்துசூழநோக்கிச்சுடரால்விதித்தெங்கும
கணங்கள்கூடிப்பிணங்கண்மாந்திக்களித்தமனத்தவா
யணங்குகாட்டிலனலகையேந்தியழகனாடுமே. (௨)
புட்கள்பொதுத்தபுலாலவெண்டலையைப்புரமேனரிகவ்வ
வட்கென்றழைப்பவாங்கைநீசவருகேசிறுகூகை
யுட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிகதித்தெங்கும்
பிடகநக்கம்பேணுமிறைவன்பெயருமபெருங்காடே. (௩)
செத்தப்பிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுறுமிக்கனலவிட்டெறிந்துகடக்கப்பாய்ந்துபோய்ப்
பத்தல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானாடுமே. (௪)
முள்ளிதீந்துமுளரிகருகிமூளைசொரிந்துக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெ [illegible] வெள்ளை
புள்ளியிரைமான்றோலொன்றுடுத்துய [illegible] ல்பியற்கிட்டு
பள்ளியிடமுமதுவேயாகப்பரமனாடுங்கா [illegible]
வாகைக்கிளரவனைவாளெயிற்றுவணக்கிரிந் [illegible]
மூளைத்தலையும்பிணமும்விழுங்கிமுரணூரா [illegible]
ரளிமானியிலைபோன்மயிர்க்கட்டழல்றுப் [illegible]
கூளிக்கணங்கள்குழலோடியம்பக்குழ [illegible]

நொந்திக்கிடந்தசுடலைத்தடவிநுகரும்புழுக்கின்றிச்
சிந்தித்திருந்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
முந்திமுழவமவிழவிளைசைமுறைமைவழுவாமே
யந்திநிருத்தமனல்கையேந்தியழகனாடுமே. (௭)

வேய்களோங்கிவெண்முத்துதிரவெடிகொள்சுடலையுள்
ஓயுமுருவிலுலறுகூந்தலலறுபகுவாய்ப்
பேய்கள்கூடிப்பிணங்கள்மாந்தியணங்குபெருங்காட்டின்
மாயனாடமலையான்மகளுமருண்டுநோக்குமே. (௮)

கடுவனுகளுங்கழைசூழ்பொதும்பிற்கழுதும்பேயுமா
யிடுவெண்டலையுமீமப்புகையுமெரிந்தபெருங்காட்டிற் [டப்
கொடுவெண்மழுவும்பிறையுந்ததும்பக்கொள்ளென் றிசைபா
படுவெண்டுடியும்பறையுங்கறங்கப்பரமனாடுமே. (௯)

குண்டைவயிற்றுக்குறியசிறியநெடியபிறங்கற்பேய்
இண்டைபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
கொண்டுகுழவிதடவிவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டிமிளிர்ந்தசடைகடாழவிமலனாடுமே. (௧௦)

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழல்வார்திருநட்ட
மாடுமரவப்பணியிலாததவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இங்ஙனம் திருவாய்மலர்ந்தருளிய நமது புநிதவதியார் என்னும் காரைக்காலம்மையார் ஆனந்தநடராஜப்பெருமானுடைய திருவருட்குஞ்சிதபாதத்தின்கீழே எக்காலமும் சிவானந்தம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார். சுபம்! சுபம்!!


காரைக்காலம்மையார் முத்தி அடைந்த நாள்:—

பங்குனிமாதம் - சுவாதிநக்ஷத்திரம்.

காரைக்காலம்மையார்

திவ்விய சரித்திரம்

முற்றிற்று.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆளுடையபிள்ளையாரென்னும்

திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவெழுக்கூற்றிருக்கை.

சிவஞானரூபம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருருவாயினை மானாங்காரத் - தீரியல்பாயொரு விண்முதல்பூதல
மொன்றியவிருசுட ரும்பர்கள்பிறவும்-படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திக
ளாயினை-யிருவரோடொருவ னாகிநின்றனை - யோராநீழ லொண்கழலிர
ண்டு-முப்பொழுதேத்திய நால்வர்க்கொளிநெறி - காட்டினைநாட்ட மூன்
றாகக்கோட்டினை-யிருநதியரவமோ டொருமதிசூடினை-யொருதா ளீரயின
மூவிலைச்சூல-நாற்கானமான்மறி யைந்தலையரவ - மேந்தினை காய்ந்தநால்
வாய்மும்மதத்-திருகோட்டொருகரி யீடழித்துரித்தனை - யொருதனுவிரு
